136.
135.

மினு மஸானி

4698

இதுவா சோஷலிஸம்?

PRESENTED BY:
V. PR. PL. M.
[redacted] ANATHAN CHETTIAR
PAGANERI.

சக்தி

சக்தி நூல்கள்

- **CAPITALISM, SOCIALISM OR VILLAGISM?** (In Print)

  An authoritative and incisive exposition, convincing in appeal, conclusive in argument (with a foreword by Ghandiji) — *Bharatan Kumarappa*

  மேற்படி நூலின் தமிழ் மொழிபெயர்ப்பும் தயாராகி வருகிறது

- *மினு மஸானிக்கு சோஷலிஸ்டின் பதில்* (அச்சில்)

  மாஸானியின் "இதுவா சோஷலிஸம்?" என்ற புத்தகத்துக்கு எம். ஜி. தேசாயின் பதில்

  மொழிபெயர்ப்பு: ஆர். ராமநாதன்

- *அரேபியாவின் அதிபதி* — 0–12

  அரேபியாவையும், அதனை உருவாக்கிய இபுனு-சுஊத் அவர்களையும் பற்றிய அரிய வரலாறு

  — மு. ரு. மு. அப்துறஹீம்

- *நான்மணிக்கடிகை* — வையாபுரிப் பிள்ளை — 1–4

  மூலமும் உரையும்

- *இன்னா நாற்பது* .. 0–10

  மூலமும் உரையும்

- *உலக நிலை* (ராப்பர்) — ராஜாஜி — 1–8

- *நிழலருமை வெய்யிலிலே* — மு. அருணாசலம் — 1–4

- *திருமலை முருகன் பள்ளு* (ராப்பர்) .. 2–0

இலக்கியம், அரசியல், பொருளியல் குறித்த எங்கள் இதர நூல்களுக்குத் தனிப் பட்டியலுக்கு எழுதுங்கள்

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை ▪ வடக்கு வெளி வீதி ▪ வெரைட்டி ஹால் ரோடு ▪ ஹைரோடு

சென்னை ▪ மதுரை ▪ கோயமுத்தூர் ▪ திருநெல்வேலி

இதுவா சோஷலிஸம்?

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISVANATHAN CHETTIAR
PAGANERI.

ஆசிரியர்:

மினு மஸானி

தமிழாக்கியவர்:

கே. அருணாசலம்

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

சக்தி காரியாலயம்

சென்னை : மதுரை : கோயமுத்தூர்
திருநெல்வேலி

முதல் பதிப்பு : நவம்பர் 1945
உரிமை பதிவு செய்யப்பெற்றது

விலை

ரூபாய் ஒன்று

Printed by Shakti Press Ltd., P. I. C. No. MS. 23
for Shakti Karyalayam, P. I. C. No. MS. 202
22-11-45 — 750 Copies

இரண்டாம் பதிப்புக்கு முகவுரை

இந்தச் சிறு புஸ்தகத்தின் முதல் பதிப்புக்கு நான் எதிர் பார்த்ததைவிட அதிக ஆதரவும் சந்தோஷமான வரவேற்பும் கிடைத்திருக்கின்றன. பழைய சுவட்டில் போகாமல், ஆட்சேபங் கள் பலவற்றை நான் தெரிவித்திருந்ததால், இவ்வளவு நல்ல வரவேற்புக் கிடைக்குமென்று எதிர்பார்க்க நான் துணியவில்லே. பத்திரிகை விமர்சனங்கள், எனக்குக் கிடைத்துள்ள பாராட்டுக் கடிதங்கள், பல்வேறு இந்திய பாஷைகளில் மொழிபெயர்க்க அனு மதிக்குமாறு பலரிடமிருந்து வந்துள்ள வேண்டுகோள்கள், மேலும் மேலும் பிரதிகளுக்காக வந்துள்ள ஆர்டர்கள் ஆகியவற்றையெல் லாம் கவனிக்குங்கால், வைதீக சோஷலிஸம், வைதீக முதலாளித் துவம் ஆகிய இரண்டினிடமிருந்தும் விலகி விலகிச் செல்லும் சிந் தனேயாளர்களுடைய அத்தியாவசியத் தேவையை இதுவா சோஷலிஸம்? என்ற இப் புத்தகம் பூர்த்தி செய்திருப்பதாகவே தோன்றுகிறது.

நாளுக்கு நாள் அதிக முக்கியத்துவம் பெற்றுவரும் பிரச்னே களேப் பற்றிய விவாதத்தைத் தூண்டும் நோக்கத்துடனேயே இப் புஸ்தகம் எழுதப்பட்டது. அந்த நோக்கம் ஓரளவுக்குக் கைகூடி யிருக்கிறதென்றும் உரிமை கொண்டாட இடமிருக்கிறது. அப்படி நடந்த விவாதத்தின்போது, புஸ்தகத்தின் இரண்டாவது பகுதியில் உள்ள யோசனேகள் போதிய அளவுக்கு இல்லே, பூர்ணமாக இல்லே என்று சிலர் புகார் செய்திருக்கிறுர்கள். அதற்கு இரண்டு பதில்கள் சொல்லலாம். முதலாவதாக, வைதீக சோஷ லிஸத்திற்குப் பதிலாக வேறே ஒரு பரிபூர்ண தத்துவத்தை எந்த ஒரு தனி நபரும் கொண்டுவர முடியுமென எதிர்பார்ப்பதற்கில்லே. அப்படி ஒரு தத்துவத்தைச் சொல்லவும் நான் முனேயவில்லே. இரண்டாவதாக, இதுவா சோஷலிஸம்? என்ற புத்தகம், 55 பக்கங்கள் (ஆங்கிலத்தில்) கொண்ட ஒரு வியாஸம்தான். எனவே, குணதோஷங் கூறுகிறவர்களுடைய கேள்விகள் அனேத்துக்கும் இந்தச் சிறிய புஸ்தகத்தில் பதில் தருவது சாத்தியமில்லே.

இந்தப் புஸ்தகத்தைப் பற்றி நடந்த விவாதத்தில், இரண்டொரு தப்பபிப்பிராயங்கள் நிலவுவது தெரியவந்திருக்கிறது. இவற்றுள், காந்திஜியின் 'தர்மகர்த்தா' தத்துவத்தை நான் ஏற்றுக்கொண்டு விட்டேன் என்பது ஒன்று. சொத்துக்களைத் தேசிய மயமாக்கும் முறைக்குப் பதிலாகத் தர்மகர்த்தா முறையை ஏற்றுக்கொள்ளுவ தற்கில்லை; ஆனால், இடைக்காலத்தில் தற்காலிகமாக உபயோகித் துக் கொள்ளத் தர்மகர்த்தா முறை பயன்படலாம் என்றே ஸ்பஷ்ட மாகச் சொல்லியிருக்கிறேன். மற்றொரு தப்பபிப்பிராயம் என்ன வென்றால், ஒரு சிலர் சேர்ந்துகொண்டு, தாம் நிபுணராகையால், தமக்கு ஆளும் தகுதி உண்டென்று சொல்லிக் கொண்டு செய்யும் மானேஜரியல்* புரட்சிக்குச் சாதகமாக பர்ன்ஹாம் கூறும் கொள்கையை நான் ஒப்புக்கொண்டேன் என்பதுதான். இது, வீண் தப்பர்த்தம் மட்டுமல்ல; அனர்த்தந்தான். பார்க்கப் போனால், பர்ன்ஹாமே மானேஜரியல் சர்க்காரை ஆதரிக்க வில்லை. அப்பேர்ப்பட்ட சர்க்கார் தோன்றிவிடக்கூடும் என்றே அவர் எச்சரிக்கிறார். இன்னவை தோன்றக் கூடும் என்று அவர் அபிப்பிராயப்படுவதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். அப் படி நான் ஏற்பதற்குக் காரணமென்னவென்றால், இந்தியாவேனும் இந்த மானேஜரியல் புரட்சியைக் குருட்டாம் போக்கில் பின் பற்றிவிடாமல் தப்பவேண்டுமென்பதே. அதற்காகத்தான் கா தீயத்தை ஆராயுமாறு நான் யோசனை கூறியிருக்கிறேன். அதில் மானேஜரியல் புரட்சியிலிருந்து தப்ப வழி இருக்கக்கூடுமென கூறியிருக்கிறேன். சர்வாதிகாரத்தை நான் எதிர்ப்பதால்தான் இன்றைய ருஷ்யாவை சோஷலிஸ வல்லரசாக அங்கீகரிக்க மறுக்கிறேன்.

முதல் பதிப்பு பிரசுரமானதும், புரபஸர் எம். எல். டான்ட் வாலாவின் காந்தீயம் புனராலோசனை என்ற புஸ்தகம் வெளியாகி யிருக்கிறது. ஆலோசித்துப் பார்க்கும்படி நான் சிபார்சு செய் சிந்தனை வழியை அந்தப் புஸ்தகம் ஆதரித்து வலியுறுத்தியுள்ளது.

* நாட்டு நிர்வாகத்தை நடத்தும் ஏதேச்சாதிகாரிகளிடமும் தொழி சாலைகளை நடத்தும் மானேஜர்களிடமும் சர்க்கார் அதிகாரம் இருந்தால் அப்பேர் பட்ட சர்க்கார் மானேஜரியல் சர்க்கார் எனறும், அதைப் போன்ற சர்க்கார் ஸ்தாபிக்க நடந்த புரட்சி மானேஜரியல் புரட்சி என்றும் அழைக்கப்படுகின்றன.

வேறு இரண்டு புஸ்தகங்களும்—எனது புஸ்தகத்திற்குப் பதில்கள் என்று கூறிக்கொண்டு—வெளிவந்தன. இரண்டும் பொதுவுடைமை வட்டாரங்களிலிருந்து தலை தூக்கியவை. ஆனால், அவற்றைப் பொதுவுடைமைக்காரர்களே கொண்டுவருகிறார்கள் என்பது தெரியாமல் உரு மயக்கம் ஏற்படுவதற்காக அவற்றை எழுதிய பொதுவுடைமைக்காரர்கள் 'சோஷலிஸ்டுகளா'க ஆய் விட்டார்கள். 'தோழர்கள்' 'ஸ்ரீமான்கள்' ஆனார்கள்! இது அவர்களுடைய வழக்கத்தை யொட்டிய செய்கை. ஒருவர், நான் எனது உண்மை சொரூபத்தைக் காண்பித்து விட்டதாகச் சொல்லுகிறார்; இன்னொருவர், யாராவது பதில் எழுதட்டுமே என்று நான் இந்தப் புஸ்தகத்தை எழுதியதாகக் கூறுகிறார். என்ன சுவாரஸ்யமான முரண்பாடுகள்! இரண்டு பதில்களிலும் அடிப்படையில் கோளாறு காணப்படுகிறது. அதாவது, கம்யூனிஸ்டுகள் வெறும் தூஷணையை வாதம் என்று தவறாக நினைக்கும் வழக்கத்தில் ஆழ்ந்திருப்பதால், எது தூஷணை, எது தர்க்கம் என்று வித்தியாசம் அறிந்து கொள்ளும் சக்தியை இழந்துவிட்டார்கள். அந்த வழக்கத்தை அவர்கள் தவிர்க்கமுடியாது போலும். காரணம், அவர்கள் வாதம் ஆதாரமற்றது. அதனால்தான், இம்மாதிரியான எல்லையற்ற தூஷணையில் வழக்கம்போல் இறங்கிவிடுகிறார்கள். என்னைப் பாஸிஸ்ட் என்றும், டிராட்ஸ்கியிஸ்ட் என்றும், முதலாளிகளின் ஏஜண்ட் என்றும் ஒரே மூச்சில் குற்றஞ் சாட்டுகிறார்கள். காலஞ் சென்ற கேப்ரியல் டி அன்னன்ஸியோ ஒரு சமயத்தில் பின் வருமாறு ஆட்சேபித்தார்: "நான்கூட ஏக காலத்தில் இரண்டு இடங்களில் இருக்க முடியாது"! நானும் அவரைப்போல விநயமாக ஆட்சேபிக்கிறேன்: டிராட்ஸ்கியிஸ்டாகவும், முதலாளி ஏஜண்டாகவும், பாஸிஸ்டாகவும் ஏககாலத்தில் இருக்க என்னால்கூட முடியாது தான்! கம்யூனிஸ்ட் 'பதில்களை' இதைவிடப் பூர்ணமாகக் கவனிக்கவேண்டிய அவசியமில்லை. அவர்களுடைய கோலாகல நாட்கள், சென்றகாலத்தைச் சேர்ந்தவை. அவர்களுடைய சமாதிக் கல்லில் பொறிப்பதற்குப் பொருத்தமாக 1942 ஆகஸ்ட் 9-ந் தேதி "ஹரிஜன்" இதழில் மகாதேவ தேசாய் தமது கடைசிக்காலத்தில் எழுதிய வார்த்தைகளை விடச் சிறந்தனவாக வேறு எவற்றையும் தயாரிக்கமுடியாது. தேசாயின் அந்த வார்த்தைகள் பின்வருவன:

"கம்யூனிஸ்டுகள் தங்களுடைய விடுதலையைச் சம்பாதித்துக் கொண்டது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். யுத்த முயற்சிக்கு ஆதரவு என்ற விலையை அவர்கள் கொடுக்காவிட்டால்கூட, விடுதலைபெற அவர்கள் அருகதையுடையவர்களே. ஆனால், அவர்கள் இந்தியாவின் விடுதலையைப் பெற்றுவிட்டார்களா? அவர்கள் தங்கள் தாய் நாட்டின் விடுதலைக்குத் துரோகம் செய்ததோடல்லாமல், தங்கள் சொந்தக் கொள்கைகளையுங் கூட உதறி எறிந்து விட்டார்கள்."

தனது சொந்த நாட்டில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஒரு உடன்பாட்டுக்கு வரப் பல வருஷங்களாக முயற்சிசெய்து, பலன் கிடைக்காமற்போன புரபஸர் ஹெரால்டு ஜே. லாஸ்கி கூட "மார்க்ஸும் இந்தக் காலமும்" என்ற தமது புஸ்தகத்தில் பின்வருமாறு எழுதுவதைத் தவிர அவருக்கு வேறு வழியில்லாது போய்விட்டது:

> கம்யூனிஸ்ட் கட்சியானது இங்கும், எங்கும் தவறுகளே செய்துள்ளது. அது கையாண்ட பசப்புக் கொள்கைகள் பல உண்டு. சதியாலோசனை செய்வதில் அதற்கு ஒரு தனிப் பித்து. தனிநபர்களைத் தூஷிப்பதில் ஒரு மோகவெறி. உண்மையை உபயோகிப்பதிலோ நிரம்பச் சிக்கனம்.

என் புஸ்தகத்திற்கு அக்கறையுடன் பதிலளிக்க முயன்றவர் ஒரே ஒருவர் என்றே சொல்லவேண்டும். அவர், ஒரு வாரப் பத்திரிகையில் தம் கருத்துக்களைத் தெரிவித்தார். அவர் ஒரு புரபஸர்; மிக நன்றாய்ப் படித்தவர்; "வெட்டு ஒன்று, துண்டு இரண்டு" என்று திறமையாக எழுதக்கூடியவர். அவர், கட்சியில் மெம்பராக இல்லாமல், 'சகா பிரயாணி' யாக (அனுதாபியாக) இருப்பதால், நூற்றுக்கு நூறு பங்கு கம்யூனிஸ்டுகளாயுள்ளவர்கள் இழந்துவிட்ட அடக்கத்துடனும், சாதுர்யத்துடனும் எழுதியிருக்கிறார். இந்நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் சகா பிரயாணிகளாகவுள்ள அறிவாளிகள் கையாளும் இயல்பான வாதப்போக்குக்கு அவருடைய விமர்சனம் ஒரு எடுத்துக்காட்டாக விளங்குவதால், அந்த விமர்

சனத்தைக் குறித்து ஓரளவுக்குச் சொல்ல விரும்புகிறேன். கற்றறிந்த புரப்ஸர், விஷயத்தை எந்த நோக்கில் அணுகுகிறார் என்பது குறித்து யாருக்காவது சந்தேகமிருக்குமானால், அவர்கள் "பீபிள்ஸ் வார்" பத்திரிகையின் 1944-ம் வருஷ ஜூலை 29-ந்தேதி இதழைப் பார்த்துத் தமது சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளலாம். தேசிய லட்சியத்தைத் தகர்ப்பதில் பிரக்யாதி பெற்றுள்ள அந்தப் பத்திரிகையின் பிரஸ்தாப இதழில் வெளியாகியுள்ள புரபஸரின் பாராட்டுச் செய்தியில், "பீபிள்ஸ் வார் பத்திரிகையானது இந்தியாவின் சிறந்த தேசிய சிந்தனையின் பிரதிபிம்பமாக விளங்குகிறது" என்ற அதிசயமான கூற்றுக் காணப்படுகிறது!

எனக்கு வேண்டிய உண்மைகளை மாத்திரம் நான் பொறுக்கியெடுத்துக்கொண்டதாகவும், கம்யூனிஸத்தின் பகிரங்க விரோதிகள் சொல்லியவற்றிலிருந்தே அந்த உண்மைகளை எடுத்துக்கொண்டதாகவும் இந்த விமர்சகர் என்மீது குற்றஞ் சாட்டுகிறார். இந்தப் புகாரில் உண்மையிருக்கிறதாவென்று கவனிப்போம். கூடுமான வரையில், முதலாளிகள், பாஸிஸ்டுகள், எல்லாவிதமான சோஷலிஸ்ட் எதிர்ப்பாளர்கள் ஆகியவர்களுடைய அத்தாட்சிகளைக் கையாளாதிருக்க நான் முயன்றிருக்கிறேன். சோவியத் ருஷ்யாவை நான் கண்டித்திருக்கிறேனென்றால், அந்தக் கண்டனத்திற்கு சோஷலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் ஆகியவர்களுடைய வாய்மொழிகளையே ஆதாரமாகக்கொண்டிருக்கிறேன். நான் யார் யாருடைய மேற்கோள்களைக் காண்பித்திருக்கிறேனோ, அவர்கள் எல்லாரும்—மாக்ஸ் ஈஸ்ட்மன், லூயி பிஷர், யூஜன் லயான்ஸ், ஆந்திரே கைட், ஆர்தர் கோஸ்ட்லர், பிரடா அட்லி முதலியோர்—தடுமாற்றமில்லாத சோஷலிஸ்டுகள். அவர்களில் சிலர் கம்யூனிஸ்டுக் கட்சியில் மெம்பர்களாயிருந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் முன்பு சோவியத் புரட்சிக்கு ஆர்வமான நண்பர்கள். அந்தப் புரட்சியைப் போற்றிப் புகழ்ந்தவர்கள். ஸ்டாலினுக்கும், இன்றைய ருஷ்யாவுக்கும் கிடைத்துள்ள வீரதீர நண்ட்ரான சர்ச்சிலைப் போன்றவர்கள் சொல்லியதையே மேற்கோள் காண்பிக்க விருப்பமிருக்குமாகில், எனக்கு ஆட்சேபமில்லை. மிக மகிழ்ச்சியுடன் எடுத்துக் காட்டுகிறேன். பிரிட்டிஷ்

பிரதம மந்திரி சர்ச்சில் 1944 மே மாதம் 24-ம் தேதி காமன்ஸ் சபையில் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

"சோவியத் ருஷ்யாவில் ஆழ்ந்த மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. டிராட்ஸ்கியிஸ்ட் மோஸ்தர் கம்யூனிஸம் பரிபூர்ணமாக ஒழிக்கப்பட்டிருக்கிறது... ருஷ்ய வாழ்க்கையின் மத அம்சம் அற்புத புனர்ஜென்ம மெடுத்திருக்கிறது. ருஷ்யச் சேனையின் கட்டுப்பாடும் ராணுவ ஒழுங்கு முறையும் வேறு எவராலும் மீறமுடியாதவை. புதிய தேசியகீதம் இருக்கிறது. இதன் ஸ்வரக் குறிப்பை மார்ஷல் ஸ்டாலின் எனக்கு அனுப்பினர். அடிக்கடி அந்தக் கீதத்தை பிரிட்டிஷ் ரேடியோவில் ஒலிபரப்புமாறு பி. பி. சி. யிடம் (பிரிட்டிஷ் பிராட்காஸ்டிங் கம்பெனியிடம்) சொன்னேன்...... கம்யூனிஸ்ட் அகிலத்திற்குச் (comintern) சீட்டுக் கொடுக்கப்பட்டு விட்டது......சில வருஷங்களுக்கு முன்பு மேற்கொள்ளப்பட்டிருந்த கருத்துக்களில் சில அடியோடு கைவிடப்பட்டிருப்பதை இவை நிரூபிக்கின்றன. (டோரிக் கட்சி மெம்பர்கள் கரகோஷம்)."

"நமது புஸ்தகாசிரியர் (மஸானி) ஸ்ரீ. ஈஸ்ட்மெனைவிட ஹாஸியன் லாரட்டைத் தமக்கு நல்ல வழிகாட்டியாகக்கொண்டிருக்கலாம்" என்று அந்தப் புரபஸர் (விமர்சகர்) அன்புகூர்ந்து யோசனை கூறினர். சரி; மார்க்ஸ், மார்க்ஸிஸ நிபுணர்கள் ஆகியவர்களுடைய இலக்கியங்களுக்கு விமர்சன விளக்கம் எழுதியுள்ள மகாதிறமைசாலிகளில் ஹாஸியன் லாரட்டும் ஒருவர்; அவர் எழுதியுள்ள மார்க்ஸிஸமும் ஜனநாயகமும் என்ற புஸ்தகத்தைப் படித்து அறிந்து கொள்ளலாம்; அவசியமானல் என்கருத்தை மாற்றிக்கொள்ளலாம் என்ற ஆர்வத்துடன் அந்தப் புஸ்தகத்தை வாசித்தேன். ஆனல், அந்தோ, பரிதாபம்! என் புஸ்தகத்தின் முதல் பகுதியில் காணப்படும் வாதத்தை லாரட் பரிபூர்ணமாக அங்கீகரிக்கிறர்; விமர்சகர் (புரபஸர்) சொன்னதையெல்லாம் அப்படியே மறுக்கிறர். மார்க்ஸிஸமும் ஜனநாயகமும் என்ற புஸ்தகத்திலிருந்து ஒரு பகுதியைக் கீழே தருகிறேன். நான் உபயோ

இக்கத் தயங்கிய காரமான வார்த்தைகளில் ருஷ்யாவை அவர் வர்ணித்திருப்பதைக் காண்க:

"ருஷ்யப் பொருளாதார முறையை 'ராஜாங்க முதலாளித்துவம்' என்று அடிக்கடி அழைத்த போதிலும் கார்ல் கார்ட்ஸ்கி கையாளும் 'ராஜாங்க அடிமை' என்ற பதமே மிகவும் பொருத்தமான பெயராக நமக்குத் தோன்றுகிற போதிலும், இப்போதைய ருஷ்ய ஆட்சியானது அடிமை, பண்ணை அடிமை அல்லது முதலாளித்துவ முறையுடையதாக நாம் அபிப்பிராயப்படவில்லை; அந்த மூன்றும் கொஞ்சம் கொஞ்சம் கலந்துள்ளனவாகவே நாம் கருதுகிறோம். தொழிலாளருடைய சுதந்தரத்தை யெல்லாம் ஒடுக்கி விடுவதால், அந்த ஆட்சிமுறைக்கும் அடிமை, பண்ணை அடிமை முறைகளுக்கும் சம்பந்தமிருக்கிறது. தொழிலாளர் தங்கள் வீடுகளுக்குச் செல்லவும், வாசஸ்தலத்திலிருந்து வேலை ஸ்தலத்திற்குச் செல்லவும் பாஸ்போர்ட்டுகள் ஒரு கட்டாய, நிர்ப்பந்த அனுமதிச் சீட்டுகளாக இருந்து வருகின்றன. அதாவது, பண்ணை அடிமை நிலத்திற்குப்போக வேண்டியதுபோல. அனேக பொருளாதார ரகங்களும், சட்ட ஒழுங்குகளும் பாதுகாக்கப் படுவனவால், இந்த (ருஷ்ய) ஆட்சி முறைக்கும் முதலாளித்துவத்திற்கும் சம்பந்தமிருக்கிறது. எனினும், மேலே கூறப்பட்ட மூன்று முறைகளுக்கும் இந்த முறைக்கும் அடிப்படையில் வேறுபாடுண்டு."

நான் கூறிய வற்றில் மிகவும் முக்கியமான மூன்று உண்மைகளைப்பற்றி என்னைத் திருத்த அந்த விமர்சகர் முயன்றிருக்கிறார். அவை, ராஜீய ஜனநாயகமின்மை, தொழிலாளருக்கு ஆதிக்க அதிகாரமின்மை, பொருளாதார வேற்றுமைகள் அதிகரிப்பு என்ற மூன்றுமே. 1936-ம் வருஷ அரசியல் திட்டம் முடிவாக ஏற்கப்படு முன், வயலிலும் தொழிற்சாலையிலும் நடந்த ஒரு லட்சம் ஆரம்பக் கூட்டங்களில் விவாதிக்கப் பட்டதை நான் பிரஸ்தாபிக்காதது அநியாயம் என்று புகார் சொல்லுகிறார்கள். கற்றறிந்த புரபஸருக்கு அந்த விவாதமானது ஜனநாயகத்திற்கு அத்தாட்சியாகத் தோன்றுகிறது. அதிகாரத்திலுள்ள ஒரே ராஜீயக் கட்சியைத்

தவிர வேறு எந்த ராஜீயக் கட்சியும் அப்போது அனுமதிக்கப்படவில்லை, இப்போதும் அனுமதிக்கப்படவில்லை. அந்த லட்சம் கூட்டங்களில், ஒன்றிலாவது அரசியல் திட்டம் நிராகரிக்கப்படவில்லை, திருத்தப்படவுமில்லை. ஸ்டாலினின் ஆட்சியைப் பிரமாதமாகப் போற்றவே அந்தப் பிரசாரக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. படித்த புரபஸருக்கு இவையெல்லாம் அனாவசிய விவரங்களாகத் தோன்றுகின்றன. எத்தனை கூட்டங்கள் நடந்தன என்பது முக்கியமல்ல. அவை சுயேச்சையாக நடந்தனவா? தங்கு தடங்கலின்றி விவாதம் நடந்ததா? கம்யூனிஸ்டுகளுக்குக் கட்டோடு பிடித்தமில்லாத அம்சமான எதிர்ப்பும் அங்கே சாத்தியமா?—என்பதே கேள்வி.

தொழிலாளருக்கு ஆதிக்க அதிகாரமே இல்லை யென்ற என் குற்றச்சாட்டுக்கு, "கைத்தொழில் டிரஸ்டுகளின் டைரக்டர்கள், தொழிற் சாலைகளில் உற்பத்திக் கமிட்டிகளின் இஷ்டப்படிதான் நடந்துகொள்ள வேண்டும். அந்தக் கமிட்டிகளின் பேச்சே எடுபடும்" என்று பதிலளிக்கப் பார்க்கிறார். இந்த விஷயத்தில், புரபஸர் ஏதோ பழம் பசலிக் கதையைச் சொல்லுகிறார் என்றே எனக்குப் படுகிறது. பல வருஷங்களுக்கு முன்பு தொழிற்சாலைக் கமிட்டிகள் இருந்தது உண்மையே. அவை நிரம்பத் 'தொல்லை' கொடுத்ததால், கம்யூனிஸ்டு டைரக்டர்களுடன் அவையும் ஒழிக்கப்பட்டன. இப்பொழுது, ருஷ்யத் தொழிற் சங்கங்கள், ஜெர்மனியின் டாக்டர் லேயின் தொழிலாளர் முன்னணி போலவே இருக்கின்றன. உற்பத்தியைத் துரிதப்படுத்தும் கருவிகளாக இருப்பதே அவற்றின் ஒரே நோக்கமாகும்.

ருஷ்யாவில் பழையபடி பொருளாதார வேற்றுமைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன என்று நான் சுட்டிக் காண்பித்திருப்பதையும், ஸ்டக்கானேவிஸ்ட் * இயக்கத்தை (Stakhanovist movement) நான் பிரஸ்தாபித்திருப்பதையும் புரபஸர் ஆட்சேபிக்கி

* உற்பத்தியை அதிகரிக்க ஆரம்பிக்கப்பட்ட இயக்கம். தொழிற்சாலைகளில் சாதாரணத் தொழிலாளர்களை விட அதிகமாக உற்பத்தி செய்கிறவர்களுக்கு (ஸ்டக்கானேவிஸ்டுகளுக்கு) விசேஷச் சலுகைகளும், அதிக ஊதியமும் அளிக்கப்பட்டன.

ஞர். தமது 4,500 வார்த்தைகள் கொண்ட விமர்சனத்தில் ஸ்டக்கா னேவிஸம் பற்றி விவாதிக்க இடமில்லை என்ற சால்ஜாப்பில் கசப்பாய்ப் போய்க்கொண்டிருக்கும் விரும்பத்தகாத விஷயம் முற்றிவிடாதபடி அதைத் தட்டிக்கழித்து விடுகிருர் விமர்சகர். எனது வாதத்தை மறுப்பதாக நினைத்துக்கொண்டு ருஷ்ய வரு மானங்கள் பற்றிய புள்ளி விவரங்களையும் அவர் சமர்ப்பிக்கிருர். பார்க்கப்போனுல், அவர் என்னுடைய வாதத்திற்கு மேற்கொண்டு ஆதாரம் கொடுப்பதைத் தெரிந்து கொள்ளலாம். 1942-ம் வரு ஏப்ரல் மாத "ஜர்னல் ஆப் இகானமி" இதழில் ஸ்ரீ. பெர்க்ஸன் எழுதிய கட்டுரையை விமர்சகர் மேற்கோள் காண்பித்து, 1934-ல் ஏற்பட்ட கூலி சம்பாத்ய விஸ்தரிப்பு இதர நாடுகளில் காணப் பட்ட அளவு விரிவாக ருஷ்யாவிலும் காணப்பட்டது என்கிருர். இதையேதான் நான் சொன்னேன்.

சர்க்கார்க் கடன் பத்திரங்களுக்கு 7% வட்டியுண்டு என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே; ஆனல், ஸ்ரீ. வெண்டல் வில்கி எழுதிய "ஒரே உலகம்" என்ற புஸ்தகத்தில் வட்டியில்லாக் கடன் பத்திரங்கள் வெளியிடப்பட்டனவாகக் காணப்படுகிறதே, என்று பலர் என்னைக் கடித மூலம் கேட்டிருக்கிருர்கள். வட்டி யில்லாத விசேஷக் கடன் பத்திரங்களையே ஸ்ரீ. வில்கி பிரஸ்தாபித் திருக்கவேண்டுமென்று நான் யூகிக்கிறேன். யுத்தம் ஆரம்ப மானவுடன், சர்க்காரின் கடன் பத்திரங்களில் சாதாரணமாகப் பணம் போடுவதற்கு 7% வட்டி யுண்டு என்ற உண்மையை மறுப்பதற்கே இல்லை. அந்த உண்மைக்குப் பலருடைய புஸ்தகங் களில் உள்ளதை நான் மேற்கோள் காண்பிக்கமுடியும். "சோவி யத் கம்யூனிஸ"த்தின் மாபெரும் தூண்களெனக் கருதப்படும் ஸிட்னி வெப்பும், பீட்ரிஸ் வெப்பும் 'சர்க்கார் சேவிங்ஸ் பாங்கி களில் இரண்டரைக் கோடிப்பேர்கள் பணம் போட்டு வைத்திருக் கிருர்கள்' '8% வட்டி; வருமானவரி, சொத்து வாரிசு வரி, பல் வேறு ஸ்டாம்புக் கட்டணங்கள் ஆகியவற்றிலிருந்து பரிபூர்ண விதி விலக்கு ஆகியவற்ருல் அவர்களுக்கு ஊக்கமளிக்கப் பட்டிருக் கிறது' என்று பிரஸ்தாபிக்கிருர்கள்.

பல வருஷங்களாகவே ருஷ்யாவில் உண்மைகளும் மார்க்ஸீ யத் தத்துவங்களும் திரித்துக் கூறப்பட்டு வருகின்றன. எனவே,

இந்தப் போக்கை யொட்டியே, கம்யூனிஸத்தில் "தேவைக்குத் தகுந்தாற்போலவே ஒவ்வொருவருக்கும் வருமானம்" என்றும்; சோஷலிஸத்தில் "செய்யும் வேலைக்குத் தகுந்தாற்போலவே ஒவ்வொருவருக்கும் வருமானம்" என்றும் கூறப்படுகின்றன. இந்த உரைகல் பிரகாரம், ருஷ்யாவில் சோஷலிஸம் ஸ்தாபிதமாகி விட்டது என்று உரிமை கொண்டாடப்படுகிறது. சோஷலிஸத்திற்குக் கொடுக்கப்படும் இந்த வியாக்கியானம் சோஷலிஸத் தத்துவத்தையே கேலிக் கூத்தாக்குவதாகும்; இது, இப்போது நம் கண் முன்பு காண்கிறவைகளுக்கு அனுசரணையாகத் தத்துவத்தைச் சரிப்படுத்தச் செய்யப்படும் முயற்சியேயாகும். செய்யும் வேலைக்குத் தக்கபடி வருமானம் என்ற 'சாதாரணச் சாதனை'யைக் கூட இன்று ருஷ்யாவில் நிரூபிக்கமுடியாது. வேலைக்குத் தக்கபடி வருமானங்கள் இல்லை, என்பது ஸ்ரீ. எரிக் ஸ்டிராஸின் "சோவியத் ருஷ்யா" என்ற புஸ்தகத்தில் காணப்படும் கீழ்க்காணும் வாக்கியங்களிலிருந்து தெளிவாகிறது :

"பிரபல ஸ்டக்கானேவிஸ்டுகள் மாதத்திற்கு 800, 1,000, 1,200 ரூபிளும் இதற்குமேலும் சம்பளம் பெறுவது அசாதாரணமல்ல. நிரம்பச் சகஜம். 'தொழில் வீரர்கள்' சோவியத் பத்திரிகைகளுக்குத் தரும் பேட்டிகளில் மோட்டார் சைகில்கள், மோட்டார்கள், ரேடியோ செட்டுகள், கிராமபோன்கள், நடனம் அல்லது அந்நிய பாஷைகளில் தனியாகப் பயிற்சி பெறுவது, மற்றும் அவர்கள் இப்பொழுது அனுபவிக்க முடிகிற பல விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறார்கள். இந்தச் சம்பள முறையானது, 'வேலைக்குத் தக்க சம்பளம்' என்ற சோஷலிஸக் கொள்கை வியாக்கியானத்திற்கு முரண்பாடாக இருக்கிறதென்பது தெளிவு. இந்த வேலை மிகவும் உபயோககரமாக இருப்பதால், அரசாங்கம் அதிகப்படியாக ஊதியம் தருவது நியாயம் எனச் சொல்லப்படலாம். ஆனால், இந்த அதிசயக் கொள்கையானது, வட்டி, லாபம் ஆகியவை நியாயம் என்று சாதிக்கும் அனேக வாதங்களைப்போல இருப்பதோடு, 'செய்யத வேலை' அளவுக்கு ஏற்ற ஊதியம் என்ற சோஷலிஸத் தத்துவத்துடன் பொதுப்படையில்

ஒற்றுமை அம்சம் எதுவுமின்றி யிருக்கிறது. உழைப்பின் தரம், அளவு ஆகியவற்றிலுள்ள வித்தியாசத்திற் கேற்றபடி பல ஊதிய விகிதங்கள் கூலி வேலைக்கு இருப்பனவால்,கோஷ்டித் தலைவருக்குத் தரப்படும் ஊதியம், உழைப்பின் தரத்தை அல்லது அளவை அடிப்படையாகக் கொண்டதல்ல என்பது நிதர்சனமாகிறது. தம்கீழ் உழைக்கிறவர்களுடைய வேலையைத் துரிதப்படுத்துவதும், சாதாரணத் தொழிலாளிக்குத் தரப்படும் கூலி விகிதங்களைக் குறைப்பதும்தான் சமூகத்திற்கு அவர் செய்யும் சேவைகள் என்றால் நிலைமைவேறு; அவருக்கு அதிகப்படியாக ஊதியம் தருவது நியாயமென்றாகும். மிகவும் கஷ்டமான நிலைமையில், பொதுக் கூலி வேலை என்ற சால்ஜாப்பில், சோஷலிஸம் அமுலுக்கு வந்தது எனச் சொல்லுவது,தொழிலாளர் வர்க்கத்தைப் புண்படுத்துவதோடு நின்றுவிடாமல், சோஷலிஸத்தையே அவமரியாதைக்குட்படுத்துவதுமாகும்.

"தொழில் நுணுக்கம் தெரிந்த திறமைசாலிகளின் மைனாரிட்டிக் கோஷ்டி பிறரை விட 10 அல்லது 20 அல்லது 100 சதவிகிதம் அதிகமாகப் பொதுப்பொருள்கள் நிதிக்குத் தருவதாக வைத்துக் கொண்டால்கூட, இந்த மைனாரிட்டியில் எல்லாரும் சாதாரணத் தொழிலாளியைக் காட்டிலும் 300அல்லது 500 அல்லது 1,000 சத விகிதம்கூட அதிகமாகப் பொருள்களை (உபயோகிப்பதால் செலவாகி விடக்கூடிய பொருள்களைப்) பெறுகிறார்கள். பாக்கியுள்ள இந்த ரகப் பொருள்கள், மெஜாரிட்டித் தொழிலாளர்களுக்கு அவர்கள் 'செய்த வேலைக்குத் தக்க' சன்மானமாகப் போதுமானபடி இல்லை.

"தொழிலாளர்களில் தொழில் நுணுக்கம் தெரியாத ரகத்தினர் குறைவாக ஊதியம் பெறுகிறார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. ஸ்டக்காநோவிஸ்டுகளில் உயர் ரகப் பேர்வழிகளும், கைத்தொழில் மானேஜர்களும்—ஆளும் எதேச்சாதிகார வர்க்கத்தை இங்கே குறிப்பிடவில்லை—தங்கள் வேலைக்குத் தக்கபடி கிடைக்கவேண்டியதை விட அதிகமாகவே பெறுகிறார்கள்."

சோவியத் பத்திரிகைகளில் வெளியான புள்ளி விவரப் பரிசீலனைகளை ஆதாரமாகக்கொண்டு 1939-ல் லியான் டிராட்ஸ்கி மேற்கண்ட முறையின் விளைவைப் பின்வருமாறு வர்ணித்தார்: "சோவியத் ஜனத்தொகையில் 11 சதவிகிதம் அல்லது 12 சதவிகிதமுள்ள உயர் ரகத்தினர் தேசிய வருமானத்தில் கிட்டத் தட்டப் பேர் பாதியைப் பெற்றுவருகிறார்கள். இங்கேயுள்ள இந்த ஏற்றத் தாழ்வு அமெரிக்காவில் இருப்பதை விட மிக அதிகமாயிருக்கிறது. அமெரிக்காவில், ஜனத்தொகையில் மேல் ரகத்திலுள்ளவர்களில் 10 சதவிகிதம்பேர் தேச வருமானத்தில் சுமார் 35 சதவிகிதம்தான் பெறுகிறார்கள்."

இந்தப் புதிய சமூகத் தரப்பிரிவுகளின் ராஜீயப் பிரதிபலிப்பைச் சோவியத் அரசாங்கத்தின் அதிகாரப் பூர்வமான ஸ்தாபனங்களின் அமைப்புச் சேர்க்கையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இவற்றின் முக்கியத்துவம் எவ்வளவு அற்பமாயிருப்பினும் பாதகமில்லை.

"சென்ற (1936-ம் வருஷம் டிசம்பர் மாதம்) சோவியத்துக்களின் காங்கிரசுக்கு வந்த மொத்தம் 2,016 பிரதிநிதிகளில் 937 பேர்கள் - அதாவது 47 சதவிகிதம் - மத்ய நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள், பெரிய கைத்தொழில் ஸ்தாபனங்களின் டைரக்டர்கள், தனித்துறைப் பயிற்சியாளர்கள், கட்சியின் பொறுப்பான மெம்பர்கள், தொழிற் சங்கங்களின் பொறுப்பான மெம்பர்கள், உயர் ரக ராணுவ அதிகாரிகள். 589 பிரதிநிதிகள் (29 சத விகிதம்) ஸ்தல சோவியத்துக்களின் தலைவர்கள், கூட்டுப் பண்ணைகள், ராஜாங்கத்தின் பண்ணைகள் ஆகியவற்றின் தலைவர்கள்தான். 430 பிரதிநிதிகள் - அதாவது 21 சத விகிதம் - ஸ்டக்கானோவிஸ்டுகள். 60 பிரதிநிதிகள்தான் (3 சத விகிதம்) சாதாரணத் தொழிலாளர்களும் விவசாயிகளும்." இந்தப்புள்ளி விவரங்களை எரிக் ஸ்டிராஸ் எடுத்துக்காட்டி யிருக்கிறார்.

இந்த விஷயத்தை மேற்கொண்டும் நிரூபிக்க வேண்டிய அவசியமில்லையென்றே நினைக்கிறேன். கண்ணையும் மனத்தையும் திறந்து பார்க்கும் யாரும் அங்கு அதிகமாகிவரும் பொருளாதார் சமூக வேற்றுமைகளைத் தெரிந்துகொள்ளலாம். புரபஸர் எனக்குச் சிபார்சு செய்த லூஸியன் லாரட் தமது புஸ்தகத்தில்

எழுதியிருப்பதாவது: "நியாயம் பேசி ஒரு முடிவுக்கு வரும் முறையைக் காற்றுவாக்கில் விட்டு விட்டுக் கண்ணை மூடிக்கொண்டு பின் பற்றும் முறையை விரும்புகிறவர்களைத்தான் ருஷ்யாவில் இன்றுள்ள சோஷலிஸ ரகம் கவரமுடியும். "சோவியத் சுவர்க்கத்தைப் பற்றிச் சொல்லப்படும் சகல புளுகுகளையும் நம்பத் தயாராயுள்ள மந்தப் புத்தியுடையவர்கள்; சர்க்காரின் அபேட்சகர்களே உள்ளதும் மகா பயங்கர ஆட்சியில் நடப்பதுமான தேர்தல்கள் சுயேச்சையான தேர்தல்கள் எனச் சொல்லப்படுவதைக் கேட்டு ஆச்சர்யப்படாதவர்கள்; ஒரே கட்சி பதவியில் இருந்துவந்து, பாக்கி எல்லாக் கட்சிக்காரர்களையும் சிறைகளில் அடைத்துள்ள ஓர் ஆட்சியானது 'மாடல் ஜனநாயகம்' என்று சொல்லப்படுவதைக் கேட்டு அதிசயப்படாதவர்கள்; 20 வருஷங்களாக சோஷலிஸ சிந்தனை தடைசெய்யப்பட்டு, ஒடுக்கப்பட்டு, அரசியல் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள ஒரு நாட்டில் சோஷலிஸம் வளருவதாகச் சொல்லப்படுவதைக் கேட்டு அதிர்ச்சி உண்டாகாதவர்கள்; நாடறிந்ததும், மெய்ப்பித்துக்காட்டக் கூடியதுமான உண்மைக்கு மாருன வாக்குமூலங்களை அரசியல் கைதிகளிடமிருந்து அவர்களை அடித்து, உதைத்துத் துன்புறுத்திப் பெறுவதைக் கேட்டுத் திகைக்காதவர்கள், ஆகியவர்களே இப்போதைய ருஷ்ய சோஷலிஸ ரகத்தில் லயித்துப்போவார்கள்." இவையெல்லாம் எந்த லூஸியன் லாரட்டின் நூல்களைப் படித்துப் பார்க்கும்படி புரபஸர் அன்புகூர்ந்து எனக்குச் சிபார்சு செய்தாரோ, அதே லூஸியன் லாரட் சொன்னவையே.

நமது புரபஸரும், மற்றும் பல அறிவாளிகளும் (நல்லவேளை, அவர்களது எண்ணிக்கை இப்போது சுருங்கிக்கொண்டு வருகிறது)—அவர்களுக்கெல்லாம் பிரதிநிதிதான் புரபஸர்—சொல்லும் வாதம் மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. அக்டோபர் புரட்சி, அதன் பலன்கள் ஆகியவற்றில் அவர்கள் நம்பிக்கை வைத்தார்கள். அந்தப் புரட்சியின் பல்வேறு அம்சங்கள் ஒன்றன் பின் ஒன்ருகப் பின்னடைந்து போவதை அவர்கள் பார்த்தார்கள் வேறு பக்கம் திரும்ப ஏற்கெனவே தயாரித்துள்ள, "மெக்கா (புகலிடம்) எதுவும் அவர்களுக்குத் தென்படாததால் தீப் பறவை போல் கண்ணுக்கு எதிரே நிகழும் மாறுதல்களைக் காண மறுக்

கிறார்கள். பழைய அனுகூலங்களை விடாப்பிடியாக வர்ணித்துக் கொண்டேயிருக்கிறார்கள். தாம் மனத் திருப்தியோடு உறுதியாக நம்பிவந்த ஒரு விஷயம் சரியல்ல என்று நிரூபிக்கப் படும்போது, அப்படி நிரூபிக்கும் உண்மையை ஒப்புக்கொள்ள நல்ல மனுஷ்யர்கள் இணங்கி வராததாலேயே புளுகுகளும், அந்தப் புளுகுகளால் உண்டாகிற தீமைகளும் நீடிககின்றன. இந்த நீடிப்புக்கு மேற் கண்ட மறுப்பைவிட உபயோகமாக வேறு எதுவும் இருக்க முடியாது" என்று விட்டல் ஹார்ட் எழுதுகிறார். இந்த நல்ல மனிதர்களின் மனத்தில் சந்தேகமே இல்லையென யாரும் எண்ணவேண்டாம். ஆனால், அந்தச் சந்தேகங்களைத் தீர்ப்பதில் உள்ள வேதனையிலிருந்தும், 'அவற்றை மேலும் உன்னத லட்சியங்களை அடையச் சாதனங்களாக உபயோகிப்பதி லிருந்தும்' தப்பித்துக்கொள்ளவே அவர்கள் விரும்புகிறார்கள். அவர்களுக்குத் தங்கள் மனதுக்குள்ளேயே எழும் சந்தேகங்கள் நன்றாகத் தெரிவதால்தான், அவர்கள் உள்ளத்தில் ரகசியமாகக் குமுறிக்கொண்டிருக்கும் சிந்தனைகளைப் பகிரங்கப்படுத்துகிறவர்கள் மீது உக்ரமாகச் சீறிப் பாய்கிறார்கள். ருஷ்ய உதாரணத்தைப் போற்றுவதை நான் நிறுத்திக்கொண்டு, ஆராய்ச்சி செய்து, புதுக் கருத்தைத் தெரிவிப்பதற்காக மனோதத்துவ ஆராய்ச்சிக்காரணம் கூற நமது புரபஸர் முயற்சி செய்திருக்கிறார். ஆனால், அவர் கூறும் காரணம், வியாக்கியானம் ஆகியவற்றிலேயே அவருக்குள்ள சந்தேகங்களெல்லாம் - அதே சந்தேகங்கள்தான் எங்களுக்கும் இருக்கின்றன - வந்திருக்கின்றன. எனது புஸ்தகத்தை விமர்சனம் செய்கையில், அவர் அந்தச் சந்தேகங்களைத் திறமையாக அடக்கிவைத்துக்கொண்டாரே யொழிய, ஒளித்து வைத்துக்கொள்ளவில்லை. இவருக்கு முன்னர் இன்னும் எத்தனையோ பேர் பழைய நம்பிக்கைகளை, அவை தங்கள் கையிலேயே செத்து, விறைத்துப் பிணம்போலாகிறவரை, விடாப்பிடியாக வைத்திருந்தார்கள். புரபஸரும் சோஷலிஸ ஆராய்ச்சி செய்யப் போதிய விஷய ஞானமுள்ளவர். எனவே, அவரும் ஏதேனும் சாதிக்க விரும்பினால், இப்பொழுதாவது சந்தேகங்களை நன்கு தெளிவு படுத்திக்கொண்டு, உண்மையை ஒப்புக்கொள்ள முன்வர வேண்டுமென ஆசைப்படுகிறேன். தவறு செய்வது பாபமல்ல; தவறு என அரைகுறையாகவாவது உணர்ந்து,

அதைப் பிடிவாதமாகக் கைவிடாதிருப்பதில்தான் பாபமிருக்கிறது.

இந்தப் புஸ்தகத்தின் முதல் பதிப்பு வெளியான பிறகு எவ்வளவோ விஷயங்கள் நடந்துவிட்டன. அவையெல்லாம் எனது புஸ்தகத்தில் காணப்படும் முடிவுகளைப் பலப்படுத்துகின்றன. அந்தப் புதிய விஷயங்கள் பற்றிய பிரஸ்தாபங்கள் இந்தப் பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. ருஷ்ய வல்லரசு, அபிஸீனிய சுதந்தரத்தைப் பறித்த கொலைகார படாக்ளியோவை (இங்கிலாந்தும் அமெரிக்காவும்கூட அங்கீகரிக்காத போது) அங்கீகரித்தது; பின்லாந்து, ருமேனியா ஆகியவற்றிடமிருந்து நஷ்ட ஈடுகளைப் பலவந்தமாக வாங்கியது (இந்த வகையில் நஷ்ட ஈடுகளை வாங்குவது ஏகாதிபத்ய முறையாகும் என்று லெனின் முன்பு கண்டித்திருக்கிறார்); 1941-ல் தான் போலந்துக்குக் கொடுத்த சுதந்தர வாக்குறுதி, தேசிய பிரதேச ஐக்ய வாக்குறுதி ஆகியவற்றை மீறியது; சோவியத் வெளி நாட்டிலாகாவைச் சேர்ந்தவரும் "அபேச்சை" உக்ரேனியக் குடியரசு மந்திரியுமான கோர்னீட்சக்கின் மனைவி வாண்டா வாஸிலீவ்ஸ்கா போலிஷ் "தேசபக்தர்களு"க்குத் தலைமை வகிக்கும் கேலிக்கூத்து; ஜெர்மன் கட்சியில், ருஷ்ய அதிகாரிகளைத் தலைவர்களாகக்கொண்டு போர் புரிந்த ஒரு ருஷ்ய ரிஜிமெண்ட் பூராவும் நார்மன்டியில் பிரிட்டிஷ்-அமெரிக்கப் படைகளால் பிடிபட்டது (இவ்வாறு செய்தி பிரசுரமாகி யிருக்கிறது); "பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தனது மெம்பர்—நாடுகளுக்கு மாத்திரமின்றி, இதர ஐக்ய நாடுகளுக்கும் மிகவும் உபயோககரமான ஸ்தாபனமாக இருக்கிறது" என்று ஏகாதிபத்தியத்தைப் பிரமாதமாக மாஸ்கோ புகழ்ந்தது; பெரிய, சிறிய நாடுகள் சமத்துவத்தை நிராகரித்து, உலகில் மேலாதிக்கம் செலுத்த 'முப்பெரியாரு'க்கு உரிமையுண்டென வலியுறுத்துவது; பிள்ளை பெறுவதை தேசிய வாழ்வின் முக்கிய அம்சமாகக் கருதி, பெரிய குடும்பங்களுக்குக் குறைந்தவரி என்ற முறையை ஸ்தாபிக்கும் 1944-ம் வருஷம் ஜுலை 14-ந் தேதி நிறைவேறிய சட்டம்; "வைஸ்-பிரஸிடெண்ட் வாலஸ், வால் ஸ்ட்ரீட்டை (அமெரிக்க முதலாளித்துவம்) பொதுப் படையாகத் தாக்குவதின் மூலம் டெஹ்ரான் எதிர்ப்புக்காரர்கள் மீது நடக்கும் போருக்கு உதவவில்லை. இது துர்ப்பாக்

யமாகும். அந்த எதிர்ப்புக்காரர்களைத் தோற்கடிப்பதற்காகத் தேசிய ஒற்றுமை நிறைய இருக்கவேண்டும். வால் ஸ்டிரீட்டின் விவேகபுத்திக் காரர்களையும் நம் பக்கம் சேர்த்துக் கொள்ளவேண்டும்" என்று அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான "டெய்லி ஒர்க்கார்" 1944-ம் வருஷம் ஜூன் மீ வாலஸ் மீது சீறிப்பாய்ந்தது—இவையும் மற்றும் பல முக்கியமான புதுப் போக்குகளும் நமது தலைமுறையிலுள்ள சோஷலிஸ்டுகள் அறிய வேண்டிய துக்ககரமான படிப்பினையைப் பரப்பியிருக்கின்றன. சோஷலிஸ தத்துவம் மனிதர்களின் சிந்தனையைக் கிளறிச் செயலில் இறங்க அவர்களைத் தூண்ட வேண்டுமானால், அந்தத் தத்துவத்திற்கும் ருஷ்ய சர்க்காருக்கு மிடையே எவ்விதச் சம்பந்தமுமில்லை யென்ற உண்மையை உணர்ந்தாக வேண்டியது மிக அவசியமும் முக்கியமுமாகும். எப்பேர்ப்பட்ட சர்க்கார் அது? எவ்வகையிலும் கோபமூட்டப்படாத போது பின்லாந்து மீது பாய்ந்ததற்காக ஏகமனதானதாகச் சர்வதேச சங்கத்திலிருந்து 1939-ல் வெளியேற்றப்பட்ட சர்க்கார் அது; யுத்தக் கைதிகளைக் காருண்யத்துடன் நடத்த வேண்டுமென்ற சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் நியதிகளை ஒப்புக்கொள்ள 1941-ல் மறுத்த சர்க்கார் அது. ருஷ்ய சர்க்காரைத் தவிர மற்ற எல்லாச் சர்க்கார்களும் அந்தக் காருண்ய நியதியை ஒப்புக்கொண்டது குறிப்பிடத் தக்கதாகும்.

1944-ம் வருஷ ஏப்ரல் மாத ஸோஷல் ஸர்விஸ் குவார்ட்டர்லி பத்திரிகையில் இந்தப் புஸ்தகத்தைப் பற்றி வெளியாகியுள்ள விமர்சனம் சிந்தனை சக்தியும், உருப்படியான யோசனைகளும் கொண்டது. அதில், உண்மையில் இந்தப் புஸ்தகத்தில் சோஷலிஸ அல்லது மார்க்ஸீய புனராலோசனை இல்லை; ஸ்டாலினிஸப் புனராலோசனை தான் இருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. ஸ்டாலினிஸம் என்பதால், அது தீர்மானமாய் நிராகரிக்கப்பட் டிருக்கிறது எனச் சொல்லுவதில் அர்த்தமிருக்கிறது. ஆனால், புனராலோசனை செய்தால், நிராகரித்துத் தான் ஆகவேண்டு மென்பதில்லை. ஸ்டாலினிஸ வளர்ச்சி லெனினிஸத்திலும், அதன் மூலம் மார்க்ஸீயத்திலேயே ஆதாரம் கொண்டிருப்பதாகவும் உரிமை கொண்டாடுகிறார்கள். முழு மரத்தையும்,

நிலத்தையும் கூட, ஆராயாமல் பழத்தை மாத்திரம் யாரும் ஆராயமுடியாது. எனவே, செய்யவேண்டியது என்ன? சோஷலிஸத்தைப் புனராலோசனை செய்வது தான். அவ்வாறு சோஷலிஸ்டுகள் புனராலோசனை செய்தால், அவர்களில் ஒவ்வொருவரும் தங்கள் மனதுக்குத் தோன்றுகிறபடி ஒரு முடிவுக்கு வருவார்கள். அவர்கள் அந்தத் தத்துவத்தின் சில பகுதிகளையும், தத்துவ வெளிப்பாடுகளில் சில பகுதிகளையும் நிராகரிக்கலாம்; மற்றும் சில பகுதிகள் சரியா எனக் கேட்கலாம்; பாக்கியுள்ளவற்றில் மேலும் மேலும் உறுதியாக நம்பிக்கை வைத்து, அவற்றை ஊர்ஜிதம் செய்யலாம்.

1—10—1944 எம். ஆர். மஸானி

முதல் பதிப்புக்கு முகவுரை

செயல் முறைகளை மீண்டும் பரிசீலனை செய்யவும், லட்சியங்களுக்கு மீண்டும் வியாக்கியானம் தரவும் இந்தியாவிலுள்ள சோஷலிஸ்டுகளுக்கு ஊக்கமளிப்பதே இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கம். அதனால் தான் கேள்விகளுக்குப் பதிலளிப்பதைவிட, மேலும் மேலும் அதிகப்படியான கேள்விகளையே கேட்டுச் செல்லுகிறது: நேருக்கு நேராய்க் கண்டு சமாளிக்கவேண்டிய உண்மைகளையொட்டி முடிவுக்கு வரவேண்டிய பொறுப்பை வாசகர்களிடம் விட்டு விடுகிறது. வழக்கமான பழைய பாதையிலிருந்து பிரியும் குற்றத்தை நான் செய்து விட்டேன் எனக் கூறுகிற என் நண்பர்கள் சிலர், நான் எழுப்பியுள்ள சந்தேகங்களைப் படித்து மனக் கலவர மடையலாம், ஆத்திர மடையலாம். அவர்களிடம் நான் முறையிடுவது இதுதான்: நிம்மதியைக் குலைத்து விடுபவை உண்மை நிகழ்ச்சிகளும் விவரங்களுந்தான். சமூக, பொருளாதாரத் துறைகளில் நியாயம் கிடைக்கவேண்டுமென்று விரும்புகிறவர்கள் அந்த உண்மைகளைப் பார்க்காமல், அல்லது அவை பற்றிப் பேசாமல், நமக்கென்ன என்று இருந்துவிட முடியாது.

சோஷலிஸ்டு சிந்தனைக்கு இருபதாம் நூற்றாண்டு சமர்ப்பித்துள்ள புதிய பிரச்னைகளை நான் சொந்த ஹோதாவில் அணுகியிருக்கிறேன். இதிலுள்ள கருத்துக்கள் எந்தக் கோஷ்டி அல்லது கட்சியுடைய கருத்துக்களின் பிரதிநிதித்துவப் பிரதிப்லிப்பல்ல. இந்தப் புஸ்தகம் எனது இரு பிரசங்கங்களை ஆதாரமாகக் கொண்டது. அவை, நான் எதிர்பார்த்ததை விட அதிக சுவாரஸ்யத்தை உண்டாக்கி, அதிக விவாதத்தைத் தூண்டிவிட்டன. எனவே, என் கருத்துக்களை இன்னும் அதிகப்படியான வாசகர்கள் முன் சமர்ப்பிக்கத் தூண்டுதலேற்பட்டது.

1—3—1944 எம். ஆர். மஸானி

போலிச் சுபிட்ச உதயம்

ருஷ்ய ராணுவ முன்னேற்றம் பற்றித் தினசரி செய்திகள் வருகின்றன. ஐரோப்பாவைப் பொறுத்தவரை, யுத்தம் முடிந்த பிறகு மேலாதிக்க வல்லரசுகளில் ருஷ்யா ஒன்றாக இருக்கக்கூடும். எனவே, ருஷ்ய வல்லரசின் உண்மையான தன்மையைச் சரியாக அறிந்து கொள்ளவேண்டிய அவசியம் முன்னைவிட இப்பொழுது அதிகமாயிருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, குறிப்பாக இந்தியாவில், அப்படி அறியும் சக்தி பெரும்பாலும் இல்லை. வேறு எல்லாவற்றிலும் நன்கு விஷய மறிந்திருக்கிறவர்கள், ருஷ்யாவைப் பொறுத்தவரை இன்றைய நிலையை உணர்ந்திருக்கவில்லை பத்து வருஷங்களுக்கு முன்பிருந்த நிலையே இப்போதும் இருப்பதாக நினைத்துக்கொண் டிருக்கிறார்கள். சமீப வருஷங்களில் ராஜீய, பொருளாதார, சமூகத் துறைகளில் ஏற்பட்டுள்ள தீவிர மாறுதல்களை அவர்கள் அறியார்.

ஆனாலும்,1917-ல் நடந்த போல்ஷவிக் புரட்சியைப் போற்றியவர்களும் தூற்றியவர்களும் ருஷ்யாவின்பால் தங்களுடைய மனப்பான்மையை இப்பொழுது மாற்றிக் கொண்டிருப்பதால், சோவியத் ருஷ்யாவுக்குள் பெரிய மாறுதல்கள் நிகழ்ந்திருக்க வேண்டுமென்பது நிதர்சனமாகிறது. உதாரணமாக, பிரிட்டிஷ் கன்ஸர்வேடிவ்களும், பணக்காரர்களும் சோவியத் ஆட்சி ஆரம்ப காலத்தில் ருஷ்யாவைச் சரமாரியாகத் தாக்கிப் பேசினார்கள். மகா கேவலமான வசைமொழிகளையெல்லாம் பொழிந்தார்கள். துஷ்ட போல்ஷவிக்கின் தாடி மயிர்கள் முறைப்பாக இருப்பதுபோல கார்ட்டூன்களை லண்டன் 'டெய்லி மெயில்' பிரசுரித்தது! சோவியத் ஆட்சியைத் தூஷித்தவர்களில் வின்ஸ்டன் சர்ச்சிலும் ஒருவர். ருஷ்யப் பிரச்னையில் பிரிட்டிஷ் ராணுவம் தலையிட வேண்டுமென்று கூட அவர் சொன்னார். "ருஷ்யாவைத் தொடாதே" என்ற இயக்கத்தைப் பிரிட்டிஷ் தொழிற்கட்சிக்காரர்கள் நடத்தியதால், சர்ச்சிலைப் போன்றவர்களுடைய ஆசை

நிறைவேருமல் போயிற்று. இன்று ஸ்டாலினைப் போற்றுகிறவர்களில் சர்ச்சிலும் ஒருவர்.

"ஸ்டாலினுடைய சார்லி மக்கார்த்தி" (ஸ்டாலினின் கைப் பொம்மை) என்று இந்த வருஷ ஆரம்பத்தில் சர்ச்சிலை ஒரு சோஷலிஸ்டு மெம்பர் காமன்ஸ் சபையில் வர்ணித்தார். இவ்வாறு சோவியத் ஆட்சியை முன்பு தூற்றி இப்போது போற்றி வருகிற கோஷ்டி இருக்கிறது. ருஷ்யப் புரட்சியை மானிட வர்க்கத்தின் அடிமைத் தளைகளைத் துண்டித்தெறிந்த பெரும் மகத்தான நடவடிக்கையென்றும், சோவியத் யூனியன் உலகத் தொழிலாளருக்கு வழி காட்டும் அமரஜோதியென்றும் வர்ணித்துப் போற்றுவதில் ஆரம்பித்த என்னைப் போன்ற சோஷலிஸ்டுகளும் உண்டு. பிரஞ்சுப் புரட்சி குறித்து வோர்ட்ஸ்வொர்த்* பாடியது போல, ருஷ்யப் புரட்சி பற்றியும் நாம் பாட முடியும்:

"புது யுகம் பிறந்த அந்தக் காலத்தில் பிறந்திருப்பதே பெரு மகிழ்ச்சி தரக் கூடியது. அதோடு, புதுப் போக்கில் தானும் தீவிரமாக ஈடுபட்டு அதனோடே வளரக் கூடிய இளமையும் ஒருவனுக்கு இருந்து விட்டால், அது இன்ப மயமான லட்சிய உலகத்தையே அடைந்து விட்டமாதிரிதான்."

ஆனால், அந்தப் புரட்சியின் பலன்கள் பற்றி நாம் அடைந்த ஏமாற்றத்தை நம்மில் சிலர் இனியும் நமக்குள்ளேயே வைத்திருப்பதற்கில்லை. பகிரங்கமாய்ச் சொல்லியாக வேண்டும். அவ்வாறு தங்கள் கருத்துக்களைப் பகிரங்கமாகத் தெரிவித்தவர்களில், ஏற்கெனவே ருஷ்யப் புரட்சியைப் போற்றிப் புகழ்ந்தவர்களும், சோவியத் யூனியனிலேயே பல வருஷங்கள் வசித்தவர்களும் இருக்கிறார்கள். அப்படி வசித்துப் பின்பு கருத்து மாறுபட்டவர்களில் லூயி பிஷர் (Men and Politics என்ற புஸ்தகம் எழுதியிருக்கிருர் இவர்), மாக்ஸ் ஈஸ்ட் மென் (Stalin's Russia and the Crisis in Socialism), யூஜன் லயான்ஸ் (Assignment in Utopia), பிரடா அட்லி (The Dream We Lost) ஆந்திரெ கைட் Return from the U.S.S.R., Afterthoughts on the U.S.S.R.) ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர். மற்றும் எவ்வளவோ பேர்

*Bliss was it in that dawn to be alive,
But to be young was very heaven!

இவர்களைப் போலவே அங்கே வசித்து, தங்கள் அபிப்பிரா யத்தை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். காலத்தின் கோலத் தைப் பாருங்கள். லெனின், டிராட்ஸ்கி ஆகியவர்களுடைய நண் பரும், ருஷ்யப் புரட்சியை ஆவேசத்துடன் போற்றியவருமான மாக்ஸ் ஈஸ்ட்மென் சமீபத்தில் ருஷ்ய சர்க்கார் மீது குறைகூறிய தற்காக அந்தச் சர்க்காருக்குப் பரிந்து கன்ஸர்வேடிவ் ஹெரால்டு நிக்கல்ஸன் பேசினார் !

மாறியது யார்?

இப்படித் தலைகீழானதற்குக் காரணம் என்ன? நடந்ததென்ன? சர்ச்சிலும் இந்த சோஷலிஸ்டுகளும் தான் மாறிவிட்டார்களா — அல்லது இந்த இருபது வருஷ காலத்தில் ருஷ்யா தான் மாறி யிருக்கிறதா?

1917-ம் வருஷப் புரட்சியைக் கவனிப்போம். எதற்காக அந்தப் புரட்சி நடந்தது? எதை அடைவது அதன் நோக்கம்? அப்போது, ருஷ்யா ஒரு எதேச்சாதிகாரியான ஜாரால் ஆளப் பட்டுவந்தது. குடியானவர்களும் தொழிலாளர்களும் தவித்தார்கள். போர்முனையிலுள்ள சிப்பாய்களின் நிலைமையோ, அதைவிட மோசம். "சமாதானம், நிலம், உணவு" என்ற கோஷத்தால் லெனினும் டிராட்ஸ்கியும் 1917-ம் வரு அக்டோபர் புரட்சியை உண்டாக்கினார்கள். சிப்பாய்களுக்குச் சமாதானம், குடியானவர்களுக்கு நிலம், தொழிலாளர்களுக்கு உணவு. அது பிரஞ்சுப் புரட்சியைப் போல அரசியல் புரட்சி மாத்திரமல்ல. சமூகப் புரட்சியுமாகும், உலகப் புரட்சிக்கு அதுவே பூர்வாங்கம். ஜாரிஸத்தோடு முதலாளித்துவத்தையும் ஒழித்து "சுதந்தரமும் சமத்துவமும்" உள்ள சமூகம் என்று லெனினால் வர்ணிக்கப் பட்ட சோஷலிஸ சமூகத்தை ஏற்படுத்தப் போவதாக போல்ஷவிக் தலைவர்கள் சொன்னார்கள். சுருங்கச் சொல்லுவதென்றால், அந்தச் சமூகம் வர்க்கமில்லாத ஜனநாயக, சர்வதேசியச் சமூகமாக இருக்கும். இவ்வாறே அப்போது சோஷலிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளும் புரிந்துகொண்டார்கள். இந்த நோக்கம் கைகூடும் பொருட்டுச் சொந்தச் சொத்து ஒழிக்கப்பட்டது; சொந்தக்காரர்களிடமிருந்து தொழிற்சாலைகளும், சுரங்கங்களும் பறிக்கப்பட்டு, அவை எல்லாராலும் அனுபவிக்கப்படவேண்டிய சர்க்கார்ச் சொத்துக்கள் எனப் பிரகடனம் செய்யப்பட்டன. அவை தொழிலாளரின் கட்டுப்பாட்டில் இருக்குமென்றும் அறிவிக்கப்பட்டது. ராணுவத்திலும், கப்பற்படையிலும் காப்டன்கள், மேஜர்கள் போன்ற படிப்படிப் பதவிகள் ஒழிக்கப்பட்டன. மாதருக்கு-

விடுதலை தந்து, ஆண்களோடு சரிசமமாக்க வேண்டும். எல்லாக் குழந்தைகளுக்கும் சரிசமமான படிப்புவசதிகள் இருக்கவேண்டும். பள்ளிக்கூடங்களில் சுயாட்சி நிலவவேண்டும். அரசியல் அதிகாரம் முழுமையும் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏகபோக உரிமையாக இருந்தது. ஆனால், சொத்துக்கள் உள்ளவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டு, வர்க்கமற்ற சமூகம் ஸ்தாபிக்கப்பட்டவுடனே, சர்வாதிகாரம் முடிவடைந்து, ஜனநாயகம் நிலவும் என்று பறைசாற்றப்பட்டது. "சர்க்காரை நடத்த ஒவ்வொரு சமையல்காரரும் கற்றுக்கொண் டாகவேண்டும்" என்று லெனின் சொல்லி யிருக்கிறார். போலீஸோ, சர்க்காரோ தேவையில்லாத அளவுக்கு எல்லாரும் சந்தோஷமாகவும் சகோதரத்துவமாகவும் இருக்கப் போகிறார்கள். என்கல்ஸ் சொன்னதுபோல லெனினும் "சர்க்கார் வாடிவிழுந்து விடும்", "ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவர் சக்திக்கு ஏற்றபடி உழைப்பைப் பெற்று, ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கு ஏற்றபடி ஊதியம் தருவது" என்பது எல்லோரும் தாங்களாகவே ஏற்றுக்கொள்ளும் வாழ்க்கைத் தர்மமாக இருக்கும். அன்றிலிருந்து எப்போதும் அவர்கள் சந்தோஷமாக வாழ்வார்கள்.

1927

அப்படி அவர்கள் வாழ்ந்தார்களா? நானே நேரில் கண்டு பார்க்கலாமென்று ருஷ்யாவுக்குச் சென்றேன். இரு குறைந்தகால விஜயங்கள் செய்ய எனக்கு அதிருஷ்டம் கிடைத்தது. முதல் விஜயம் 1927-ல். இரண்டாவது விஜயம் 1935-ல். முதல் விஜயம் எனக்கு மனமகிழ்ச்சி தந்தது; மிக்க உற்சாகம் தந்தது. இந்தியா அல்லது இங்கிலாந்தில் உள்ள சூழ்நிலைக்கும் ருஷ்யாவில் நான் கண்ட சூழ்நிலைக்கும் வித்தியாசம் நிறைய இருந்தது. சகோதரத்துவம், சர்வதேச ஐக்கிய மனப்பான்மை, நல்ல தோழமை ஆகியவை நிலவின. கறுப்பர்களிடம் (வெள்ளை நிறமில்லா இதர நிறத்தார் களிடமும்) விசேஷ அனுதாபம் இருந்தது. அவர்கள் நன்றாகவே நடத்தப்பட்டார்கள். "இந்நாடு ஒன்றில்தான் நான் மனிதன் என்ற உணர்ச்சி உண்மையிலேயே எனக்கு இருந்தது" என்று நீக்ரோவர் ஒருவர், கண்ணும் கண்ணீருமாக என்னிடம் சொன்னது எனக்கு ஞாபக மிருக்கிறது. ஸ்டாலின்-டிராட்ஸ்கி சர்ச்சை அப்போதே உச்ச நிலையிலிருந்தது உண்மை. ஆனால், சர்ச்சை பத்திரிகைகளில் தங்குதடை யின்றி நடைபெற்று வந்தது; பிற்பாடு நடந்ததைப்போல, ஜி. பி. யு. (G. P. U. ஜெர்மன் கெஸ்டப்போ போலவும் இந்திய ஸி. ஐ. டி. போலவும் உள்ள ருஷ்ய ரகஸ்யப் போலீஸ்) சித்ரவதை அறைகளில் நடக்கவில்லை. ஸ்டாலின், சர்க்கார் இயந்திரத்தைத் தாமே வசப் படுத்திக்கொண்ட போதிலும், தொழிலாளரின் பேரன்பு பெற்றவர் டிராட்ஸ்கிதான். ஸ்டாலினைச் துச்சமாக மதித்து எதிர்க்கட்சியாக டிராட்ஸ்கி இருந்துவந்தார். மேல்நாடுகளின் வாழ்க்கைத் தரங்களுடன் ஒப்பிட்டால், அப்போது ருஷ்யாவில் சௌகர்யக் குறைவுகள் இருந்தனவென்றே சொல்லவேண்டும். ஆனால், சோஷலிஸ்ட் சமுதாயத்தை நிர்மாணிக்கவேண்டுமென்ற அபார ஆர்வமும் இருந்துவந்தது. நாளைய சுபிட்சத்தில் அளவு கடந்த நம்பிக்கையுடன் அனைவரும் வேலை செய்தார்கள்.

நான் விஜயம் செய்த தொழிற்சாலைகளி லெல்லாம் தொழிலாளருக்கு அவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் உண்மை

யாகவே இருந்தது. ஆபீஸ்களில் இரண்டு மானேஜர்கள் இருந்தார்கள். ஒருவர் டைரக்டர் என்றும் மற்றொருவர் "சிகப்பு" (பொதுவுடைமை) டைரக்டர் என்றும் அழைக்கப்பட்டார்கள். முந்தியவர் தொழில் நுணுக்கம் தெரிந்தவர். மற்றவர் தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி. பொதுவுடைமை டைரக்டரின் அங்கீகாரமின்றி, தொழிலாளரின் சம்பளங்கள், வேலை நேரங்கள், வேலை நிபந்தனைகள் ஆகியவற்றைப் பாதிக்கும் எந்த முடிவையும் செய்ய முடியாது.

கல்வியிலும் பிரமாதமான முன்னேற்றமிருந்தது. போட்டி, ராணுவ வெறி ஆகியவையுள்ள சமூகத்தின் மிச்சம் மீதியாகிய பரீட்சைகள் ரத்துச் செய்யப்பட்டன; ராணுவ உடைகளும் அப்படியே. வாத்தியார்களும் மாணவர்களும் அடங்கிய பள்ளிக்கூடக் கோர்ட்டுகளில் வாத்தியார்களை விசாரிக்கலாம். 1920-ம் வருஷங்களில் சோவியத் கல்விமுறையைப் பார்த்த ஜான் டூயி, "அதை வர்ணிக்க எனக்குப் போதிய இலக்கியத் திறமை இல்லை" என்றார்.

மாதர் விடுதலையும், வாழ்க்கையில் அவர்களுக்குச் சகல அம்சங்களிலும் ஆண்களோடு சரிநிகரும், அக்டோபர் புரட்சியின் மாபெரும் சாதனைகளில் ஒன்று. "மாதர் இயக்கத்தில் ஈடுபட்டுள்ள நான், மாதர் விடுதலையையே புரட்சியின் மாபெரும் சாதனையாகக் கருதுகிறேன். இந்தியாவிலுள்ளதைப் போன்ற நிலைமையிலிருந்து மேல்நாடுகளில் உள்ள நிலைமைக்கும் அதற்கு அப்பாலும் கூடத் தாவியுள்ளோம்" என்று காமனீவின் மனைவியும், டிராட்ஸ்கியின் சகோதரியுமான காமனீவா, என்னுடன் பேசிக்கொண்டிருந்த போது கூறியது எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது. விவாக விவாகரத்துச் சட்டங்கள், சமூக, பொருளாதார சுதந்தரத்தை—அதாவது, கணவனையே நம்பியிருக்கவேண்டிய அவசிய மில்லாத ஒரு நிலைமையை—உண்டாக்கின. தேக சௌக்யத்தை முன்னிட்டுக் கரு அழித்தல் அனுமதிக்கப்பட்டது. கர்ப்பத்தடை பற்றிய தகவல்களை அரசாங்கம் பரப்பியது.

ஜார் ஆட்சியின் தூணாக விளங்கிய வைதீகக் கிறிஸ்துவ மதம் முடியாட்சியுடன் ஒழிக்கப்பட்டது. மதத்தை "மக்களின் அபினி" என்று லெனின் கண்டித்தார். அதுவே 1927-ல் இருந்த சோவியத் ருஷ்யா.

1935

1935-ல் நான் ருஷ்யாவுக்குத் திரும்பியபோது, எவ்வளவோ காரியங்கள் நடந்திருக்கின்றன. ஐந்து வருஷத்திட்டம் நிறைவேறி விட்டது. இன்னுங் கொஞ்சம் அதிகமான சுபிட்சம் காணப் பட்டது. ஆனால், கம்யூனிஸ்டு கட்சிக்குள்ளேயே ஜனநாயகத் திற்குப் பதிலாக ஒரே மனுஷ்யனின் சர்வாதிகாரம் இருந்தது. பொது இடங்களில், பாவம்! லெனின் படங்களை, ஸ்டாலின் படங்கள் மறைத்துவிட்டன! டிராட்ஸ்கி தேசப்பிரஷ்டம் செய்யப் பட்டார். பிற்பாடு, அவரைக் கொல்ல ஏற்பாடு. ஜி. பி. யு. தான் சர்வ வல்லமையும் கொண்டதாக இருந்தது. 'ஜி. பி. யு.' மிகவும் வெறுக்கப்பட்டதால், அந்தக் குறிப்பெழுத்துக்களை மாத்திரம் **N. K. V. D.** (என். கே. வி. டி.) என்று மாற்றிவிட்டார்கள்; ஆனால், அந்த இலாகாவின் மனோபாவமோ அல்லது அது கையாளும் முறைகளோ துளியேனும் மாறவில்லை. சர்வதேச சகோதரத்துவ உணர்ச்சியெல்லாம் பறந்துவிட்டது. எதேச்சாதிகார வர்க்கம் ஒன்று புதிதாகக் "குடிவந்திருப்பதற்கு" அத்தாட்சிகள் காணப்பட்டன. ருஷ்ய மகாஜனங்கள் வேறு, தான் வேறு என்று அந்த வர்க்கம் நினைத்தது. இது, குறிப்பாக, தலைநகர் மாஸ்கோவில் காணப்பட்டது. தூரத்திலுள்ள அஜார்பாய்ஜான் (துருக்கி) ஆர்மீனியன் குடியரசுகளில் பழைய புரட்சிகர ஆர்வம் இன்னும் இருந்தது.

இந்தத் தடவை நான் விஜயம்செய்த தொழிற்சாலைகளில் "சிவப்பு" (பொதுவுடைமை) டைரக்டர்கள் யாரையும் காணோம். அந்தப் பதவி எடுபட்டுவிட்டதாக என்னிடம் கூறினார்கள். இடைக்கால வருஷங்களில் தொழிலாளர் ஜனநாயகம் பலியாயிற்று. அதற்குப் பதிலாக, ஸ்டக்கானேவிஸம் என்று வர்ணிக்கப்பட்டதைக் கண்டேன். அதை நமது முதலாளித்துவ பாஷையில் "கூலிவேலை" என்கிறார்கள். "இது, வேலை மளமளவென்று நடப்பதற்காகக் கண்டுப் பிடிக்கப்பட்ட ஒரு புதுமுறை. வெகு நேரத்திற்குத் தொழிலாளரை அமர்த்தி,

அவர்கள் செய்யும் வேலைக்குத் தக்க கூலியைக்கொடுத்துத் தீர்த்து விடுகிற இந்த முறை, நம்மில் சமூகத்துக்கு மகா பாதகம் விளைவிக்கிற ஆலை முதலாளிகூடத் திருப்தியோடு கையாள நினைக்கக் கூடியது" என்று தமது 'ஒரே உலகம்' என்ற புத்தகத்தில், வெண்டல் வில்கி பின்னால் வருணித்தது இதைத்தான். ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக்கொண்டு தொழிலாளர் வேலை செய்வதற்காக இந்த ஆசை காட்டப்பட்டது. இதன் விளைவு என்னவென்றால், அதிகப்படியாகக் கஷ்ட வேலைசெய்யும் ஸ்டக்கானோவிஸ்ட் அவருக்குள்ள பலம், அல்லது திறமை இல்லாதவரைக் காட்டிலும் ஐந்து பங்கு அல்லது பத்துப் பங்கு கூட அதிகமாகச் சம்பாதிக்க முடியும். பள்ளிக்கூடங்களில் சுயாட்சி மறைந்து விட்டது. கண்டிப்பான கட்டுப்பாடே காணப்பட்டது. ராணுவ உடைகள் திரும்பவும் தோன்றின. பரீட்சைகளும் அப்படியே. சர்வகலாசாலைக் கட்டணங்கள் அதிகமாக்கப்பட்டு, இலவசப் படிப்பு உதவிகள் குறைக்கப்பட்டன. பள்ளிக்கூடம், காலேஜ் ஆகியவற்றிலும், வெளியிலும் மாணவர்கள் செய்யும் பிரசங்கங்கள், நடமாட்டங்கள் ஆகியவற்றைக் கண்காணித்து, விரும்பத்தகாத போக்குகள் காணப்பட்டால் உடனே அறிவிக்குமாறு யங் கம்யூனிஸ்டு லீக் (கம்யூனிஸ்டு யுவர் சங்கம்) குக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஜப்பானியர் "அபாயகரமான" எண்ணங்கள்" கொண்டிருந்த பிரஜைகள்மீது பாய்ந்தது போலவே, ருஷ்யாவிலும் மேலே கூறப்பட்ட அடக்குமுறை தோன்றியது. ஜான் டுயியால் போற்றப்பட்ட அனைத்தும் அழிக்கப்பட்டன.

சமூகத் துறையில், 'முஸோலினி, ஹிட்லர் போக்கு' வேரூன்ற ஆரம்பித்தது. விவாக ரத்து முன்னையைவிடக் கஷ்டமாயிற்று. கரு அழித்தல் மீண்டும் சட்டவிரோத மாயிற்று; கர்ப்பத்தடையென்றால் அதிகாரவர்க்கம் சீறியது. அதோடு மாத்திரமல்ல: ஒரு நகரில் எந்தக் குடும்பத்தில் முதல் முதலில் பதினொரு குழந்தை வரைக்கும் பிள்ளைகள் பிறந்து விடுகின்றனவோ, அந்தக் குடும்பத்திற்குச் சர்க்காரின் சன்மானம் கிடைக்குமென்று பத்திரிகைகளில் விளம்பரங்கள் காணப்பட்டன. நர்த்தனம் செய்யப் போகும் யுத்த தேவதைக்கு நரபலி கொடுக்கச் சோஷலிஸ்டு

தாயகத்திற்கு அதிகப் பேர்கள் வேண்டியிருந்தனர் என்பது தெளிவு.

எந்த எதேச்சாதிகாரத்திலும் முதலில் பலியாவது உண்மை தான். எதிர்ப்பெல்லாம் தவிடுபொடியாக்கப்பட்டது. டிராட்ஸ்கியும் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டு விட்டதால், சரித்திரத்தைத் திருத்தி எழுத சோவியத் சர்க்கார் முற்பட்டது. சிந்தனையும் கைத்தொழிலோடு தேசிய மயமாக வேண்டுமென்பது சர்க்கார் கருத்துப் போலும். "ஜெர்னல் பார் மார்க்ஸிஸ்டு-லெனினிஸ்டு நாஷனல் சயன்ஸஸ்" கீழ்க்காணும் தத்துவத்தை மேற்கொண்டிருப்பதாகப் பறைசாற்றியது: கணிதத்திலும் எங்கள் கட்சியே பிரதானம். ஸர்ஜரியிலும் (ரணசிகிச்சை: ஆப்பரேஷன்) மார்க்ஸீய-லெனினிஸ்டுத் தத்துவம் கலப்பட மின்றி இருக்கவேண்டும்! இதை வெப் தம்பதிகள் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள்.

ஜெர்மனியில் புஸ்தகங்கள் பகிரங்கமாகக் கொளுத்தப்படுகின்றன. ருஷ்யாவில் அப்படி இல்லை. ஆனால், விரும்பத் தகாத புஸ்தகங்களை நீக்குவதற்காக வாசகசாலைகளை வலைபோட்டு அரித்து விட்டார்கள். சரித்திரத்தை முக்கிய விஷயங்களில் திரித்துக் கூறுவதற்காகப் புஸ்தகங்களும் பாடப் புஸ்தகங்களும் எழுதப் பட்டன. இந்த அக்ரமத்திற்கு ஆளான புஸ்தகங்களில், ஜான் ரீட் எழுதிய புரட்சி வர்ணனை யாகிய (**Ten Days that Shook the World**) உலகை அதிரவைத்த பத்து நாட்கள் என்ற புஸ்தகமும் ஒன்று. ஆரம்பத்திலிருந்து கடைசிவரை உண்மை உள்ள புஸ்தகம் என்று அதை லெனின் போற்றியிருக்கிறார். அந்தப் புஸ்தகம் செய்த குற்றம் என்ன தெரியுமா? லெனினுடன் டிராட்ஸ்கியும் அடிக்கடி அதில் பிரஸ்தாபிக்கப் பட்டிருப்பதே. அதோடு, புரட்சியில் டிராட்ஸ்கியின் சாதனைகளுடன் ஸ்டாலினின் சாதனைகளை ஒப்பிட்டுப் பார்த்தால், ஸ்டாலின் செய்தது மிகமிகக் குறைவு என்பதை அறிந்துகொள்ளலா மாகையால், லெனின் பெயருடன் ஸ்டாலின் பெயர் புஸ்தகத்தில் காணப்படவில்லை. இதனால்தான் கோபம்.

உள்நாட்டு யுத்தம், வெளி வல்லரசுகளின் தலையீட்டை எதிர்த்து நடந்த யுத்தம் ஆகியவற்றை வர்ணிக்கும் பூகோளப் படங்கள், படங்கள், கதைகள் ஆகியவையுள்ள படக் கண்காட்சி

சாலைக்கு (இது மாஸ்கோவில் செஞ்சேனையின் மாளிகையில் இருக்கிறது) சென்று, அங்கே எல்லாவற்றையும் பார்த்தேன். பெரிய சேனாதிபதிகள், சிறிய சேனாதிபதிகள் ஆகியவர்களுடைய உருவப் படங்களைக் கண்டேன். வரோஷிலோவ், புடெனி, புளூஷர் முதலியவர்களின் படங்கள் இருந்தன. ஆனால், எல்லாரையும் விடப் பெரியவரான, செஞ்சேனையின் சிருஷ்டி கர்த்தாவான, புரட்சிகர வெற்றிகளைக் கொணர்ந்தவரான டிராட்ஸ்கியின் படம் எங்கே? சொன்னால் விநோதமா யிருக்கும், டிராட்ஸ்கி படத்தைக் காணவே காணோம். எனக்குப் பரிச்சயமான ருஷ்யர் ஒருவரை, ஏனய்யா, அவர் படம் காணவில்லை?' என்று கேட்டேன்.

"அவருடைய படத்தை வைக்காதது நிரம்பச் சரியே. அவர் எதிர்ப் புரட்சிக்காரராகி, புரட்சிக்கு ஏற்கெனவே தாம் செய்த வேலையை யெல்லாம் குட்டிச்சுவராக்கி விட்டார். எனவே, மொத்தத்தில், டிராட்ஸ்கி என்றொருவர் இல்லையென்றே ஆகிறது", என்று சற்றும் வெட்கப்படாமல் சொன்னார் அந்தத் தோழர்.

இந்தப் புதுப் போக்குகளெல்லாம், 1927-ம் வருஷத்திலிருந்த ஆர்வத்திற்கும் உற்சாகத்திற்கும் பதிலாக, அவநம்பிக்கையோடு குற்றங்கூறும் மனப்பான்மையையும் ஏமாற்றத்தையுமே பெருக்கி வந்தன. மாஸ்கோவில் "**பிராவ்தா**" (உண்மை) யில் செய்தி எதுவுமில்லை; **இஸ்வெஸ்தியா** (செய்தி)யில் உண்மை எதுவுமில்லை" என்ற நையாண்டிச் சொல்லாட்டம் பிரபலமாயிருந்து வந்தது. கவலை யோடும் கலக்கத்தோடும் ருஷ்யாவிலிருந்து திரும்பி வந்தேன். மனச்சோர்வு மட்டும் இன்னும் ஏற்பட்டுவிட வில்லை. ஏனெனில், நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை எனக்குப் பலமாக இருந்தது. நம்பிக்கை ஆட்டங் கண்டுள்ள ஒவ்வொரு மதப்பற்றுள்ளவனும் அந்த நம்பிக்கையை விடாப்பிடியாக, மேலும் உறுதியாகக் கடைப்பிடிக்க முயலுவான். எனது சந்தேகங்களையும் அச்சங்களையும் நான் எனக்குள்ளே ஒடுக்கிக் கொண்டேன், — காரியங்கள் சீக்கிரத்தில் தாமாகவே சீர்பட்டுவிடும் என்ற நம்பிக்கையில். சோவியத் ருஷ்யா சாதித்தவற்றை முன் போலவே பகிரங்கமாகப் போற்றி வந்தேன். அது தவறு என்பதை இப்பொழுது உணருகிறேன்.

பொது வாழ்க்கையில் ஈடுபட்ட கம்யூனிஸ்டு அல்லாத இந்தியர் என்ற முறையில் சோவியத் ருஷ்யாவுக்கு விஜயம் செய்ய அனுமதிக்கப்பட்டவர்களில் நானே ஆகக் கடைசி ஆள் என்று நினைக்கிறேன். பிற்பாடு யாரும் அனுமதிக்கப்படவில்லை. இதற்குப் பிரிட்டிஷ் சர்க்காரின் முட்டுக்கட்டையே காரணமென யாரும் நினைக்கவேண்டியதில்லை. சோவியத் சர்க்காரே தடுத்தது. அந்நிய சோஷலிஸ்டுகள் ருஷ்யாவில் சுற்றிப் பார்ப்பதை சோவியத் சர்க்கார் விரும்பவில்லை, 1938-ல், சோவியத் யூனியனுக்குச் செல்ல அனுமதிச் சீட்டுக்காகப் பண்டித ஜவாஹர்லால் நேரு லண்டனில் கொஞ்சக் காலம் பொறுமையாகக் காத்துக்கிடக்க வேண்டியதாயிற்று என்பதும், அனுமதிச் சீட்டுச் சரியான காலத்தில் வராததால் அவர் ருஷ்யாவுக்கு விஜயம் செய்யாமலேயே இந்தியாவுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று என்பதும் அனேகருக்குத் தெரியாதிருக்கலாம். அவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டவர்களில் யூசுப் மேஹராலி, புருஷோத்தம் திரிகம்தாஸ், புரபஸர் எம். எல். தாந்த்வாலா ஆகியவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

முன்பு ஓரளவுக்கு லேசாகக் காணப்பட்ட துர்ப்பாக்கியப் போக்குகள் எல்லாம் 1935-ம் வருஷத்திற்குப் பிறகு மேலும் தடித்து, ருஷ்யாவை சோஷலிஸத்திலிருந்து மேலும் மேலும் வெகு தூரத்திற்குக் கொண்டு போயின. பழைய விஷயங்களும், கொள்கைகளும் பல விதத்திலும் தாறுமாருய் மாறிப்போகத் தொடங்கி விட்டன; வளைந்தடித்துக் கொண்டு பழைய நிலைமைக்கே திரும்பி விட்டன. கடைசியில், நடவடிக்கைகளெல்லாம் பழங்கால ஜார் ஆட்சியையே நமக்கு நினைப்பூட்டுவனவாக மாறி விட்டன.

அதிகரித்துவரும் வேற்றுமைகள்

வழக்கத்துக்கு மாருக, யந்திரங்கள் திருப்பிச் சுழன்றன. இதன் உடனடி விளைவாக, சமூக, பொருளாதார வேறுபாடுகள் நாளுக்குநாள் மண்டி வளர்ந்தன. தாரதம்யங்கள் வளராமல் தடுக்க உதவிய அனேகக் கட்டுப்பாடுகள் ஒவ்வொன்ருகத் தளர்த் தப்பட்டன. அவற்றில் ஒன்று "கட்சி மெம்பர்களின் அதிக பட்சச் சம்பளத்தை" நிர்ணயித்த சுயநலத் தியாகச் சட்டம். ஒரு குறிப் பிட்ட நிதானமான தொகைக்கு அதிகப்படியாகக் கம்யூனிஸ்டு கட்சி மெம்பர் யாரும் சம்பளம் பெறக்கூடாதென்று அந்தச் சட்டம் கூறுகிறது. ஒருவர் தனது சொந்தக் குழந்தைகளுக்கு எவ்வளவு சொத்து வைக்கலாம் என்று வரையறுக்கும் சட்ட மும் சமீபத்தில் ரத்துச் செய்யப்பட்டது. இதனுல், நிறையச் சொத்துக்களுக்குச் சிலர் வாரிசுகளாக முடிகிறது. அவர்கள் தாங் கள் சம்பாதிக்காத வருமானத்தைக் கொண்டு வாழ்ந்து, முத லாளித்துவ சமூகத்திலுள்ளதைப் போலச் சோம்பேறிப் புல்லுருவி களாகிருர்கள்.

இந்த யுத்த ஆரம்பத்தில் ருஷ்யாவில் இருந்த தாரதம்யங் களின் அளவு, முதலாளித்துவத்தில் பழுத்த அமெரிக்காவைப் போன்ற நாடுகளில் இருந்த அளவுக்குக் குறைந்ததல்ல. சோவியத் சுரங்கங்களில் ஸ்டக்கானேவிஸ்ட் அல்லாத தொழிலாளிக்கு 400 ரூபிளிலிருந்து 500 ரூபிள் வரை கிடைப்பதாகவும், ஸ்டக்கா னேவிஸ்ட் தொழிலாளிக்கு 1,600 ரூபிளுக்கு அதிகமாகக் கிடைப் பதாகவும் 1935-ம் வருஷம் நவம்பர் மாதம் 5-ந் தேதி 'பிராவ்தா' இதழ் கூறியது. பூமிக்குக் கீழே, ஒரு கோஷ்டி ஆட்களை வேலை வாங்குகிற மேஸ்திரி போன்ற ஸ்டக்கானேவிஸ்ட் அல்லாத தொழிலாளிக்கு 170 ரூபிளுக்குக் குறைவாகவே கிடைத் தது; அதே ஆள் ஸ்டக்கானேவிஸ்டாக இருந்தால், 400 ரூபிள் கிடைக்கிறது. அதாவது, சுரங்கத் தொழிலாளி ஒருவருக்கு மற் றொரு சுரங்கத் தொழிலாளியை விடப் பத்துப் பங்கு அதிகம் கிடைக்கிறது. எஞ்சினியர்களின் சம்பளம், நிபுணர்கள் சம்

பளம் ஆகியவை, தொழில் திறமையில்லாத தொழிலாளர்களின் சம்பளத்தைக் காட்டிலும் 80 பங்கு அதிகமாக இருக்கிறது. மில்னியாக் (பிரபல எழுத்தாளர்) 'ராயல்டி' யாக மாதம் 30,000 ரூபிள் பெறுகிறார். தொழிற்சாலை, சுரங்கம் அல்லது ரயில்வேக்கு ருஷ்யாவில் யாரும் சொந்தக்காரராக முடியாது. ஆனால், இப் பொழுது ருஷ்ய சர்க்கார் கடன் பத்திரங்களில் வரையறை யின்றிப் பணம் போடலாம். 7 சத விகிதம் வட்டி கிடைக்கிறது. நிறையச் சம்பளம் பெறுகிறவர்கள், தங்கள் சம்பளத்தில் மிச்சம் பிடித்துக் சேர்க்கிறவர்கள், ஒரு புதியவர்க்கமாகிறார்கள். இவர் களை முதலாளித்துவ நாடுகளில் உள்ள குத்தகைக்கு விடுவோர், வாடகைக்கு விடுவோர் ஆகிய வர்க்கத்துடன் ஒப்பிடலாம். இவர் களே சர்க்கார் இயந்திரம் மீது கட்டுப்பாடு அதிகாரம் செலுத்துகிற வர்களாகவும், பெரிய கைத்தொழில் டிரஸ்டுகளின் மானேஜர்க ளாகவும் இருப்பதால், புதிய ஆளும் வர்க்கம் ஒன்று ருஷ்யாவில் இப்பொழுது உருவாகி வருவதாகச் சொல்லலாம். இந்த வர்க்கத் தைச் சேர்ந்தவர்கள், முதலாளிகளைப் போல எந்தக் குறிப்பிட்ட தொழிற்சாலைக்கோ, கைத்தொழிலுக்கோ சொந்தக்காரர்களாக இல்லை; ஆனால், நாட்டின் தேசிய மயமாக்கப்பட்டுவிட்ட பொரு ளாதாரத்தில் இவர்கள் ஒரு பங்குதாரராக இருக்கிறார்கள்.

இது ஒரு சுவாரஸ்யமான வித்தியாசமே என்பதில் சந்தேக மில்லை. ஆனால், இந்தத் தாரதம்யங்களின் விளைவுகள், முதலா ளித்துவச் சமூகத்திலுள்ள விளைவுகளுக்கு மாறுபட்டனவாக இல்லை. சுருக்கமாகச் சொல்லுவதென்றால், முதலாளித்துவச் சுரண் டல் இல்லை. ஆனால் சுரண்டல் இருக்கவே இருந்தது. பண் டைய தேவாதிபத்ய சமூக (theocratic society) காலத்தின் மகாஜனங்களைச் சர்க்கார் மூலம் புரோகிதர்கள் சுரண்டினார்கள். அதாவது, முதலாளித்துவ சமூகங்கள் இல்லை; சோஷலிஸ்டு ராஜ்யங்களுமில்லை!

"ஸ்டாலினின் வெள்ளிக்கிழமை ஆள்—அதாவது ருஷ்யாவில் கடைசி உச்சாணிப் படிக்கு வந்தவன்" என்று மாலடோவை சமீ பத்தில் "டைம்" என்ற பத்திரிகை வர்ணித்தது. "ருஷ்யாவின் முதல்தரமான கடிதம் அடுக்கும் குமாஸ்தா" (**Russia's best filing clerk**) என்று அவரை லெனின் வர்ணித்திருக்கிறார்;

“சமூகத்தில் படிப்படியாக மேலே ஏறிப் போகிறவன்” என்று டிராட்ஸ்கி வர்ணித்திருக்கிறார். பிரபல ஆங்கில எழுத்தாளரான எதல் மேனின் என்பவர் ருஷ்யாவில் மாலடோவா அம்மையை (மாலடோவின் மனைவியை)த் தாம் பார்க்கச் சென்றதாகவும், அப்போது மாலடோவா ருஷ்யாவின் பெரும் பணக்காரிகளில் ஒருத்தியாயும், வாசனைத் திரவியங்களை உற்பத்தி செய்யும் ஒரு டிரஸ்டில் டைரக்டராயும் இருந்ததாகவும், மாலடோவ் வீட்டில் செல்வம் கொழித்திருந்ததாயும், எஸ்டேட்டின் வெளிப்புறத்தில் மாலடோவ் வீட்டு வேலைக்காரர்கள் வசிக்கவேண்டியிருந்த குடிசைகளைக் கண்டு தாம் ஸ்தம்பித்துப் போனதாகவும் கூறுகிறார்.

“ருஷ்யாவில் இப்பொழுது பெண்கள் வாரத்திற்கு 66 மணி நேரமும், ஆண்கள் 84 மணி நேரமும் வேலை செய்கிறார்கள். வயது வந்தவர்கள் யுத்தத்திற்கு முன்பு கஷ்டப்பட்டு வேலை செய்தார்கள்; இப்பொழுது சிறுவரோ அதைவிட அதிகக் கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்கள். (“டைம்” — 1943ஆு செப்டம்பர்மீ 6வ இதழ்.)

இந்தியப் பெண்கள் சுரங்கங்களுக்குள் வேலைக்கு அமர்த்தப்படுவதை ஸ்ரீ ரெஜினால்டு கோரன்ஸ்க் 1944-ம் வருஷ ஆரம்பத்தில் காமன்ஸில் கண்டித்துப் பேசியபோது கன்ஸர்வேடிவ் மெம்பர் ஒருவர் ஒரு பெரிய ‘வெடி குண்டை’ப் போட்டார். சோஷலிஸ்டுகளின் மெக்காவாகிய ருஷ்யாவில் இன்று மாதர் சுரங்கங்களில் வேலை செய்வது தெரியுமா, என்றார் அவர்!

கூட்டுக் கல்விமுறை ரத்து

பொருளாதாரத் துறையில் ஏற்பட்டுவரும் மாறுதல்களை ஒட்டியே சமூகத் துறையிலும் மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. 1943-ம் வருஷ கடைசியில் ருஷ்யாவிலிருந்து வந்துகொண்டிருந்த மிகவும் முக்கியமான சின்னஞ்சிறு செய்திகளில், விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலெல்லாம் கூட்டுக் கல்விமுறை ரத்துச் செய்யப்பட்டது என்பதும் ஒன்றாகும். இந்த முடிவு 1944-ல் மேலும் அதிகப்படியாக அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதற்குக் காரணம் என்னவென்பதை, மாஸ்கோவிலுள்ள முக்கியமான அடுத்த நிலைப் பள்ளிக்கூடங்களில் ஒன்றின் டைரக்டர் பின்வருமாறு விளக்கினார்: "தவிர்க்க முடியாத ஆண் பெண் பிரிவினை இருக்கிறது. ஆண், சிப்பாய் ஆக இருந்தே தீரவேண்டும்...ராஜ்யத்தில் பெண்ணுக்கு மிக முக்கியமான வேலை முறை இருக்கிறது. அவள் ஒரு தாய்." இந்தக் கம்யூனிஸ்டு மனித யந்திரம் பின்வருமாறு சொல்லி யிருந்தால் நிரம்பப் பொருத்தமா யிருந்திருக்கும்: "ஹிட்லரைத் தோற்கடிக்கவேண்டும்; ஹிட்லர் நீடூழி வாழ்க!" எப்படி!

பலவந்தமான ஜனத்தொகைப் பெருக்கத்தின் போக்கு இத்தாலி, ஜெர்மனியில் உள்ளதைக் காட்டிலும் நிரம்பப் பூர்ணத்துவம் அடைந்துவிட்டது. 1936-ம் வருஷமும் 1944-ம் வருஷமும் ஒவ்வொரு அதிகப்படிக் குழந்தைக்காகவும் அதன் முதல் ஐந்து வருஷங்களுக்குத் தாயிடம் கொடுக்கப்பட்ட உதவித் தொகைகள் பின்வருமாறு (இந்தப் புள்ளிவிவரம் 1944-ம் வருஷ ஜூலை 15-உ லண்டன் 'இகானமிஸ்'டில் பிரசுரமாகி யிருக்கிறது):

	1936	1944
மூன்றாவது குழந்தை...		400
நான்காவது குழந்தை...		6,100
ஐந்தாவது குழந்தை...		8,900
ஆறாவது குழந்தை...		10,460
ஏழாவது குழந்தை...	10,000	14,500
எட்டாவது குழந்தை...	10,000	14,500

ஒன்பதாவது குழந்தை...	10,000	18,500
பத்தாவது குழந்தை...	10,000	18,500
பதினோராவது குழந்தை...	12,000	23,000

பிரமச்சாரிகள், விவாகமாகாத ஸ்திரீ, கல்யாணமாகி ஒன்றே ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள் பெற்றுள்ள தம்பதிகள் ஆகியவர்களுக்கு விசேஷ வரிகள் விதிக்கப்பட்டன.

இவற்றாலும், இவைபோன்ற இன்னும் இதர நடவடிக்கைகளினாலும் மொத்தத்தில் நிகழப்போவதென்ன? ஒரு தலைமுறைக்கு ஜனத் தொகையில் 60 சத விகிதம் உயர்வு இருக்கு மென்று 1944-ல் வெளியான "ஐரோப்பாவின் எதிர்கால ஜனத்தொகையும் சோவியத் யூனியனும்" The Future Population of Europe and the Soviet Union என்ற சர்வதேச சங்கப் புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து, வசிக்க இடம் வேண்டும் என்ற கோரிக்கையைக் கிளப்பக் கொஞ்சக் காலந்தான் ஆகும்; பிற்பாடு, தானாக அந்தக் கோரிக்கை வந்துவிடும்.

"மக்களின் அபினி" என்று லெனின் வர்ணித்த மதத்தை மீண்டும் அனுமதித்ததும், சமூக முக்கியத்துவம் வாய்ந்த மற்றொரு பெரிய மாறுதலாகும். நெப்போலியன், ஜனங்களின் போக்கைக் கண்டு எரிந்து விழும் சமயமொன்றில், "மதமின்றி மக்களை நான் ஆட்சிபுரிவ தெப்படி?" என்றார். ஸ்டாலின், இதே போன்ற சங்கடமான நிலையில் இருந்த சமயம் ஒன்றில், வைதீகக் கிறிஸ்துவ மதத்துக்கு அங்கீகாரமளித்ததின் மூலம் அந்தக் கேள்விக்குப் பதிலளித்தார். (ஜார் ஆட்சிக்கு அந்த மதம் ஒரு தூணாக விளங்கியதால், புரட்சிக்குப் பிறகு அது தடைசெய்யப்பட்டிருந்தது.)

ஜி. பி. யு.

சகலவித சுதந்தரமும் பரிபூர்ண நாசம்; மக்கள் எல்லாரையும் யந்திரங்கள் போலத் திட்டப்படுத்தியது — இவைதான் பாட்டாளி மக்களின் சர்வாதிகார ஆட்சியின் உச்சநிலைச் சாதனையாகும். அந்தச் சர்வாதிகாரம் இப்பொழுது கம்யூனிஸ்டுக் கட்சியின் சர்வாதிகாரமாகக் கூட இல்லை; ஆனால் G. P. U. (இப்பொழுது N. K. V. D.) என்ற கொடூரமான, ஈவு இரக்கமற்ற ரகசியப் போலீஸ் மூலம் வேலை செய்யும் ஒரே தலைவரின் சர்வாதிகாரமாக இருக்கிறது. ருஷ்ய ரகசியப் போலீஸை உதாரணமாகக் கொண்டுதான் ஹிட்லர் தனது கெஸ்டப்போவை நிறுவினார்.

கூட்டுப் பண்ணைக்காகத் தங்களுடைய நிலங்களைச் சர்க்காரிடம் ஒப்படைக்க மறுத்துவிட்ட நாற்பது லட்சத்திலிருந்து எழுபது லட்சம் வரை உள்ள குலாக்குகள் (சுமாராகச் சொத்துடைய விவசாயிகள்) ஐம்பது லட்சத்திலிருந்து ஒரு கோடிவரை யுள்ள ராஜீய எதிரிகள்—இவர்களில் ஸ்டாலின், காலினின், மாலடோவ், விட்விஷவ், வரோஷிலோவ் நீங்கலாகச் சகல பிரபல கம்யூனிஸ்டுகளும் இந்த ராஜீய எதிரிகளில் உண்டு— ஆகியோரும் மற்றும் அனேகரும் G. P. U. வின் கொடுமைக்கு ஆளாகி யிருக்கிறார்கள். விசாரணைகள் (trials) நடக்கும் லக்ஷணத்தைக் கவனிப்போம். (சில சமயங்களில் இந்த விஷயங்கள் ஆரம்பமாகு முன்பே எதிரிகள் வேறு உலகத்திற்கு அனுப்பப்படுவதும் உண்டு. டிராட்ஸ்கி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் உண்மையா அல்லவா என்பதை விசாரித்த டூயி கமிஷன் கீழ்க்காணும் முடிவுக்கு வந்தது :

> "குற்றங்களை ஒப்புக்கொள்ளுவதாகப் பொய் வாக்குமூலங்களை நிர்ப்பந்தித்து வாங்குவதும், பிற்பாடு அந்த வாக்குமூலங்களைக் கொண்டே அவர்களையும் பிறரையும் தண்டிப்பதும் இன்று சோவியத் போலீஸின் சர்வசாதாரண வழக்கமாக இருக்கிறது.

"இரு மாஸ்கோ வழக்கு விசாரணைகளிலும் எதிரிகள் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டு தந்த வாக்குமூலங்களில் காணப்பட்ட பிரமிக்கத்தக்க வித்தியாசங்களிலிருந்து, இந்த வாக்குமூலங்கள் நிர்ப்பந்த முறைகள் மூலம் வாங்கப் பட்டவை என்று ஊகிக்க வேண்டியதாயிற்று. குற்றச் சாட்டுகளின் தன்மை சம்பந்தமாகவும் மேற்கொள்ளப்பட்ட அதே ஊகமானது, விசாரணைகள் எல்லாம் வெறும் ஜோடிப்பு என்ற முடிவுக்கு வரவும் இடந்தருகிறது.........

"இந்தச் சாட்சியத்தையும், முடிவுகளையும் ஆதாரமாகக் கொண்டு, லியான் டிராட்ஸ்கி, லியான் ஸெடாவ் இருவரும் நிரபராதிகள் என்றே கமிஷன் தீர்ப்பளிக்கிறது."

ஆர்தர் கோஸ்ட்லர் எழுதிய "மத்யானத்தில் இருள்" என்ற பெருங் கலையழகும் ஆழ்ந்த ஆராய்ச்சியுமுள்ள புஸ்தகத்தில் ருஷ்ய 'ஆள் ஒழிப்புகள்" வழக்கு 'விசாரணைகள்' ஆகியவை வெட்ட வெளிச்சமாக்கப் பட்டிருக்கின்றன. எல்லாம் ஆதி யோடந்தமாய் அதில் எழுதப்பட்டிருக்கின்றன.

மாக்ஸ் ஈஸ்ட்மென் கூறிய பின்வரும் உண்மையை எதிர்ப் பது சாத்தியமல்ல:

"அப்பாவிகளுடைய ரத்தம் எவ்வளவு சிந்தியது என்பதை அளந்தால் (1) ஸ்டாலினுடைய அடக்குமுறையின் விளைவாகச் சிந்திய ரத்தம் ஒரு ஏரி நிறையவும்; (2) ஹிட்லருடைய அடக்கு முறையின் விளைவாகச் சிந்திய ரத்தம் ஒரு குட்டை நிறையவும், (3) முஸோலினியினுடைய அடக்கு முறையின் விளைவாகச் சிந்திய ரத்தம் ஒரு தொட்டி நிறையவும் இருக்கும்."

ருஷ்யாவில் ஸ்டாலின் "வாஜ்த்" என்று, அதாவது தலைவர் என்று, வர்ணிக்கப்படுகிறார். ருஷ்யாவில் ஏற்கெனவே அமெரிக்க ஸ்தானாதிபதியாக இருந்தவரும், ஸ்டாலினின் நண்பருமாகிய ஜோஸப் இ. டேவிஸ் "மாஸ்கோவுக்குத் தூது" (Mission To Moscow) என்ற தமது புஸ்தகத்தில் பின் வருமாறு குறிப்பிடுகிறார்; உண்மை யென்ன வென்றால், ருஷ்யாவில் ஒரே ஆள்தான்— போட்டியில் தலைதூக்கி, தம்மோடு பொட்டி போட்டவர்களை யெல்லாம் பரிபூர்ணமாக ஒழித்துக் கட்டி, பூர்ண மேலாதிக்கம்

செலுத்தும் 'பலவான்' ஸ்டாலின்தான்—சர்க்கார்... அரசாங்கமானது, பறை சாற்றப்படுவதுபோல, பாட்டாளி மக்களுடைய சர்க்காரல்ல; பாட்டாளி மக்கள்மீது சவாரி செய்யும் சர்வாதிகார சர்க்காரே. அது பரிபூர்ணமாக ஒரே மனுஷ்யனுல் ஆளப்படுகிறது."

சோவியத் யூனியனில் ஜெர்மன் சர்வாதிகாரக் கொள்கை எவ்வளவு தூரத்திற்கு அமுலுக்குக் கொண்டுவரப்படுகிறதென்பதை, அந்நாட்டுக்கு விஜயம் செய்த ஆந்திரே கைட் தமது அனுபவத்தின்மூலம் விவரிக்கிருர். சர்க்காரின் விருந்தினராக இருந்த கைட் ஒரு தந்தியைத் தமக்கு விருந்தளிக்கிறவருக்கு (சர்க்காருக்கு) அனுப்ப விரும்பினுர். "மெஸியே (திருவாளர்) ஸ்டாலின்" என்று கைட் விலாசமிட்டுத் தாம் இருந்த நகரின் போஸ்டாபீஸில் கொடுத்தார். ஆனுல், போஸ்டாபீஸ் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. "அருமை பெருமையான ஸ்டாலின் !" என்று விலாசம் எழுதியிருந்தால்தான் போஸ்டாபீஸ் ஒப்புக்கொள்ளுமாம்.

லெனின் தமது அந்திய காலத்தில், நோய் வாய்ப்பட்டும் சக்தியற்றும் இருக்கையில், இனி வரப்போகிற அபாயத்தை யூகித்துக்கொண்டார். தமது கட்சியின் மரண சாசனத்தில் ஸ்டாலினை "முரட்டுத்தனமானவன், துரோகி, மனம் போனபடி நடக்கிறவன், தேசியவாதி, பகைமைப் புத்தியுள்ளவன்" என்றெல்லாம் வர்ணித்து, கட்சியின் பொதுக் காரியதரிசிப் பதவியிலிருந்து அவரை நீக்கிவிடவேண்டுமென்று சிபா.ர்சு செய்திருக்கிருர். ஆனுல், காரியம் தலைக்கு மிஞ்சிப் போய்விட்டது. உள்நாட்டின் அமைப்பைச் சர்க்காரின் வெளிநாட்டுக் கொள்கை பிரதிபலிக்கும். ருஷ்யா கடந்து வரும் மாறுதல்களுக்கு அத்தாட்சியேதும் வேண்டுமென்ருல், அதைச் சமீபகால சோவியத் வெளிநாட்டுக் கொள்கையில் காணலாம். "கொள்ளைக்காரர்களின் கும்பல்" என்று லெனினுல் வர்ணிக்கப்பட்ட சர்வதேச சங்கத்தில் சோவியத் யூனியன் 1935-ம் வருஷத்திற்குப் பின் சேர்ந்து, ஏகாதிபத்திய பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய இரண்டுடன் அந்தக் கும்பலின் நடவடிக்கைகளில் கலந்துகொண்டது.

ருஷ்யா 1939-ம் வருஷத்தில் ஜெர்மனியுடன் ஸ்டாலின்-ஹிட்லர் உடன்படிக்கையைச் செய்துகொண்டது. ஹிட்லு

ருடன் ஒன்று கூடிப் போலந்தைத் தாக்கியது; அந்நாட்டைப் பாகம்போட்டுக் கொள்ளுவதில் கலந்துகொண்டது. ஸ்டாலின் - ஹிட்லர் உடன்படிக்கை கையெழுத்தான பிறகு, "பாஸிஸத்திற்கும் கம்யூனிஸத்திற்கு மிடையேயுள்ள பெரிய பகைமைக்கும் இந்த உடன்படிக்கைக்கும் பொருத்தமில்லையே?" என்று ருஷ்யப் பிரதம மந்திரி மாலடோவைக் கேட்டதற்கு, "இதெல்லாம் ருசியைப் பொறுத்த விஷயம்" என்று வழக்கத்துக்கு மாறாக, மனப்பூர்வமான பதில் கிடைத்தது. ஹிட்லரும் என்ன சொன்னார் தெரியுமா? "அடிப்படையில் தேசிய சோஷலிஸமும் மார்க்ஸீயமும் ஒன்றுதான்" என்று 1941 பிப்ரவரியில் செய்த பிரசங்க மொன்றில் குறிப்பிட்டார். (Bulletin of the Royal Institute of International Affairs, Vol. XVIII, No. 5 P. 269.)

திரும்பவும் தேசியம்

கம்யூனிஸ்டு சர்வ தேசியம் கலைக்கப்பட்டதோடும், சோவியத் அரசாங்கத்தின் கீதம் இண்டர்நாஷனேல் (சர்வதேசியத்தை வற்புறுத்தும் கீதம்) 1943-ல் கைவிடப்பட்டதோடும் கொஞ்ச நஞ்ச மிருந்த சர்வதேசியச் சின்னங்களும் ருஷ்யாவிலிருந்து போயே போய்விட்டன. அதுவரை ருஷ்ய மக்கள் புரட்சிகர சோஷலிஸப் பாட்டைப் பாடுவதுண்டு. அந்தப் பாட்டின் மொழி பெயர்ப்பாவது :

எழுங்கள், பட்டினிக் கைதிகளே
எழுங்கள், மாநிலத்தின் துயர மக்களே!
நர்மத்தின் கண்டன இடிமுழக்கம் கேட்குது,
நல்ல உலகம் இதோ பிறக்குது.
பாரம்பர்யத் தளைகள் நம்மை இனிக் கட்ட முடியா.
எழுங்கள், அடிமைக் கூடம் நமக்கு இனி இல்லை.
புது அஸ்திவாரங்களில் மாநிலம் எழும்,
அற்பமதேயமாயிருந்தோம், இனிஎல்லாம் நாமே.
எனவே, தோழர்களே திரண்டு வருக,
கடைசிச் சண்டையில் இறங்குவோம்.
சர்வதேசியமே மனித குலமாகும்.

இதற்குப் பதிலாக ஸ்டாலின் தமது குணத்தை யொட்டி, தற்புகழ்ச்சியும் தேசிய வெறியும் கொண்ட ஒரு கீதத்தைத் தேசிய கீதமாக்கி யிருக்கிறார். அதன் மொழிபெயர்ப்பாவது:

"மக்களிடம் விசுவாசமாக இருக்க ஸ்டாலின் நமக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறார்,

மாபெரும் பராக்ரமக் காரியங்களுக்காக வேலைசெய்து, செயலில் இறங்கச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

யுத்தத்தில் நமது ராணுவத்தை வளர்த்தோம்,

நமது பாதையிலிருந்து கெட்ட படையெடுப்பாளர்களை ஒழிப்போம்,

தலைமுறைகளின் கதியை யுத்தத்தில் நிர்ணயிப்போம்,

நம் நாட்டுக்குப் புகழை நாம் தேடிவருவோம்.

சில வருஷகாலமாக "தேசியத்திற்குத் திரும்பும்" போக்குகள் இருந்ததின் விளைவே இந்தச் செயல்கள் அனைத்தும். 'காற்று எந்தப்பக்கம் அடிக்கிற' தென்பதை இந்த யுத்தம் ஆரம்பமானதற்கு முன்பு இயற்றப்பட்ட சட்டம் ஒன்று நிதர்சனமாக்கியது. உக்ரேனியன், ஜார்ஜியன், டர்க், டார்ட்டர், ஸைபேரியன் ஆகிய "சுயேச்சைக் குடியரசு" களின் பள்ளிக்கூடங்களில் தாய்ப் பாஷைகள் மூலம் இதுவரை சொல்லிக் கொடுக்கப்பட்டவை யெல்லாம் இனி ருஷ்யப்பாஷை மூலமே, என்று—அதாவது ஜாரின் ஆட்சியில் ஆளும் வர்க்கமாக இருந்த மகத்தான ருஷ்ய மக்களுடைய பாஷை மூலமே—சொல்லித்தரப்படு மென்று அந்தச் சட்டம் கூறியது.

மாஸ்கோவில் சர்வதேச கம்யூனிஸ்டுகளின் கூட்டங்களுக்குப் பதிலாக இப்பொழுது சர்வ ஸ்லாவ் மகா நாடுகள் நடக்கின்றன. ஸ்லாவ் ராணுவ வீரர்கள் எல்லாரும் மறுபடியும் வரனளாவப் புகழப்படுகிறார்கள். அப்படிப் புகழப்படுகிறவர்களில், நெப்போலியனுடைய படையெடுப்பை எதிர்த்த ஜாரிஸ்ட் ஜெனரல்களான சுவாரோவ், குட்டுஜோவ் ஆகியவர்கள் இருக்கிறார்கள். மாறுதலடைந்த மனப்பான்மைக்குத் தமாஷான உதாரணம் ஒன்றை ஜார் பீட்டர் தி கிரேட் (புரட்சியின்போது படுகொலையானவன்) விஷயத்தில் காணலாம். புரட்சிக்குப் பிறகு முதல் சில வருஷங்களில் பீட்டர் பெரிய கொடுங்கோலனாகவும் அயோக்யனாகவும் வர்ணிக்கப்பட்டான். அவனால் ஒடுக்கப்பட்ட மக்கள் அவனை வெறுத்தது நியாயமென்றே சித்தரிக்கப்பட்டது. ஆனால், முப்பது வருஷத்தில் ஒருமாறுதல் தென்பட்டது. பீட்டர் தனது கெட்ட குணங்களையெல்லாம் கைவிட ஆரம்பித்துவிட்டான்! புதிய நல்ல குணங்களையடைந்து வந்தான்! கடைசியாக, இப்பொழுது, அவன்தான் மாஸ்கோ நாடகமேடைகளில் கதாநாயகனாகக் காட்சியளிக்கிறான். பீட்டரின் தோற்றம் நாளுக்கு நாள் ஸ்டாலினுடைய தோற்றமாக மாறிவந்ததை மாஸ்கோவில் இருந்த தாக்ஷண்யமற்ற அந்நியப் பத்திரிகைகளின் நிருபர்கள் காணத் தவறிவிடவில்லை. யுத்தம் ஆரம்பமானதி லிருந்து இந்த ராணுவ வெறி கரைபுரண்டு ஓடுகிறது. காவலாளர்பதவிகள் மீண்டும் ஸ்தாபிதமாயின; ராணுவத் தோட்பட்டைகள் திரும்பவும்

வந்தன; ஆபீஸர்களுக்குத் தனிப் படைப் பகுதியும், கிளப்புகளும் அமைக்கப்பட்டன; ரயில்வேயில் வேலைசெய்கிறவர்களுக்குக்கூட மேஜர், கர்னல், ஜெனரல் பட்டங்கள் வழங்கப்பட்டன. யுத்தத்திற்குச் சூட்டப்பட்ட இந்தப் புகழ்மாலைகள், பயங்கரமான அளவை அடைந்துவிட்டன. 1944-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 11-ந் தேதியன்று இந்தியத் தினசரிப் பத்திரிகை யொன்றில் வெளியான டாஸ் செய்தி ஸ்தாபனத்தின் செய்தி யொன்றில் ஸ்டாலின் பரிசுபெற்ற நாவலாசிரியர் இல்யா எஹ்ரன்பர்க் பின்வருமாறு அறிவித்திருந்தார்: "நமது சிப்பாய்களின் ஈட்டி முனையில் உள்ள ரத்தமே இன்பகரமான உலகின் உதயமாகும்; மானிடவர்க்கத்தின் விமோசனமாகும்."

பெரிய வல்லரசு ஒன்று ராணுவ வெறியிலும், தேசிய வெறியிலும் இறங்கினால், ஏகாதிபத்ய வெறியிலும் இறங்குவதை அதனால் தவிர்க்க முடிவதில்லை. இதிலுள்ள உண்மைக்கு அத்தாட்சிகளை வரப்போகிற வாரங்களிலும் மாதங்களிலும் நாம் ஏதேஷ்டமாகக் காணப்போகிறோம்.ருஷ்யாவுக்கும் பக்கத்து நாடுகளுக்கு மிடையேயுள்ள உறவுபற்றி வென்டல் வில்கி இந்த வருஷ ஆரம்பத்தில் வெளியிட்ட அறிக்கை யொன்றுக்குப் பதிலளிக்கும் முறையில் பிராவ்தா வில்கியை நோக்கி: "இவை எல்லாம் எங்கள் உள்நாட்டு விவகாரங்கள்!" என்று உறுமியது. வில்கிக்கு ஸ்டாலின் அனுப்பிய இந்த "இங்கே கை வைக்காதே" எச்சரிக்கைக்கும் சென்ற வருஷம் வில்கி இந்தியாவுக்கு விஜயம் செய்ய விரும்பியபோது அதேபோல சர்ச்சில் விடுத்த எச்சரிக்கைக்கு மிடையே என்ன வித்தியாச மிருக்கிறது? போலந்தின் சுதந்தரத்தைப் பாதுகாக்கவே யுத்தத்தில் இறங்குகிறோம் என்று பறைசாற்றப்பட்டு, 1939-ல் இந்த யுத்தம் ஆரம்பமாயிற்று. போலந்து ஒடுக்கப்படுவதுடன் இந்த யுத்தமும் முடிவடையும் போல் இருக்கிறது! என்ன பரிதாபம் இது!! போலந்தின் கிழக்குப் பாதி ருஷ்யாவுடன் சேர்க்கப்படுமா இல்லையா என்பது பற்றிப் பல ஹேஷ்யங்கள் கிளம்பியுள்ளன. இன்னும் சரியாகப் பிரச்னை போதிய அளவுக்கு உணரப்படவில்லை.போலந்தின் மேற்குப் பாதியின் சுதந்தரம், மற்றும் கிழக்கு, மத்திய ஐரோப்பாவில் உள்ள நாடுகளின் சுதந்தரம் ஆகியவைக்கும் அபாயம் வந்திருப்பது உணரப்படுகிறதா?

லண்டனிலுள்ள போலிஷ் சர்க்காரை "பாஸிஸ்ட்" சர்க்கார் என்று பெயர் கொடுத்து, அதைக் கேவலப்படுத்துவதில் மாஸ்கோ இப்பொழுது ஈடுபட்டிருக்கிறது. மேற்குப் போலந்திலும் பொம்மைச் சர்க்கார் ஒன்றைச் சிருஷ்டிக்க இது பூர்வாங்கமாகும்.* அந்தப் போலிஷ் சர்க்காரைப் பாஸிஸ்ட் சர்க்கார் என அழைப்பது நியாயமா என்பதைக் கவனிக்கப் போலிஷ் மந்திரி சபையின் தன்மையை ஆராய்ந்து பார்ப்போம். பிரதம மந்திரி, விவசாயிகள் கட்சியின் பிரதிநிதி. மூன்று சோஷலிஸ்டு மந்திரிகள், போலிஷ் சோஷலிஸ்டு கட்சியின் மந்திரிகள். அந்தக்கட்சி, பிரிட்டிஷ் தொழிற்கட்சியில் உள்ள லேபர், சோஷலிஸ்டு இன்டர் நாஷனல் என்ற சர்வதேசத் தொழிலாளர் சங்கத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் ஒருவர் உதவி (டெப்டி)ப் பிரதம மந்திரி. மற்றும் இருமந்திரிகள் கிறிஸ்துவத் தொழிலாளர் கட்சியின் பிரதிநிதிகள். இருவர் தேசிய ஜனநாயகக் கட்சியினர் (கன்ஸர்வேடிவ்கள்); பாக்கி மூன்று மந்திரிகள் எந்தக் கட்சியையும் சேர்ந்தவர்களல்ல. எனவே, இதைப்போல மந்திரி சபைக்கு பாஸிஸ்ட் பட்டம் சூட்டுவதை, மிகவும் முற்போக்கான ஸோஷல் ஜனநாயக தேசங்களில் ஒன்றாகிய பின்லாந்துக்கு "பாஸிஸ்ட்" பட்டம் சூட்ட நடக்கும் முயற்சியுடன்தான் ஒப்பிடவேண்டும்.

இதைப்போன்ற பிரசாரங்களெல்லாம் தேசத்தையே கபளீகரம்செய்ய நடக்கும் கெட்ட எண்ண ராஜதந்திர ஏற்பாடுகளே. போலந்து விஷயத்தில் இந்தப் பிரசாரம் போலிஷ் சர்க்காரின் சரணாகதியிலும் அந்தச் சர்க்காரைப் பொம்மைச் சர்க்காராக மாற்றுவதிலும் முடிவடையும்; அல்லது, போலிஷ் சர்க்காருக்குப் பதிலாகப் பொம்மைச் சர்க்கார் ஒன்று அமைக்கப்படுவதில் முடிவடையும்.

இவ்வளவையும் ஸ்டாலினே ஒப்புக்கொண்டிருக்கிறார். எப்படியென்பதைக் கவனிப்போம். ருஷ்யாவுக்குப் பிற நாடுகளைப் பிடிக்கும் ஆசை யிருப்பதாகச் சிலர் சந்தேகிப்பது கேலிக்கூத்தாக இருப்பதாக ஸ்டாலின் சொன்னார்; அதே சமயத்தில் தமது கொள்கையையும் விளக்க முனைந்து, அக் கொள்கை தம் "தேசப் பாதுகாப்புத் தந்திர முக்கியத்வத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்

* இந்த ஹேஷ்யம் பிற்பாடு பலித்திருக்கிறது.

பொருட்டு எழுந்ததாகவும், அத்தேவைகளைப் பூர்த்தி செய்யக் கிழக்கு ஐரோப்பாவில் பிரதேச, ராஜீய நிலைகளை மீண்டும் "ரிப்படுத்தி" ஆகவேண்டுமென்றும் சொன்னார், என்று 1944ம் வருஷ பிப்ரவரி மாத 20-ந் தேதி லண்டன் அப்ஸர்வர் இதழில் மாஸ்கோ நிருபரின் செய்தி யொன்று பிரசுரமாகி யிருக்கிறது.

ஹாலி பாலிட் ஒரு சமயத்தில் 'தொல்லை' பொறுக்காமல் உள்ளத்தில் இருந்ததைக் கக்கிவிட்டார்: "ருஷ்யாவுக்கும் போலந்துக்குமிடையே சமரஸ மேற்படுவதற்காக பிரிட்டிஷ், அமெரிக்க ராஜ தந்திரிகள் தங்களுடைய செல்வாக்கை உபயோகிக்க வேண்டும் என்று நிரம்பச் சூடிகையாக யோசனை கூறுகிறவர்களுக்கு, சர்ச்சிலுக்கும் காந்திக்குமிடையே சமரஸ மேற்படுவதற்காக ஸ்டாலின் தமது செல்வாக்கை உபயோகிக்க வேண்டும் என்று சிலர் சொன்னால் எவ்வாறு மனவேதனை யேற்படுமென்பதைச் சற்று நிதானமாக ஆலோசித்துப் பார்க்கவேண்டும்." ஆனால் ருஷ்யா ஏன் தலையிட வில்லை யென்று பாலிட் சிந்தனை செய்ய வில்லை. ருஷ்யா சோஷலிஸ்டு ராஜ்யமாக அல்லது ஏகாதிபத்திய-எதிர்ப்பு ராஜ்யமாக இருந்தால் இந்தியப் பிரச்னையில் தலையிட்டிருக்கும் என்பது கூட அவர் மூளைக்கு எட்டவில்லை. இந்தியப் பிரச்னை பிரிட்டனின் வீட்டு—சொந்த—விவகாரம். அதே போல, போலந்தும் ருஷ்யாவின் வீட்டு—சொந்த—விவகாரம் என்றே தம் மனத்திற்குப் பட்டிருப்பதை அவர் வெளிப்படுத்தினார்!

மற்ெருரு ‘காமன்வெல்த்’

சோவியத் அரசியலமைப்பில் மாறுதல் ஏற்படுவதை அறிவிக்கும் பிரகடனம் ஒன்று சமீபத்தில் மாஸ்கோவிலிருந்து வந்தது. சோவியத் யூனியனில் பகுதியாகவுள்ள குடியரசுகளுக்கு ராஜதந்திர சுயேச்சை உண்டு என்று பிரகடனத்தில் சொல்லப்பட்டது. அதிசயம் என்னவென்ருல், அந்தக் குடியரசுகள் எப்போதும் சுயாட்சியாகவே இருக்கின்றன; எப்போது வேண்டுமாளுலும் பிரிந்து போகவும் உரிமையுண்டு என்பது ஐதீகமாகும். இதை விளக்கி டேவிட் எழுதுகிருர்:

“யூனியனிலிருந்து பிரிந்து போக இந்த சோஷலிஸ்டுக் குடியரசுகளுக்குப் பேச்சளவிலும், எழுத்தளவிலும் தான் சுதந்தரமுண்டு. உண்மையில், அந்தச் சுதந்தரம் ஏட்டுச் சுரைக்காய் தான். பெடரல் சர்க்காரும், கிரெம்லினும் (ஸ்டாலினும்) கூடப் பிரிவினையைச் சகிக்கா.” சட்டதிட்ட மினுமினுப்புகள் எம் மாத்திரம், ருஷ்ய ரகசியப் போலீஸின் பயங்கர சக்தி எவ்வளவு தூரம் என்பதை அறிந்தவர்கள், முக்கியமாகப் பக்கத்து நாடுகளைச் சுலபமாகக் கபளீகரம் செய்ய ஒரு திரை மறைவாகவே இந்தச் சுயாட்சி உபயோகிக்கப்படுகிற தென்பதையும் அறிவார்கள். இந்தத் திரைமறைவு இல்லாத காரியம், அந் நாடுகளின் மக்களைத் தூண்டி, தேசிய உத்வேகத்தால் ருஷ்யரை எதிர்க்கத் தூபம் போடும்; ருஷ்யாவுடன் இப்போது தங்களுக்குள்ள உறவை ரத்துச் செய்யும்படி பிரிட்டனையும் அமெரிக்காவையும் கிண்டிவிடும். எனவே, ருஷ்ய சர்க்காருக்கும் சொந்த சாம்ராஜ்ய மிருக்கும்; கண்டிக்கிற சர்ச்சிலைப் பார்த்து, “ஸர் ஏ. ராமஸ்வாமி முதலியாரோ அல்லது ஸர் முகம்மத் உஸ்மாளுே இந்தியாவுக்குப் பிரதிநிதியாகச் சமாதான மகாநாட்டில் கலந்து கொள்ளலாமென்ருல், வாஸிலேவ்ஸ்கா ஏன் போலந்தின் பிரதிநிதியாக இருக்கலாகாது, அல்லது டிட்டோ யுகோஸ்லேவியாவுக்காகக் கையெழுத்துப் போடக்கூடாது?” என்று கேட்க முடியும்.

இதே பொருள்படும்படி, ஆளுல், நேசநாட்டுடன் பழகுகையில் கையாளவேண்டிய அர்த்த புஷ்டி நிறைந்த நளினமான

வார்த்தைகளைக் கொண்டு, லண்டன் இகானமிஸ்ட் 1944-ம் வருஷ பிப்ரவரி மாத 5-ந் தேதி இதழில் பின்வருமாறு எழுதியிருக்கிறது:

"பிரத்யக்ஷங்களிலேயே மார்ஷல் ஸ்டாலின், மாலடோவ் இருவரும் குறியாக இருக்கின்றார்கள். வாழ்வானாலும், தாழ்வானாலும் அந்தப் பதினாறு வல்லரசுகளும் ஒன்றுபட்டே இருக்கும். ஏனெனில், கம்யூனிஸ்டுக் கட்சி செய்யும் வேலையும், ரகசியமாகக் காரியங்களைத் தீர்ப்பதற்கென்றே நிறுவப்பட்டுள்ள போலீஸின் நடவடிக்கைகளும் சட்டதிட்டத்திற்குக் கட்டுப்படும் வகையில் இருக்கா. எனவே, சட்டம் பேசும் வக்கீல், அரசியலமைப்பில்-சட்டதிட்டத்தில்—தம் கட்சிக்கு ஆதாரம் தேட முடியவே முடியாது. ...மற்றொரு நோக்கமும் உண்டு. அதாவது, 1938-ல் சோவியத் யூனியனில் இல்லாத புதிய பிரதேசங்களை சோவியத் யூனியனுக்குள் சேர்த்து, பிற்பாடு உலக வல்லரசுகளின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக இப்போதே ஹேதுவான நிலைமையை உண்டாக்குவதாகும்.

"1936-ம் வருஷ அரசியலமைப்புப்படி, ஒவ்வொரு குடியரசுக்கும் யூனியனிலிருந்து பிரிந்துபோகும் உரிமையுண்டு. அந்த உரிமையே இப்போது அழுத்தந் திருத்தமாக மீண்டும் சொல்லப்படுகிறது; ஆனால், பிரிவினைக் கிளர்ச்சி தடுக்கப்படுகிறவரை, ராஜாங்கத் துரோகமாகப் பாவிக்கப்படுகிறவரை, பிரிவினை உரிமைகளைவக்குதவப் போவதில்லை. முப்பதாவது வருஷ ஆரம்பத்தில், எல்லாக் கிளர்ச்சிகளும்-பிரிவினைக் கிளர்ச்சி மாத்திரமின்றி, இன்னும் அதிகச் சுயாட்சி வேண்டுமென்ற கிளர்ச்சியும்—உக்ரேன், பைலோ ருஷ்யா, காகஸஸ் ஆகியவற்றில் ஒடுக்கப்பட்டன. முப்பதாவது வருஷக் கடைசியில், அதைப்போல ஆசியக் குடியரசுகளில் எழுந்த அபிலாஷைகளும் அதேபோல ஒடுக்கப்பட்டன. அடிப்படையில் மாறுதல் ஏற்பட்டிருப்பதாக நினைக்க எதுவும் இல்லை."

இதற்கு ஒரு நாள் முன்பு, 1944-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 4-ந் தேதி, "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகை, கிண்டல் செய்கிற நினைப்பில்லாமலே, பின்வருமாறு எழுதியிருக்கிறது:

"உண்மையில், பல நாடுகள் கொண்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் போல ருஷ்யரும் சோவியத் குடியரசுகள் கொண்ட சாம்

ராஜ்யம் ஒன்றை ஸ்தாபிக்க விரும்புகிருர்கள் போலத் தோன்று கிறது. சாம்ராஜ்ய எண்ணத்தை உருவாக்கிய பிரிட்டிஷார், ருஷ்யரின் நோக்கத்தைத் தங்களுக்கு அளிக்கப்பட்ட புகழ் மாலே யாகக் கருதலாம்.''

நாஜி ஆக்கிரமிப்பை எதிர்த்துத் தன்னேப் பாதுகாத்துக் கொள்ள ருஷ்யா தயாராகவேண்டிய சமயத்தில் ருஷ்ய உள்நாட்டு, வெளி நாட்டுக் கொள்கைகளின் இந்தத் துர்ப்பாக்கிய அம்சங் களேத் தவிர்ப்பதற்கில்லே; ஆனல், யுத்தம் முடிவடைந்த பிற் பாடு சோஷலிஸ்டு சமூக அமைப்பு நோக்கி ருஷ்யா முன்னேறும் என்று சில வட்டாரங்களில் வற்புறுத்தப்படுகிறது. இந்த நிச்சய நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்ள எல்லா சோஷலிஸ்டுகளும் விரும்புவார்கள். ஆனல், இந்த நம்பிக்கையோ குருட்டு, செவிட்டு நம்பிக்கையாகவே இருக்கிறது. “அந்தச் சர்க்கார் கம்யூனிஸத் தில் தனது பக்தியைப் பறைசாற்றிக் கொண்டே, கிரியாம்சத்தில் சென்ற எட்டு வருஷங்களில் போனதைப் போல இனியும் அடிக் கடி வலது சாரியில், இன்னும் அதிகமாக, முன்னேறும் என எதிர்பார்க்கிறேன்'' என்று டேவிஸ் எழுதுகிருர்.

சோஷலிஸ ராஜ்யமா?
முதலாளித்துவ ராஜ்யமா!

ருஷ்யாவை சோஷலிஸ்டு ராஜ்யமென்று மூளை மழுங்கிய வர்களே இப்போது சொல்லுவார்கள். சோஷலிஸ்டு சமூகத்திற்கு அத்தியாவசியமான மூன்று தன்மைகளில் ஒன்றைக்கூட அதிலே காணமுடியவில்லை. அது வர்க்கமற்று இல்லை; ஜன நாயகமாக இல்லை; சர்வதேசிய மாகவும் இல்லை. இதிலிருந்து சோவியத் ஆட்சி புகழைப் பெறக்கூடிய பெரிய காரியங்களைச் சாதிக்க வில்லை என்று சொல்லுவதற்கில்லை. சர்க்கார் தனது நாட்டைக் கைத்தொழில் மயமாக்கி யிருக்கிறது. விவசாயம் செழிப்புற மேலும் பலமான அஸ்திவாரத்தைப் போட்டிருக்கிறது. வாழ்க்கை வசதிகளை உயர்த்தி யிருக்கிறது. இதர நாடுகளுக்கு இதுவரை அசாத்யமாகியிருக்கிற வேகத்தில் எழுத்தறிவைப் பரப்பியிருக் கிறது. ஆனால், இந்தச் சாதனைகளிலெல்லாம், குறிப்பான சோஷலிஸ்டுத் தன்மை எதுவுமில்லை. இவையெல்லாம் திறமை வாய்ந்த முதலாளித்துவ, பாஸிஸ ராஜ்யங்களின் லட்சியங்களு மாகும். உண்மையில், ருஷ்ய ஆட்சியானது "கிரியாம்சத்தில் கம்யூனிஸ தத்துவத்தைக் கைவிட்டிருக்கிறது. லாபம் ஒன்று தான் சர்க்கார் கண்டுபிடித்த நிரந்தரமான, கண்டிப்பான ஆரம்ப முயற்சியான தூண்டுகோலாகும்," என்று டேவிஸ் கூறுகிறார். சரி. இந்த நிலையில் ருஷ்யாவை முதலாளித்துவ நாடு என்று அழைக்கலாமா? 'கூடாது' என்பதே இதற்கும் பதில் என்று நான் நினைக்கிறேன். எந்த ராஜ்யமும் சோஷலிஸ அல்லது முதலாளித்துவ ராஜ்யமாகத்தான் இருந்தாகவேண்டும் என்ற கண்டிப்பு எதுவுமில்லை யென்பதை ருஷ்யாவிலும் மற்றும் சில நாடுகளிலும் சமீபத்தில் நடந்தவை நிரூபிக்கின்றன. உண்மை யில், மூன்றாவது ரக ஆட்சியொன்று சாத்தியம். அது இப்போதே உருவாகி வருகிறது. இப்போது அதை நீங்கள் காணக் கூடிய தேசங்களில் ருஷ்யாவும் ஒன்று.

அதைப்போன்ற ஆட்சியைப் 'பாஸிஸ்ட்' ஆட்சி என்று அழைக்க யாரும் தயங்குவர். ஏனெனில், 'பாஸிஸ்ட்' என்பது சமீப வருஷங்களில், சாஸ்திரீய வர்ணனைப் பதமாக உபயோக மாவதை விட அதிகமாகத் தூஷணைப் பதமாகவே உபயோகமாகி யிருக்கிறது. இந்தக் காலத்தில் சிலர் தங்களுக்குப் பிடிக்காததை யெல்லாம் 'பாஸிஸ்ட்' என்கிறார்கள். எனவே, ஆத்திரத்தோடு இந்த வார்த்தை அணுகப்படுவதால், இதைத் தவிர்ப்பதே நல்லது. ருஷ்யாவைப் புகழவோ, கண்டிக்கவோ, தர்ம வழியைப் பின் பற்றுகிறதா, அதர்ம வழியைப் பின்பற்றுகிறதா என்று தீர்ப்புக் கூறவோ இங்கே நான் முனையப் போவதில்லை. அதைப் புரிந்து கொள்ளவும், அதன் அனுபவத்திலிருந்து நாம் விஷயங்களைக் கற்றுக் கொள்ளவுமே முயலுகிறேன். இந்தக் காலத்தில் ருஷ்யா அடிக்கடி "அரசாங்க முதலாளி" (State Capitalist) என அழைக்கப்படுகிறது. அதாவது, சமூகமே முதலாளித்துவ சமூக மாக இல்லாத போதிலும், சர்க்கார் மாத்திரம் முதலாளித்துவ மாக இருப்பதாக வர்ணிக்கப்படுகிறது. இது சரியல்ல. அதைப் போல ஆட்சிக்குச் சரியான பதம் ஒன்றை, நன்கு சிந்தனையைத் தூண்டும் மானேஜிரியல் ரெவொல்யூஷன் (நிர்வாக முறைப் புரட்சி) என்ற தமது புஸ்தகத்தில் ஜேம்ஸ் பர்ன்ஹாம் சிருஷ்டித் திருக்கிறார். அதாவது, மானேஜரியல் ஆட்சி. அது சோஷலிஸ்டு ஆட்சியுமல்ல, முதலாளித்துவ ஆட்சியுமல்ல. நிர்வாகத்தை நடத்துகிற எதேச்சாதிகாரிகள், கைத்தொழிலை நடத்துகிற மானேஜர்கள் ஆகிய இருவரும் இந்த மானேஜரியல் சர்க் காரில் அதிகாரத்தை வகிப்பார்கள். மானேஜரியல் ராஜ்யம், சோஷலிஸ்டு ராஜ்யம் இரண்டுக்கு மிடையேயுள்ள ஒற்றுமை அம்சம் என்னவென்றால், இரண்டிலும் உற்பத்தி, விநியோகம், பரிவர்த்தனை ஆகியவற்றிற்குச் சாதனங்களாகச் சொந்தச் சொத் துக்கள் உபயோகிக்கப்பட வில்லை. கைத்தொழில் எல்லாமும், மற்றும் பல தொழில்களும் சர்க்காருக்கே சொந்தமாக இருக் கின்றன, அல்லது சர்க்காரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. சோஷலிஸ்டு ராஜ்யத்திற்கும் இதற்கும் வித்தியாசமென்ன என்றால், சோஷலிஸ்ட்டு ராஜ்யத்தில் சர்க்காரே சமூகத்திற்கு, அதாவது, பொதுமக்களுக்குச் சொந்தம்; ஆனால், மானேஜரியல்

ராஜ்யத்தில் சர்க்காரும் அதன் "தேசிய மயமான பொருளாதாரமும்" ஜனங்களின் கட்டுப்பாட்டில் இல்லை; ஆனால் எதேச்சாதிகாரிகள் அல்லது மானேஜர்கள் கொண்ட சிறிய கோஷ்டியின்—சர்வாதிகாரத்தைச் செலுத்துகிற கோஷ்டியின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. "உயிர் இல்லாமல் உடல் மாத்திரம் உள்ள சோஷலிஸமே எதேச்சாதிகார ஆட்சி" என்று மற்றொரு ஆசிரியர் சொல்லுகிறார். சமூக அமைப்பில் அடுத்த கட்டம் மானேஜரியல் சமுதாயமாக இருக்கக்கூடுமே யொழிய சோஷலிஸ சமுதாயமாக இருக்காது என்று பர்ன்ஹாம் சொல்லுகிறார். மனுஷ்யன் சிருஷ்டித்துள்ள பெரிய இயந்திரங்கள்—கைத்தொழில்கள், ராஜீய இயந்திரங்கள்—மீது கட்டுப்பாடு அதிகாரம் செலுத்த அவனுக்கே இப்பொழுது போதிய சக்தி இல்லாதிருக்கலாம். அராஜகம், திறமை யின்மை, குளறுபடிகள் ஆகியவை நிறைந்த பழைய ரக முதலாளித்துவம் காலாவதியான போதிலும், சோஷலிஸ ஆட்சிக்கு மனிதன் இன்னும் பக்குவமாக வில்லை.

முக்யமான தென்னவெனில், **ஸோவியத் ருஷ்யா** என்ற நூலில் எரிக் ஸ்டிராஸ் கூறியிருப்பதுபோல, "சரித்திரத்திலேயே மிகவும் பரிதாபமான போக்கை இருபது, இருபத்திரண்டு வருஷங்களில் சோவியத் முறையும் கம்யூனிஸ்ட் கட்சியும் அநேகமாகப் பூர்த்திசெய்து விட்டன" என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும். இல்லையேல், சோஷலிஸத்தையும் சோவியத்துக்களையும் சேர்த்துக் குழப்பி, சோஷலிஸத்துக்கு ஆபத்தைத் தேடுவோம். சோஷலிஸ தத்துவத்தை விஷமத்தனமான வியாக்யானத்திலிருந்தும், கேலிக்கூத்திலிருந்தும் பாதுகாக்க வேண்டுமானால், அதை (சோஷலிஸ தத்துவம்) அதன் ருஷ்ய திரிசமத்திலிருந்து பரிபூரணமாகப் பிரித்தாக வேண்டும்.

உலகின் சில பாகங்களில் இரவு நேரத்திலேயே இருட்டுக் கம்மியாகப் போய் வெளிச்சம் வருவதுபோலத் தெரியும் என்றும் பொழுது விடிந்துவிட்டதாக மனுஷ்யர்கள் தவறாக நினைப்பார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், இந்த மாயமான வெளிச்சம் மறுபடியும் மறைந்து, இருட்டு நீடிக்கிறது. சில மணிநேரம் கழித்தே சூரியன் உதயமாகிறான். சோஷலிஸ்ட் நாளின் போலி

உதயமே 1917-ம் வருஷப்புரட்சி என்று, வருங்காலத்தில் சரித்திராசிரியர் வர்ணிக்கக் கூடும். மாத்யூ ஆர்னல்டு சொல்லியதைப்போல நாம்,

"இரு உலகுக்கு மிடையில் வசிக்கிறோம்; அவற்றில் ஒன்று மாண்டது; மற்றொன்று பிறக்கச் சக்தியற்று இருக்கிறது."

புதிய நாள்

அனுபவம் என்ற வார்த்தைக்கு "ஒவ்வொருவரும் தங்களுடைய தவறுகளுக்குத் தரும் பெயர்" என்று ஆஸ்கார் வைல்ட் வியாக்யானம் செய்திருக்கிறார். எனவே, சென்ற இருபத்தைந்து வருஷ அனுபவத்தைக் கொண்டு சோஷலிஸத்தை விமர்சனம் செய்ய விரும்புகிற யாரும் ஓரளவுக்குத் தங்கள் செயல்களைத் தாங்களே குறை கூறிக் கொள்ளுவ தாகும்.

இருபத்தைந்து வருஷம் என்ற இந்தக் கணக்கு எதற்கு? சோஷலிஸத்தை அணுகும் வகை, சோஷலிஸத்தில் நம்பிக்கை ஆகியவற்றை மறுபடியும் சீர்தூக்கிப் பார்க்க இருபத்தைந்து வருஷம் சரியான காலம் என்றே என் மனதிற்குப் படுகிறது. ஏனெனில், சென்ற மகாயுத்தம் முடிவடைந்து இருபத்தைந்து வருஷங்கள் ஆகின்றன; "இனி யுத்தம் கிடையாது" என்று எங்கு பார்த்தாலும் ஜனங்கள் கங்கணம் கட்டிக்கொண்டு இருபத்தைந்து வருஷங்கள் ஆகின்றன; ருஷ்யப் புரட்சி நடந்தும் இருபத்தைந்து வருஷங்கள் ஆகின்றன. உலகில் அநேகமாக எல்லாக் கஷ்டங்களையும் போக்கவல்லது சோஷலிஸம்தான் என்ற நம்பிக்கை ஏற்பட்டதற்குச் சில அடிப்படை ஊகங்கள் காரணம் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம். மனுஷ்யன் எப்போதுமே நல்லவன், ஆனால் ஆட்சி முறைதான் கெட்டது என்பவைதான் அந்த ஊகங்கள். அராஜகம், "ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நலன்களைப் பார்த்துக் கொள்ளவேண்டியது; வரிசையில் கடைசியாக இருக்கிறவர்கள் எக்கேடும் கெடட்டும்" என்ற தத்துவம், லாபம் சம்பாதிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் விடாப்பிடியான பற்றுதல், பணக்காரனுக்கும், கதியற்ற, சொத்து இல்லாத ஆண், பெண், குழந்தைகளுக்கும் போட்டி ஆகிய அம்சங்கள் கொண்ட முதலாளித்துவம் பகைவகை—மனுஷ்யனுக்கும் சந்தோஷ உலகுக்கு மிடையே தடையாகத்—தோன்றியது. பாட்டாளி மக்களை ஏழையாக வைப்பது முதலாளித்துவம், தன் செலவுக்குப் பிறரை நம்பியிருக்குமாறு அடிமை நிலையிலும்

சமூகத்தில் தாழ்வான நிலையிலும் மாதரை வைத்தது முதலாளித் துவம், விபசாரம் மற்றும் இதர சமூகத் தீமைகளுக்குக் காரணம் முதலாளித்துவம், சிறுவரைப் படிப்பின்றி ஒன்று மறியாதவர் களாய் வைத்திருப்பது முதலாளித்துவம், எல்லாவற்றையும் விட முக்கியமாக, அடிக்கடி யுத்தங்கள் நடப்பதைத் தவிர்க்க முடியாததாகச் செய்ததும் முதலாளித்துவம்தான். எனவே, முதலாளித்துவத்தை அழித்து, அதற்குப் பதிலாக சோஷலிஸத்தை நிலைநாட்டினல், மானிட வர்க்கத்தின் கஷ்டங்கள் அனைத்தும் மறைந்து விடும்.

நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இவைதான்: முதலாளித்துவ முறையை ஒழிக்கவேண்டும், பொருளாதாரத் துறைக்கு ஜனநாயகத்தைக் கொண்டுவருவதற்காகத் தனி உடைமையை ஒழிக்கவேண்டும், உற்பத்தி, விநியோகம், பரிவர்த்தனை ஆகியவற்றிற்கு வேண்டிய சாதனங்களைத் தேசிய மயமாக்கவேண்டும்—அல்லது சர்க்காருக்கே சொந்தமாக்க வேண்டும்.

"சக்திக்கு ஏற்ற உழைப்பு, தேவைக்கு ஏற்ற ஊதியம்" என்ற கோஷத்தை வர்க்கமற்ற சமூகம் அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும். பிறகு, சமூகம் பூராவும் ஒரே குடும்பம்போல இருந்து, சாசுவதமாகச் சந்தோஷமாய் வாழும்! 'சுதந்திரமாகவும் சமத்துவமாகவும் உள்ள சமூகம்' என்று சோஷலிஸ்ட் சமூகத்தை லெனின் வர்ணித்து, அங்கே தனி மனிதனின் சாமர்த்தியம் செழித்தோங்கப் பரிபூர்ண சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். இவையெல்லாம், சோஷலிஸச் சிந்தனைகொண்ட கோஷ்டிகளின் ஊகங்களாகும். இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற முற்போக்கான ஜனநாயக நாடுகளில் இந்த மாறுதலைச் செய்ய முடியும்; துப்பாக்கிகள். மூலமல்ல; தேர்தல் சீட்டுப் பெட்டிகள் மூலம், என்றுசமூக ஜனநாயகக் கட்சியினர் வற்புறுத்தினார்கள். ருஷ்யாவில் நடந்ததுபோல ஆயுதந்தாங்கிய புரட்சி நடந்தால்தான் அந்த மாறுதல் உண்டாக முடியும். எதிரிகளை எல்லாம் திடீரெனக் கவ்வவேண்டும்; புரட்சிகரக் கட்சி (அதாவது தனது சொந்தக் கட்சி) பாட்டாளி மக்களுடைய சார்பில் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும், என்று கம்யூனிஸ்டுகள் வாதம் செய்தார்கள். பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் கொஞ்சக் காலத்திற்கு

இருந்த பிறகு, வர்க்கமற்ற சமூகம் நிலைநாட்டப்படும், சர்க்கார் என்பது மறையும், சோஷலிஸ்ட் சமூகத்தில் ஜனங்கள் இருப்பார்கள். முதலாளித்துவத்திற்குப் பதிலாக வரக்கூடியது சோஷலிஸம்தான் என்பதில் சகல ரக சோஷலிஸ்ட் கோஷ்டிகளும் அபிப்பிராய ஒற்றுமை கொண்டிருந்தனர். சோஷலிஸம் சர்வதேச தத்துவம், அதன் விளைவாக உலக ஐக்யமும் சர்வதேச சகோதரத்துவமும் ஏற்படும் என்று எல்லா சோஷலிஸ்டுகளும் நம்பினார்கள். இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு இந்த ஊகங்கள் எல்லா சோஷலிஸ்டுகளுக்கும் இருந்திருப்பதாலேயே இவற்றை இங்கே குறிப்பிட்டிருக்கிறேன். அவற்றைப் பகைப்புலனைக் கொண்டே சென்ற இருபது வருஷ காலத்தில் நடந்தவற்றை நாம் பரிசீலனை செய்யமுடியும்.

சமூக ஜனநாயகக் கொள்கையினர்

சமூக ஜனநாயகம், கம்யூனிஸம் இரண்டையும் வெவ்வேருக ஆராய்ந்தால் தெளிவாகப் புரியும். இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி ஆகிய முற்போக்கான நாடுகளில் சமூக ஜனநாயகத்தின் கதை நமக்கு மிக நன்ருகத் தெரியும். பல வீனம், தலைமைப் பஞ்சம், தான் மேற்கொண்டிருப்பதாகப் பறை சாற்றும் தத்துவத்திலேயே நம்பிக்கையின்மை நிறைந்தது அந்தக் கதை. "எல்லாம் படிப்படியாகத் தானே, வேறு வழி ஏது?" என்று சமூக ஜனநாயகக் கொள்கையினர் சொல்லிக் கொண்டே, சோஷலிஸத்தை நோக்கி முன்னேற மறுத்துவிட்டார்கள். ஆரம்ப முயற்சியும், சக்தியும் ஜெர்மன் சமூக ஜனநாயகக் கொள்கையினர் கையிலிருந்து ஹிட்லர் கைக்கு மாறின. ஜனநாயக சாதனங்கள் மூலம் சமூகப் புரட்சியை உண்டாக்கப் பலதடவைகளில் கிடைத்த சந்தர்ப்பங்களை உபயோகித்துக் கொள்ள இங்கிலாந்தில் மாக்டொனல்டும், பிரான்ஸில் புளூமும் தவறிவிட்டார்கள். தனி நபர் இயல்பில் இவர்களுக்குள்ளே வித்தியாசம் நிறைய இருக்கிறதென்ருலும், கிடைத்த சந்தர்ப்பங்களை உபயோகிக்கத் தவறிய குற்றத்தை இருவரும் சரிசமமாகவே செய்திருக்கிருர்கள். 1926-ம் வருஷ பிரிட்டிஷ் ஜெனரல் ஸ்ட்ரைக் (பொது வேலை நிறுத்தம்) அடைந்த வெற்றி குறித்து, தொழிற் சங்கக் காங்கிரஸின் ஜெனரல் கவுன்ஸில் வேறு யாரையும் விட அதிகப் பீதியடைந்தது. ஏனெனில், அந்த வெற்றியின் விளைவாகப் புரட்சிகரமான மாறுதல் ஏற்படுவது சாத்தியம்.

இந்த நாடுகளிலெல்லாம் இந்தக் குறிப்பிட்ட காலத்தில் தொழிற் சங்கத்தில் எதேச்சாதிகாரக் கோஷ்டி தோன்றியதைக் காணலாம். இந்தக் கோஷ்டியார், சாதாரணத் தொழிலாளர்களை விட அதிகமாகச் சம்பளம் வாங்குவதாலும், சாதாரணத் தொழிலாளர் செய்யும் வேலையைவிட உயர்வான வேலை செய்வதாலும் தாங்கள் உயர்வானவர்களெனக் கருதி, இதரர்களிட

மிருந்து மாறுபட்டு, சமூகத்துறையில், முதலாளித்துவ உலகில் சர்வ சகஜமாக, சிநேக முறையிலேயே பழகினார்கள்.

சமூக ஜனநாயக இயக்கங்களில் மற்றொரு முக்கிய வளர்ச்சி என்னவென்றால், கொஞ்சங் கொஞ்சமாக யுத்த எதிர்ப்பு, ஏகாதிபத்ய எதிர்ப்பு நிலையிலிருந்து, யுத்த ஆதரவு, ஏகாதிபத்ய ஆதரவு நிலைக்கு வந்ததாகும். ராம்ஸே மாக்டொனால்டு யுத்த எதிர்ப்பாளராக நிரம்பக் காலமாக இருக்கிறார் என்பதற்காகச் சென்ற மகாயுத்தம் முடிந்தவுடன் அவரைத் தனது தலைவராகத் தேர்ந்தெடுத்த அதே பிரிட்டிஷ் தொழிற் கட்சி, யுத்தம் வந்தால் ஜெனரல் ஸ்ட்ரைக் செய்யவேண்டுமென்று வருஷா வருஷம் தீர்மானங்களை நிறைவேற்றிவந்த அதே தொழிற் கட்சி, சர்ச்சிலின் யுத்தமந்திரி சபையில் சேர்ந்துகொண்டதன் மூலம், பழைய பேச்சுக்களையும் எழுத்துக்களையும் மூட்டை கட்டிவிட்டது. மனத் தளர்ச்சிதரும் இந்தப் படலத்திலிருந்து வேறு சில சிறிய நாடுகளின், குறிப்பாக ஸ்வீடன், டென்மார்க், நார்வே, பின்லாந்து ஆகிய ஸ்கான்டினேவியக் கோஷ்டியின் சாதிப்புகளில் கவனத்தைத் திருப்புவோம். இந்த நாடுகளில் பொருளாதார சமூகத் துறைகளில் ஜனநாயகம் கொஞ்சம் கொஞ்சமாக வியாபித்திருக்கிறது. கவனத்திற்கும் பாராட்டுக்கும் அவை அருகதை யுள்ளவையாக இருக்கிற போதிலும், போதிய கவனத்தையோ புகழையோ அவை பெறவில்லை. 1939-ல், யுத்தம் ஆரம்பமான சமயத்தில், எந்தெந்த நாடுகள் சோஷலிஸ சமூகத்தை நோக்கி வெகுதூரம் முன்னேறி யிருந்தன என்று என்னை யாராவது கேட்டால், இந்த நாடுகளைத்தான் சொல்லி யிருப்பேன்.

புல்லுருவித்தனம்

பெரிய நாடுகளுக்கும் சிறிய நாடுகளுக்கு மிடையே இந்த வித்தியாசம் இருப்பதற்குக் காரண மென்ன? ஒரு கோஷ்டியில் ஏகாதிபத்யம் இருக்கிறது; மற்ருெரு கோஷ்டியில் அது இல்லே. இதுதான் சரியான காரணம் என்று எனக்குப் படுகிறது. இந்தியக் குடியானவரும் இதர அடிமைநாட்டு மக்களும் சுரண்டப் படுவதில் கிடைக்கிற லாபத்தில் பிரிட்டிஷ் தொழிலாளர்கள் பங்கு போட்டுக் கொள்ளுவதால்—மோசமான தலேமை இருப்பதால் இந்தப் பங்குடன் அவர்கள் திருப்தியடைந்து விடுகிருர்கள்—பிரிட்டிஷ் தொழிலாளர் இயக்கத்தின் உணர்ச்சி மாசு பட்டிருக்கிறது. இதை மறப்பதற்கே இல்லே. இதைக் கொண்டு, சாதாரண பிரிட்டிஷ் தொழிலாளி வேண்டு மென்றே, விஷயமறிந்தே, ஏகாதிபத்தியவாதியாக இருக்கிருன் என்று சொல்லிவிட முடியாது. இந்த ரகத்திற்குத் தனிப் பதம் இருக்கிறது. அதுவே "புல்லுருவித்தனம்." இங்கிலாந்தில் சமூகப் புரட்சியைத் தடுக்க இதைப் பிரிட்டிஷ் ஆளும் வர்க்கம் உபயோகித்திருக்கிறது.

"உங்கள் திட்டத்திற்கு வேண்டிய பணத்திற்கு ஏற்பாடு என்ன?" என்று ஸர் வில்லியம் பெவரிட்ஜைக் கேட்டதற்கு, "வேலே யில்லாத் திண்டாட்டத்தைத் தவிர்த்து விட்டால் அது சாத்தியமாகும். அந்தத் திண்டாட்ட மில்லாதிருக்க, யுத்தம் முடிந்தபிறகு, பிரிட்டன் தனது ஏற்றுமதி மார்க்கெட்டுகளேக் கைவிடா திருப்பதோடு, அபிவிருத்தியும் செய்யவேண்டும் என்பதை நான் சொல்லத் தேவையில்லே" என்று அவர் பதிலளித்தாராம். மார்க்கெட்டுகள் என்று நம்மைத்தான், அடிமை நாடுகளின், பிற்போக்கான நாடுகளின் மக்களேத்தான் குறிப்பிடுகிருர். சாம்ராஜ்யம் தொலேந்தால் கொஞ்சக்காலத்திற்கு பிரிட்டிஷ் தொழிலாளர்களின் வருமானம் குறைந்திருக்கும் என்ற உண்மையை அவர்களுடைய தலேவர்கள் உணர்ந்திருப்பதே, இந்தியா விஷயமாக பிரிட்டிஷ் தொழிற்கட்சி அக்ரமமான கொள்கைகளேக் கையாண்டதற்கு முக்கியக் காரணமென்று நினேக்கிறேன். அந்தத்

தியாகத்திற்கு—கொஞ்சக் காலத்திற்கு வருமானத்தைக் குறைத்துக் கொள்ளுவதற்கு—பிரிட்டிஷ் தொழிலாளியும் தலைவரும் தயாராயில்லை. அதாவது, இன்னும் நல்ல சர்வதேச சமுதாயத்தை நோக்கி முன்னேறுவதற்கு பிரிட்டிஷ் தொழிலாளி வர்க்கத்தின் உடனடியான சுயநலம் ஒரு முட்டுக்கட்டையாக வருகிறது.

ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் இதைத்தான் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு 1935-ல் இந்திய சோஷலிஸ்ட் பத்திரிகை யொன்றுக்கு எழுதிய கட்டுரையில், "பிரிட்டனுக்கு சோஷலிஸமும் இந்தியாவுக்கு சுதந்தரமும் ஒன்றையொன்று ஆதாரமாகக் கொண்டவை" என்று குறிப்பிட்டார் போலும்.

கம்யூனிஸ்டுகள்

சமூக ஜனநாயகக் கொள்கையினர்—சோஷல் டெமாகிராட்டுகள்—எதையும் சாதிக்கவில்லை; கம்யூனிஸ்டுகளிடம் நம்பிக்கை வைப்போம் என்று நம்மில் அனேகர் தங்கள் வாழ்க்கையில் ஏதேனும் ஒரு கட்டத்தில் கவனத்தைத் திருப்பியிருக்கிறார்கள்; பொதுவுடைமை அகிலம் (Communist International) அமைக்கப்பட்ட ஒரு சில வருஷங்களிலேயே, அந்த ஸ்தாபனமும், பல்வேறு நாடுகளிலுள்ள அதன் கிளை ஸ்தாபனங்களும் ருஷ்ய வெளிநாட்டிலாகாவுக்குக் கீழ்ப்பட்ட கிளை நிலையங்கள் தவிர வேறு எதுவுமில்லை; அவைகளுக்குப் பணம் தருவது சோவியத் சர்க்கார்தான் என்பது நாளுக்கு நாள் நன்றாகத் தெரிந்தது. உலகில் அனேக நாடுகளின் அந்த ஸ்தாபனத்தின் சாதனைகள் நிரம்பவும் வருந்தத் தக்கனவாகும் சோஷலிஸ்ட் இயக்கம், தொழிற்சங்க இயக்கம் ஆகிய வற்றைக் காலைவாரிவிட முயற்சிகள், ஜெர்மனியில் வீமர் குடியரசின் சோஷல் டெமாகிராடிக் சர்க்காரைக் கவிழ்ப்பதற்காக நாஜிகளுடன் கூட்டுறவு, ஆகியவையே அந்தச் சாதனைகள். (1943-ம் வருஷக் கடைசியில்) பொதுவுடைமைச் சர்வதேசியம் (Communist International அல்லது Comintern என்று ஆங்கிலத்தில் இந்த ஸ்தாபனம் அழைக்கப்படுகிறது) கலைக்கப்பட்டதும் பல்வேறு நாடுகளில் தொழிலாளர் இயக்கத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் "நல்ல வேளை, தொலைந்தது" என்று சற்றுக் கவலை நீங்கியதைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

நம் நாட்டிலேயே கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய—எதிர்ப்புச் சாதனைகள் எல்லாரும் கண்டுகொள்ளக்கூடிய வகையில் தெளிவாக இருக்கின்றன. அந்தக்கட்சி தொழிற்சங்க, கிஸான் மாணவர் இயக்கங்கள் ஆகிய வற்றை ஒவ்வொன்றாகக் காலைவாரி விட்டிருக்கிறது. ஒவ்வொன்றின் ஐக்யத்தையும் பிளந்திருக்கிறது. சுயராஜ்யம் பெற மகாஜனங்கள் ஆரம்பித்த ஒவ்வொரு இயக்கத்தையும் கம்யூனிஸ்டுகள் எதிர்த்திருக்கிறார்கள். 1930-31-ல் அப்படித்தான், 1942-33லும் அப்படித்தான். அவர்களுடைய காரி

யங்களுக்குச் சிகரம்போல் விளங்கியது 1942 ஆகஸ்டிலும் அதற்குப் பிற்பாடும் கம்யூனிஸ்ட் கட்சி செய்தவேலை. அந்த ஸ்தாபனம் தேசிய சுதந்தரப் போரைக் காட்டிக்கொடுத்து, துரோகம் செய்ததோடு, "மக்களின் யுத்தம்" என்ற போலிக் கோஷத்தை வைத்துக்கொண்டு யுத்தத்தை ஆதரித்தது. இன்று கம்யூனிஸ்டுகள், சுதேச மன்னர்கள், வகுப்புவாத ஸ்தாபனங்கள் ஆகியவற்றோடு இந்நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சியைத் தாங்கும் தூண்களாக விளங்குகிறார்கள். அவர்கள் மானமிழந்து இப்பொழுது இருக்கவேண்டிய இடத்தில் ஒதுக்கப்பட்டிருப்பது அவர்களது செயலின் நியாயமான பலாபலன்தான்.

நாங்கள் சர்வதேச வாதிகள், எனவே சாதாரண தேசிய வாதிகளைவிட மேலானவர்கள், என்றெல்லாம் இந்தியக் கம்யூனிஸ்டுகள் பறைசாற்றிக்கொண்டு உண்மையில் ருஷ்ய தேசிய வாதிகளாகவே இருக்கிறார்கள். 'இந்தோ-ருஷ்யர்' என்று அவர்களை ஒருவர் சமீபத்தில் வர்ணித்தது நிரம்பப் பொருத்தமே. ருஷ்ய ராஜ்யம், அதன் வெளிநாட்டுக் கொள்கையின் அவ்வப்போதைய தேவைகள் ஆகியவை அவர்களுக்குப் பிரதானமேயொழிய, தங்கள் சொந்த நாட்டு மக்களின் நலன்களோ, நாட்டின் விடுதலையோ பிரதானமில்லை. 1939-ம் வருஷம் ஆகஸ்ட் மாதத்தில் ஸ்டாலின் ஹிட்லருடன் உடன்படிக்கையில் கையெழுத்திட்டு, ஹிட்லருக்குப் பச்சை விளக்கைக் காண்பித்து, யுத்தத்தை உலக சஞ்சாரத்திற்காக அவிழ்த்துவிட்டார். அப்போது, கம்யூனிஸ்டுகள் இந்த யுத்தத்தை ஏகாதிபத்திய யுத்தம் என்று சொன்னவர்கள் கோஷ்டியில் இருந்தார்கள்; மனிதகுலத்தின் முன்னேற்றத்திற்கே பிரிட்டிஷ்—பிரஞ்சு அமெரிக்க ஏகாதிபத்தியம்தான் பிரதான விரோதி என அந்த ஏகாதிபத்தியத்தை மிக வன்மையாகக் கண்டித்தார்கள். ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவரும் இப்பொழுது "சுதந்தர ஜெர்மன் கமிட்டி"யில் மெம்பராக உள்ளவருமான வால்டர் அல்பிரிஷ்ட் 1940-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 2-ந்தேதி, கட்சிப்பத்திரிகை டிவெல்ட் (Die Welt)ல் எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டதாவது: "இந்த யுத்தக்கொள்கை (அதாவது நேச நாடுகளுக்கு உதவுவது) நிரம்ப அக்ரமமானது. ஏனெனில், உலகில் கிரேட் பிரட்டன்தான் மிகவும் பிற்போக்கான சக்தி."

பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் பத்திரிகையான தி டெய்லி ஒர்க்கர் (The Daily Worker) 1940 பிப்ரவரி முதல் தேதியன்று எழுதியதாவது: "தன்மீது யுத்தத்தை பிரிட்டன் திணித்ததாக மீண்டும் ஒருமுறை ஹிட்லர் திரும்பத் திரும்பச் சொன்னார். சரித்திரப் பூர்வமான இந்த உண்மைக்குப் பதிலே கிடையாது. ஜெர்மனி மீது பிரிட்டன் யுத்தப்பிரகடனத்தைச் செய்தது. யுத்தம் முடிவடைவதற்காக முயற்சிகள் நடந்தன. ஆனால் சோவியத் ஜெர்மன் சமாதான முயற்சிகளை பிரிட்டன் நிராகரித்தது. இந்த மாதங்கள் நெடுகலுமே, யுத்தத்தை முடித்துவிட பிரிட்டிஷ், பிரஞ்சு சாக்கார்களிடம் சக்தி இருந்தது. யுத்தம் பரவவேண்டும்; அதற்கே பாடுபடுவது என்று அந்நாடுகள் தீர்மானித்தன" இந்தியக் கம்யூனிஸ்டுகள் இதைப் பின்பற்றினார்கள். ஆனால், ஹிட்லர் இந்தப்பக்கமும் திரும்பி, தனது நேச ருஷ்ய நாட்டைத் தாக்கியதும், கம்யூனிஸ்டுகள் திடீர் பல்டியடித்து, அதே ஏகாதிபத்திய யுத்தத்தை மிக்க ஆர்வத்துடன் ஆதரித்தார்கள்.

பொதுவுடைமை அகிலம், அதன் கிளைகள் ஆகியவற்றின் உண்மைச் சொரூபத்தை எங்களில் அனேகர் அறிந்தே இருந்தோம். ஆனால், சோவியத் ருஷ்யாதான் சோஷலிஸ ஆட்சியை ஏற்படுத்தப்போகிறது என்ற நம்பிக்கையும் ஒருகாலத்தில் எங்களுக்கு இருந்தே வந்தது. அந்த நாட்டில்தான் பெரிய பரீட்சார்த்தம் நடக்கிறதென நினைத்தோம். ருஷ்யப் புரட்சியின் கதி நமது தலைமுறைக்கும், இந்த நூற்றாண்டுக்கும் உலகப் புரட்சியின் கதியை நிர்ணயிக்குமெனக் கருதினோம். அந்த மாபெரும் பரீட்சார்த்த வேலையின் கதையும், வழிதவறித் தடம் புரண்டு அதுபோன விதமும் முந்திய அத்யாயத்தில் கூறப்பட்டன.

சோஷலிஸ சமுதாயத்தை ஸ்தாபிக்க ருஷ்யப் புரட்சி தவறிவிட்டாலும், புதிய தீமையாகிய சர்வாதிகாரத்வம் எழுந்தாலும்; புதிய எண்ணங்களைக் கிரஹிக்கத் தயாராகவுள்ளவர்கள் பழைய ஊகங்களை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. அந்த ஊகங்களினால்தான் சோஷலிஸம் ஸ்தாபிதமாகும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டது. எந்தெந்த ஊகங்கள் தங்களைத்தவறான முடிவுகளுக்குக் கொண்டு விட்டன என்பதை அவர்கள் ஆராயவேண்டும்.

பழைய சுவட்டிலேயே போவது சரியா, சரியான பாதையில் போகவேண்டாமா என்று அலசி ஆராயப் பயப்படுகிறவர்களுக்காக மேஜர் பார்பரா (Major Barbara) என்ற தமது நாடகத்தில் ஜார்ஜ் பெர்னர்டு ஷா தனக்குத்தானே பின்வருமாறு சொல்லிக்கொள்ளுகிறார் :

"நாம் வருஷக்கணக்காக நேரத்தையும் சிந்தனையையும், ஆயிரக்கணக்கான ரூபாயையும் செலவழித்து ஒரு புதிய பீரங்கியையோ அல்லது போர் விமானத்தையோ உற்பத்திசெய்து, அந்த விமானம் அல்லது பீரங்கி அமையவேண்டிய ரீதிப்படி இல்லாமல், மயிரிழை தவறியிருந்தாலும் என்னசெய்கிறோம் ? தொலைத்தெறி என்கிறோம். அதற்காக மற்றொரு மணிநேரத்தையோ அல்லது ரூபாயையோ விரயம் செய்யாமல், தொலையட்டும் என்கிறோம். சரி. ஒழுக்கம், மதம் இன்னும் வேறு எது எதையோ உங்களுக்காக ஆக்கிக் கொண்டிருக்கிறீர்கள். அது உண்மைக்குப் பொருத்தமாயில்லை. சரி, அதைத் தொலையுங்கள், அதைத் தொலைத்துக் கட்டிவிட்டுப் பொருத்த மானதைக் கொண்டு வையுங்கள். அதுவே இப்போது உலகத்தில் உள்ள கோளாறு. உலகம் தன்னிடமுள்ள உதவாக்கரை ஸ்டீம் எஞ்சின்களையும், டைனமோக்களையும் அடியோடு தொலைத்து விடுகிறது. ஆனால், தனது பழைய விருப்பு வெறுப்புகளையும், பழையஒழுக்கங்களையும், பழைய மதங்களையும், பழைய அரசிய லமைப்புகளையும் தொலைக்க மாட்டேனென்கிறது."

இந்நாட்டு அறிவாளிகளில் அனேகருக்கு இன்னும் அடிமை மனப்பான்மை இருந்தே வருகிறது. அதை அவர்கள் மேல்நாட்டு (பிரிட்டிஷ், ருஷ்ய, அமெரிக்கர்) அறிவாளிகளிடம் காண்பிக்கும் அளவுக்கு மிஞ்சிய மட்டுமரியாதையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். மேல்நாடுகளில் இதுவரை நடந்திருப்பவை, குறிப்பாக முற்போக்கு இயக்க சூன்யம், மேல்நாட்டு அறிவாளியைக் குருவாக மதித்துக் கீழ்நாட்டு அறிவாளி சிஷ்யனாக இருக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தவில்லை. இந்நாட்டில் தாங்கள் முற்போக்காக அல்லது தீவிரமாக இருப்பதாக நினைப்பவர்கள் எல்லாம் சுயமாகச் சிந்தனைசெய்து, தங்களை மீறிவிட்ட காரியங்களைக் கண்டு மனக் குழப்பமும், பிரமிப்பும் அடைந்துள்ள மேல்நாட்டு அறிவாளிகளுக்

குச் சரியான வழியைக் காண்பிக்க முயலவேண்டும். எனவே, மேல்நாடுகளில் சோஷலிஸ்ட் சிந்தனை, சென்ற இருபத்தைந்து வருஷகாலத்தில், பாதையைவிட்டு அகன்றதற்குக் காரணங்கள் யாவை என்பதை நன்கு ஆராய்ந்து அறியக்கூடிய அனுகூலமான நிலையில் நாம் இருக்கிறோம்.

தேசியமே சகலத்திற்கும் பரிகாரமா ?

மார்க்ஸிஸம் குறைந்தபட்சத்தில் நான்கு பெரிய அடிப்படைகளை — இதற்கு மேலாகக்கூட இருக்கலாம் — கொண்டதாகும். அவற்றைப் புனர் ஆலோசனை செய்யவேண்டியது அவசியமாகும் என்று நான் நம்புகிறேன். அந்த நான்கில் முதலாவது: தனி உடைமை ஒழிப்பு. உடைமைகளைத் தேசிய மயமாக்கினால், அதாவது சர்க்காருக்குச் சொந்தமாக்கினால், தானாகப் பொருளாதார ஜனநாயகமும், வர்க்கமற்ற சமூகமும் ஏற்பட்டுவிடும். ஆனால், ருஷ்யாவில் இவ்வாறு நடந்து விடவில்லையென்பது தெளிவாகத் தெரிகிறது. தேசிய மயமாகும் கைத்தொழில்கள் சர்க்காருக்குச் சொந்தமாக இருக்கலாம்; ஆனால், சர்க்காரானது ஜனங்களுக்குச் சொந்தமில்லாதிருக்கலாம்; கூட்டுப் பொருளாதாரத்தை உண்டாக்குகையில், வழியில் ராஜீய ஜனநாயகம் மலையேறி விடலாம். இதை முன்கால சோஷலிஸ்ட் அறிவாளிகள் போதிய அளவுக்கு உணரவில்லை. பொருளாதாரம் தேசிய மயமாவதால், ஏகபோகக் கட்டுப்பாடு அதிகாரம் செலுத்தும் புதியவர்க்கம் ஒன்று தலைதூக்கி, தேசிய மயமான சொத்தைச் சொந்தமாக்கிக் கொள்ளவும், அதிலே பங்கு கொள்ளவும் முடியும் என்பதை நம் கண் முன்னால் பார்க்கிறோம். முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தனிப்பட்ட தொழிற்சாலைகள், சுரங்கங்கள் முதலியவற்றிற்குச் சொந்தக்காரர்களாக இருப்பதற்குப் பதிலாக, இந்த அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் மானேஜர்களும் சர்க்காருக்குச் சொந்தமான எல்லாத் தொழில்களிலும், சுரங்கங்களிலும் பங்குதார்களாக இருக்கிறார்கள். தொழிலாளர் பழைய ரீதியிலேயே சம்பளம் வாங்குகின்றனர். முன்பு தனி முதலாளிகள் பங்குப் பிரிவினைகள் வாங்கி வந்தனர். இப்பொழுது புதிய சலுகைபெற்ற வர்க்கம் சர்க்கார் கடன் பத்திரங்களுக்குக் கிடைக்கும் வட்டி ரூபத்தில் பங்குப் பிரிவினையைப் பெறுகிறது. உற்பத்தி பொதுவுடைமையாக்கப்பட்டிருக்கிறதேயொழிய, விநியோகம் பொதுவுடைமையாக்கப்படவில்லை.

பணக்காரர்கள் ஆட்சிக்குப் பதில் சோஷலிஸ ஆட்சி ஏற்படவில்லை; ஆனால் அதிகாரவர்க்க ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. மகா ஜனங்களை ஒடுக்கும் வேலை இன்னும் நன்ருகப் பரிபூர்ணமாக்கப் பட்டிருக்கிறது. ஏனெனில், டிராட்ஸ்கி அவர் வாழும்போதே கண்டதுபோல "வேலைதரும் ஒரே எஜமானன் சர்க்காராகவே இருக்கிறநாட்டில், அந்தச் சர்க்காரை எதிர்த்தால், படிப்படியான பட்டினி மூலம் சாகவேண்டியதுதான் கைமேல் பலன். வேலை செய்யாதவனுக்கு வயிற்றுக்குச் சாப்பாடு கிடையாது என்ற பழைய தத்துவத்திற்குப் பதிலாகப் பணியாதவனுக்குப் போஜனமில்லை என்ற புதிய தத்துவம் வந்துவிட்டது." எனவே, அரசியல் ஜனநாயகம் இல்லாமல் கைத்தொழில்கள் மாத்திரம் தேசியமயமானல் புது விதச் சுரண்டல் தோன்றுகிறது. ஆகவே, சொத்தை எவ்வளவுக்குச் சட்டப்பூர்வமாக வைத்திருப்பது என்பதைவிட, அதன்மீது எவ்வளவுக்கு அரசியல் கட்டுப்பாடு அதிகாரம் இருப்பது என்பதே முக்கியமானதாகும். இந்த உண்மை நாளுக்கு நாள் பலமாக உணரப்பட்டு வருகிறது. இந்த முக்கியத்துவத்தை உணராதவர்கள், இப்பொழுது இந்தியாவில் சர்க்காரே ரயில்வேக்களை வாங்கி நிர்வகிப்பதை சோஷலிஸம் என்றுகூட வர்ணிக்கத் தோன்றிவிடுவார்கள்!

சர்வாதிகார ஆட்சி இடைக்காலக் கட்டமா?

புனர் ஆலோசனை செய்யவேண்டிய இரண்டாவது மார்க்ஸீய ஊகம் "பாட்டாளி மக்களின் சர்வாதிகார ஆட்சி (அதாவது பட்டாளி மக்கள் சார்பாக கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி) சோஷலிஸத்தை அடைய சாத்தியமான, அவசியமான இடைக் காலக் கட்டம்," என்பதே. இந்தத் தத்துவம் என்னவென்ருல், சர்வாதிகார ஆட்சி தனது காரியத்தை முடித்துக் கொண்ட பிறகு தானுக மறைந்துவிடும் என்பது. லெனின், எங்கல்ஸ் இருவரும் சொல்லியிருப்பதுபோலச் "சர்க்கார் பிற்பாடு வாடி உதிர்ந்துவிடும்."

ஆனுல் ஓர் உண்மை — சரித்திரம் வாயிலாக நிலேநாட்டப் பட்டிருக்கும் உண்மை—கவனிக்கப் படவில்லே. இதை லார்டு ஆக்ஷன் "அதிகாரம், அக்ரமத்திற்கு வழிதேடுவதாய் இருக் கிறது. பரிபூர்ண அதிகாரம், பரிபூர்ண அக்ரமத்தில் இறக்கி விடும்" என்று வர்ணிக்கிருர். வர்க்கமற்ற சமுதாயத்தை ருஷ்யாவில் நிலே நாட்டிவிட்டோம் என்று சோவியத் சர்க்கார் பறை சாற்றிக்கொள்ளுகிறது. ஆனுல், அந்தச் சர்க்கார் 'வாடி உதிர்ந்து' விடாதது ஒருபுறமிருக்க, தனி நபரின் சுதந்தரம் மீதுள்ள தனது கெட்டியான பிடிப்பைத் தளர்த்தும் போக்குத் துளிக்கூடக் காணப்படவில்லே. வரப்போகிற வருஷங்களிலாவது ஜன நாயகமோ அல்லது தாராள ஆட்சியோ ஏற்படப் போகிறதற் கான சின்னம் எதையும் காணும். புரபஸர் எப். எச். நைட் சொல்லுவதுபோல, "அடிமைகள் வேலேக்கு உள்ள ஒரு தோட் டத்தில், சவுக்கடி கொடுக்கும் உத்தியோகத்தை மிகவும் இளகிய மனது உள்ளவர் பெறுவது எவ்வளவு சாத்தியமில்லேயோ, அவ்வளவு, அதிகாரத்துடன் இருக்கவும் உபயோகிக்கவும் விருப்ப மில்லாத் தனிநபர்கள் கொண்ட கோஷ்டி அதிகாரத்தில் இருப்பதும் சாத்தியமில்லே"!

சோஷலிஸச் சிந்தனேயெல்லாம் வெறும் கனவு, காரிய சித்தியாக முடியாது, என்று மார்க்ஸீயர்கள் அடிக்கடி

சொல்லுவதுண்டு. ஆனால் ருஷ்யாவில் உள்ளதைப்போன்ற சர்வாதிகார ஆட்சி—அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகக் கட்சிக்குள்ளேயே சண்டைபோட்டு, சென்ற ஆறு அல்லது ஏழு வருஷ காலத்தில் லட்சக் கணக்கானவர்களை ஒழித்துவிடத் தயங்காத கம்யூனிஸ்ட் கட்சி—தனது சரித்திர பூர்வமான காரியம் கைகூடிவிட்ட உண்மையைத் திடீரென ஒருநாள் உணர்ந்து, ரகசியப் போலீசையும், அதன் எல்லாச் சித்ரவதைக் கருவிகளையும் ஒழித்துவிடும், பிற்பாடு தானே விழுந்து ஒழிந்துவிடும் என்று கம்யூனிஸ்டுகள் நினைப்பதைவிட மோசமான கற்பனை இருக்க முடியுமா? கம்யூனிஸ்டுகளின் இப்பேர்ப்பட்ட நம்பிக்கையைக் கண்டுதான் மாக்ஸ் ஈஸ்ட்மென் பின்வருமாறு கிண்டல் செய்கிறார்: "நல்ல மனிதர்களால் சோஷலிஸத்தை ஸ்தாபிக்க முடியும் என்ற நினைப்பு வெறும் பகற் கனவுதான் என்று மார்க்ஸ் கூறினார். ஆனால், கெட்ட மனிதர்கள் சோஷலிஸத்தை நிச்சயம் ஸ்தாபிப்பார்கள் என்று ஸ்டாலினிஸ்டுகள் உண்மையிலேயே நம்புகிறார்கள்."

மூன்றாவது மார்க்ஸிய ஊகம், "தொழிலாளர் வர்க்கத்தின் கூட்டுச் சுயநலத்தையும் சொத்து உள்ளவர்கள் மீது அதற்குள்ள கூட்டுவெறுப்பையும் தூண்டிவிடுவதின் மூலம் சோஷலிஸத்தையடையலாம்" என்பதே. ஆனால், சென்ற இருபது வருஷகால அனுபவம் இந்த வாதத்தை ஆதரிப்பதாக இல்லை. சமூகத்திலுள்ள பல்வேறு வர்க்கங்களின் நலன்கள் ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளுவது என்னவோ உண்மைதான். ஆனால், துரதிருஷ்டவசமாகத் தொழிலாளரின் கூட்டுச் சுயநலம் தூண்டப்படுவதால், சுரண்டலிலும் அநீதியிலும் இறுதியில் அவர்களும் சேர்ந்து கொள்ள ஹேதுவாகிறது. சாம்ராஜ்யத்தின் லாபங்களில் ஒருபங்கு கொடுக்கப்பட்டதும் பிரிட்டிஷ் தொழிலாளர் வர்க்கம், தொழிற்கட்சியின் மூலம் ஏகாதிபத்தியத்தை—உலக சோஷலிஸ சமுதாயத்திற்கு நேர்விரோதியைச்—சாசுவதமாக்குவதில் ஒரு கூட்டாளியாகி விடுவதை ஏற்கெனவே கண்டிருக்கிறோம்.

மேலும், சுயநலத்தையும் பகைமையையும் தூண்டுவதால், ஒத்துழைப்பு, அன்பு இரண்டையும் ஆதாரமாகக் கொண்ட உயர்ந்த ரகச் சமூகத்தையடைய முடியுமா? லட்சியங்களும்

சாதனங்களும் என்ற சிக்கல் இங்கே பரிபூரணமாக இருக்கிறது. மார்க்ஸிஸ்டுகளில் தனது காலத்தில் தலைசிறந்து விளங்கியவர்களில் ஒருவராகிய டிராட்ஸ்கி, வர்க்கப்போராட்டத்தை "நியதிகளுக்கெல்லாம் நியதி" என்றார். ஆனால், நியதிகளுக்கெல்லாம் நியதி எதுவுமில்லை என்று சாஸ்திரம் (Seience) நமக்குச் சொல்லுகிறது.

ஒரே மாற்று சோஷலிஸமா ?

மற்றொரு நம்பிக்கை என்னவென்றால்—இதுவரை எல்லா சோஷலிஸ்டுகளாலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது—முதலாளித்துவத்திற்கு மாற்று சோஷலிஸம் ஒன்றுதான் என்பதாகும். எனக்கும் 1937 அல்லது 1938-ம் வருஷம் வரைக்கும் இதே நம்பிக்கை இருந்ததென்பதை நான் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். எப்படியாவது முதலாளித்துவத்தை ஒழிக்க வேண்டும். பிறகு சோஷலிஸம் தானாக, இரவுக்குப் பின் பகல் வருவதுபோல, வந்துவிடும் என நினைத்தோம். ஆனால் அப்படி வந்துதான் ஆகவேண்டுமா? பழைய ரக முதலாளித்துவம் உளுத்துப்போய்விட்டது. இதில் சந்தேகமில்லை. ஆனால், சோஷலிஸமே வந்துதீருமா, அல்லது மூன்றாவது 'ஏதாவது' வரக் கூடுமா? நாளுக்குநாள் பெருகிவரும் சிந்தனையாளர் கோஷ்டி இப்போது இந்தக் கேள்விதான் கேட்கிறது. !

பர்ன்ஹாமின் மானேஜரியல் ரெவலூஷன் என்ற புஸ்தகத்தில் இந்தக் கேள்வி நன்றாக எழுப்பப்பட்டும், பதிலளிக்கப்பட்டும் இருக்கிறது. அவர் கூறுவதாவது: "மார்க்ஸிஸ்டுகள் கீழ்க்காணும் வாதத்தை விடாப்பிடி நம்பிக்கையுடன் சொல்லுகிறார்கள்! முதலாளித்துவம் நீடிக்கப் போவதில்லை (இதை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம்) யாதலாலும், முதலாளித்துவத்திற்கு ஒரே மாற்று சோஷலிஸ மாகையாலும், சோஷலிஸம் வரப்போகிறது. வாதம் நிரம்பவும் சரிதான். ஆனால், முடிவு உண்மையாகத் தான் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. இரண்டாவது ஊகம் (சோஷலிஸம் தான் வரப்போகிறது என்பது) சரியாக இருந்தால் தான் முடிவு உண்மையாக இருக்கமுடியும். அந்த இரண்டாவது ஊகம்தான் இப்பொழுது தர்க்கத்திலுள்ள பிரச்னையாகும்."

ருஷ்யாவோ ஜெர்மனியோ இப்பொழுது (1944 மார்ச்) முதலாளித்துவ நாடல்ல. உங்களுக்கு ஜெர்மனி பற்றிச் சந்தேகம் ஏதேனும் இருந்தால், பர்ன்ஹாமின் புஸ்தகம், பீட்டர் ட்ரக்கரின்

'பொருளாதார மனிதனின் லட்சியம்' (End of Economic Man) என்ற புஸ்தகம், அல்லது பிரடா அட்லியின் 'நாம் இழந்த கனவு' (The Dream We Lost) என்ற புஸ்தகத்தைப் படியுங்கள். சந்தேகம் நிவர்த்தியாகிவிடும். "தன்னுடைய பெயரைக் கம்பெனியின் கடுதாசிகளில் போட்டுக்கொள்ளும் ஒரே வலிமைதான் ஜெர்மன் முதலாளிக்கு விடப்பட்டிருக்கிறது" என்று "இக்கனமிஸ்ட்" பத்திரிகையின் ஆசிரியர் ஜியாப்ரே கிரவுத்தர், நிலைமையை நறுக்குத் தெறித்தாற்போல் சொல்லுகிறார்.

பர்ன்ஹாம் சொல்லுவதுபோல ருஷ்யா, ஜெர்மனி இரண்டிலும், "சுதந்தர, வர்க்கமற்ற, சர்வதேச சமுதாயம் என்ற சரித்திரப் பிரசித்த சோஷலிஸ்ட் தத்துவத்திடம் ஜனங்களுக்கு உள்ள ஆர்வத்தை உபயோகித்துக் கொள்ளவும், மானேஜரியல் பொருளாதாரமே உண்மையில் உயர்வகுப்பில் புது ரகச் சுரண்டல் வர்க்கத்திற்கு அடிப்படையாக இருக்கிறதென்ற உண்மையை மறைப்பதற்கும் 'சோஷலிஸம்' என்ற வார்த்தை உபயோகிக்கப் படுவதாலேயே தொல்லை ஏற்படுகிறது. "இது எல்லா மோசடிகளையும் போல, நல்லதற்குக் கெட்டது அளிக்கும் ஒரு புகழ்மாலையாகும். இப்படிப் போற்றப்படுவதைக் குறித்தாவது மகிழ்ச்சியடைவோமாக!"

சிந்தனையாளரில் சோஷலிஸ்ட் முன்னணி ஸ்தானம் வகிக்கும் வில்லியம் மாரீஸ் இதைப்போன்ற நிலைமையை மனதில் வைத்துக்கொண்டுதான், தீர்க்க தரிசனத்துடன் கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கவேண்டும் : "இந்த விஷயங்களை யெல்லாம் ஆர அமர ஆலோசித்துப் பார்த்தேன் : எப்படி மனிதர்கள் சண்டைபோட்டுத் தோற்கிறார்கள், தோல்வியுற்றாலும் கூட அவர்கள் சண்டை போட்டார்களே அது அவர்களுக்குக் கிடைப்பது, அது வந்தவுடன், உண்மையில் அது தாங்கள் விரும்பியதாக இல்லாதிருப்பதை அறிந்து கொள்ளுவது, அவர்கள் விரும்பியதை அடைய வேறு பேர்கள் வேறுபெயரில் சண்டை போடுவது என்பதை யெல்லாம் கவனித்தேன்." எனவே, முதலாளித்துவ வீழ்ச்சிக்குப் பிறகு சோஷலிஸம் ஏற்படாது; ஆனால், மாலடோவ் சொன்னது போல, நமது 'ருசிக்குத் தக்கவாறு' ஓர் ஆட்சி முறை—அது ஒரே கட்சியின் எதேச்-

சாதிகாரம் அல்லது பாஸிஸம அல்லது ஹிட்லரிஸம் அல்லது ஸ்டாலினஸமாக இருக்கலாம்—ஏற்படுமென்ருகிற தல்லவா? இது நேரக்கூடு மென்பதற்கு ஆதாரமாக, மிகவும் திறம்பட நிர்வாக அமைப்பு வாய்ந்த கைத்தொழில் மயமான சர்க்கார் இயந்திரத்தை நிர்வகிக்க மக்களில் மிகப் பெரும்பாலோர் இன்னும் அறிவுத்துறையில் தயாராகவில்லை என்று குறிப்பிடலாம். ஆனால், இதிலிருந்து பழைய பிற்போக்கான "மனுஷ்ய இயற்கையை நீங்கள் மாற்ற முடியாது" என்ற கோஷத்தில் உண்மை யெதுவும் இருப்பதாக எண்ணிவிட வேண்டாம். அது சுத்த அபத்தமாகும். அதற்கு மண்டையில் அடி கொடுத்து மார்க்ஸ் பின்வருமாறு சொல்லுகிருர்: "மனுஷ்ய இயற்கையின் படிப்படியான மாறுதலே சரித்திரம். வேறு எதுவுமில்லை". மனுஷ்ய இயற்கை எப்பொழுதும் மாறிக் கொண்டே வந்திருக்கிறது; இப்போதும் மாறிவருகிறது. ஜெர் மனியிலும் ருஷ்யாவிலும் சென்ற இருபது வருஷ காலமாக நம் கண்முன் அது தீவிரமாக மாறி வந்திருக்கிறது. பொதுவாக மனுஷ்ய சாமர்த்தியம், அதனல் உண்டாக்கப்பட்ட இயந்திரங் களைச் சமாளிக்கவும் கட்டுப்பாடு அதிகாரம் செலுத்தவும் போதிய அளவுக்கு அபிவிருத்தியாகி யிருக்கிறதா என்பதே கேள்வி. இதை உணர்ந்து தான் ஜி. டி. எச். கோல் இரண்டு வருஷங்களுக்கு முன்பு "நியூ ஸ்டேட்ஸ்மே"னில் எழுதிய கட்டுரை யொன் றில், ஜில்லாக் கவுன்ஸிலின் ஆதிக்கத்திலுள்ள பிரதேசத்தை விட அதிகப் பிரதேசத்தில் ஜனநாயகத்தைத் திறம்பட நிலைநாட்டி வரச் சாதாரண இங்கிலீஷ்காரனுக்கு உள்ள அறிவு போதுமா என்ற சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிருர். அப்படியானல், எல்லா வற்றிற்கும் திட்டம் வகுக்கும் வழியானது, அடிமை வாழ்வை அடைவதற்கு வழி என்ற புரபஸர் ஹேயக்கின் தர்க்கத்திற்குப் பதில் கிடையாதா, என்ன? இரண்டில் ஏதாவது ஓர் ஏதேச் சாதிகார ஆட்சியை (நாஜிஸம், அல்லது ஸ்டாலினிஸம்) ஒப்புக் கொள்ளுவதின் மூலமோ, அல்லது இப்போதைய குளறுபடி யான, அராஜகமான, உளுத்துப்போன பழைய முதலாளித்துவ முறையே இனியும் நீடிக்கட்டும் என்று சும்மாவிருப்பதின் மூலமோ நம்பிக்கையையும், நிலைமைக்கேற்ற பரிகாரமாக இடை

நிலை வழியைத் தேடும் முயற்சியையும் கைவிடுவதா? நம்மில் ஒவ்வொருவரும் ஆராய்ந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டிய வழி இந்த இரண்டில்-சர்வாதிகார முறை அல்லது முதலாளித்துவ முறை—ஒன்றுதானா? அவ்வாறு இந்த இரண்டில் ஒன்றைத்தேர்ந்தெடுக்கச் சம்மதிப்பது, தோல்வியை மானிட உணர்ச்சி ஒப்புக் கொள்ளுவதாகுமென்றே நான் நினைக்கிறேன். எளிதில் கைகூடவில்லை என்பதற்காக உயர்ந்த லட்சியத்தைக் கைசோர விடுவதையே இது ஒக்கும். இரண்டு தீய விஷயங்களில், தீமை குறைவாயுள்ள ஒன்றைப் பற்றிக் கொள்வோமே என்ற மோசமான வாதப் போக்குத்தான் இது. இப்படியெல்லாம் பொறுக்கியெடுப்பதால் மனுஷ்யர்கள் தங்கள் சகபாடிகளைச் சரித்திரத்தில் இணையற்ற உன்னத நிலைக்குக்கொண்டு வரமுடியாது; இதுவரை கொண்டு வரவுமில்லை. பெரிய சமூக லட்சியங்களுக்காகப் போர் புரிவதே, பண்டையக் கிரேக்கர்கள் சொல்லியதுபோல, நல் வாழ்க்கையாகும். நமது வாழ்நாளில், அந்த லட்சியங்களை நாம் அடைகிறோமா என்பதைப்பற்றி அக்கறையில்லை. திட்டமான பொருளாதார நிலையை யடைவதற்காகச் சுதந்தரத்தைப் பறிகொடுக்கத் தயாராயிருக்கிறவர்களின் வாதத்திற்குப் பதிலாக, ஏற்கெனவே ஒருவர் சொல்லியிருப்பதையே நான் ஆதரிக்கிறேன். அதாவது, "கஷ்டமானதை அடைய உடனடியாக முயலுவேன். அசாத்தியமானதை அடையச் சற்றுப் பிந்தி முயலுவேன்".

"பாஸிஸம் அல்லது போல்ஷிவிஸம் தான் ஏற்படமுடியும் என்ற வாதத்தை நாம் ஒப்புக்கொள்ள மறுக்கிறோம்" என்று லூஸியன் லாரட் Marxism and Democracy (மார்க்ஸீஸமும் ஜனநாயகமும்) என்ற புஸ்தகத்தில் கூறுகிறார். "தற்காலப் போக்கை அந்த இரண்டில் ஒன்றில் திணித்துவிட அனேகர் முயலுகிறார்கள். இந்த இரண்டு சர்வாதிகாரங்களும் ஒரே பயனைத்தான் விளைவித்திருக்கின்றன—பொருளாதார முறைமீது ஒரு கோஷ்டியார் அக்கோஷ்டியின் நலனுக்காக ஆதிக்கம் செலுத்துதல். இந்த அபாயத்திலிருந்து சமூகத்தை ஜனநாயகம் ஒன்றால் தான் காப்பாற்றமுடியும்". இன்னொருவர் எழுதுகிறதாவது: 'மெஷின்' மயமாகவும், கூலிமயமாகவும், பெருவாரியான உற்பத்தியும்,

பெருவாரிக் கட்டுப்பாடும் உள்ள உலகில் சோஷலிஸ்ட் அரசியலின் உருவே மாறிவிடுகிறது. அதன் விளைவாக, தீர்க்க வேண்டிய பிரச்னை தனி உடைமையா சோஷலிஸமா என்று இல்லாமல், கொடுங்கோல் சோஷலிஸமா அல்லது தாராள மனப்பான்மையான சோஷலிஸமா, பாஸிஸமா அல்லது ஜனநாயக குணநிசயங்களா என்பது பிரச்னையாகி விடுகிறது.

சுதந்தரமும் திட்டமான பொருளாதார நிலையும் வேண்டும் என்று கண்டிப்பாகச் சொல்லுகிறவன்தான் இன்று சரியான சோஷலிஸ்டாக இருக்கமுடியும். இத்தகைய சோஷலிஸ்டுகள் அனைவரும், வைதீக சோஷலிஸத்தின் அடிப்படைகளைப் புனர் ஆலோசனை செய்து லட்சியத்தையடைய எந்தெந்தச் சாதனங்களை உபயோகிக்க வேண்டுமென்று மீண்டும் நிர்ணயம் செய்ய வேண்டியது கட்டாயமாகி விட்டது. மார்க்ஸீயத்தின் நான்கு ஊகங்கள் சரியானவையா என்று நாம் சந்தேகிக்க வேண்டிய அவசியம் என்ன? இருபதாம் நூற்றாண்டின் பாக்கிக் காலத்தில் நமது கவனத்தைப் புதிய கோணங்களில் திருப்ப வேண்டும் என்பதற்காகவே. இந்த நோக்கில் பார்த்தால், தேசிய மயத்தை அல்லது சர்க்காருக்குச் சொத்தைச் சொந்தமாக்குவதை, அதற்குரிய ஸ்தானத்தில் வைக்கவேண்டியது அவசியமெனப் புலப்படும். சொத்துக்கு யார் சொந்தக்காரர் என்பதல்ல பிரச்னை; சொத்தின் மீது கட்டுப்பாடுதான் முக்கியம் என்பது உணரப்படுவதால், தேசிய மயமாக்குவது இனி அவ்வளவு முக்கியமானதல்ல. மேலும், நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது வந்து கொண்டே இருக்கிறது. பொருளாதாரத் தேவைகள் தயவு தாட்சண்யமின்றி அதை நோக்கி விரட்டிச் செல்கின்றன. ராஜீய, சமூகத் துறைகளில் அதன் அர்த்த புஷ்டிகளைச் சமாளிக்கத் தயாராயிருந்து, கூட்டுப் பொருளாதாரம் ஏதேச்சாதிகார நிர்வாகத்தோடு இல்லாதிருக்குமாறு பார்த்துக் கொள்ளுவதே முக்கியமாகும்.

சர்க்கார் யாருக்குச் சொந்தம்?

இதுவே கேள்விகளிலெல்லாம் பெரிய கேள்வியாக விளங்குகிறது. சோவியத் வாழ்க்கையைப் பத்து வருஷங்களுக்கு நேரடியாகப் பரிசீலனை செய்த பிறகு வில்லியம் எச். சேம்பர்லேன் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

"பொருளாதார வாழ்க்கையில் சர்க்காருக்கு எது சொந்தம், தனிநபருக்கு எது சொந்தம் என்று நிர்ணயமாகச் சொல்லி வரையறை வேண்டும் என்பதைவிட முக்கியமான பிரச்னை, சர்க்கார் ஜனங்களுக்குச் சொந்தமாக இருக்க வேண்டுமா, அல்லது ஜனங்கள் சர்க்காருக்குச் சொந்தமாக இருங்கவேண்டுமா என்பதுதான்." "False Utopia பொய்யான கனவுலகம்" என்ற புஸ்தகத்தில்.

கூட்டுப் பொருளாதாரம் தனி நபரின் சுதந்தரத்திற்கும் அரசியல் ஜனநாயகத்திற்கும் அபாயமாக இருப்பதனாலேயே இவைகளுக்கு இனி சோஷலிஸத்தில் பிரதான ஸ்தானமளிக்க வேண்டியிருக்கிறது. சோஷலிஸத்திலுள்ள அபாயகரமான அம்சங்கள் இவைதான். மனுஷ்ய அந்தஸ்தை மதிக்க வேண்டும் என்பதற்காகவே இருபதாவது நூற்றாண்டின் பிந்திய பாதியில் போர்கள் கடுமையாக நடக்கவேண்டி யிருக்கலாம். மனிதனின் உரிமைகளைப் பாதுகாக்கத் திரண்டு வராத யாரும் தன்னை சோஷலிஸ்ட் என்று சொல்லிக்கொள்ள யோக்கியதை கிடையாது.

லட்சியங்களும் சாதனங்களும்

பொருளாதார சமத்துவத்தைப் போலவே தனி நபர் சுதந்தரமும் அரசியல் ஜனநாயகமும் சோஷலிஸத்தின் முக்கியமான பகுதியென்ருல், சோஷலிஸத்தை அடைய வேண்டிய முறைகளும் லட்சியத்திற்கு ஏற்றவையாக இருக்கவேண்டியது அத்தியாவசியமாகும். எனவே, "லட்சியம்தான் முக்கியம். அதையடைய எப்பேர்ப்பட்ட சாதனங்களையும் உபயோகிப்பது தர்மம்" - அதாவது பொய், ஏமாற்றுதல், கொலை ஆகியவை கம்யூனிஸ்ட் கட்சிக்கு உதவுகின்றன வென்ருல், அவையும் நியாயமான செயல்கள்தான் - என்ற கோஷத்தை நிராகரித்தாக வேண்டும். மகா மூர்க்கமான வர்க்கத் துவேஷ முறைகள், சர்க்காரை ராணுவத் திடீர்த் தாக்குதல் முறையால் கைப்பற்றுதல், எதிர்க்கட்சியினரை ஒழித்தல் (படுகொலை செய்தல்), ஸ்டாலின் செய்ததுபோலச் சரித்திரத்தைத் திரித்துக் கூறுதல், ஆகியவற்றையும் நிராகரித்தாகவேண்டும். சோஷலிஸத்தைப் பரிசுத்தமான வழிகளில், அப்பழுக்கற்றவர்களால்தான் ஸ்தாபிக்க முடியும். நீதி என்பதற்கு "நடை முறையில் உண்மை" என்ற சரியான வியாக்யானம் தரப்பட்டிருக்கிறது. நேர்மை, உண்மை ஆகியவற்றில் பற்றுதல் இல்லாவிடில் நாம் வழிதவறி, திக்குத்தெரியாது தவிக்க வேண்டியிருக்கும்.

கம்யூனிஸ்ட் இயக்கம் எவ்வாறு சீர்குலையும் என்பதை நூறு வருஷங்களுக்கு முன்பே தீர்க்க தரிசனத்துடன் ஸாமுவேல் டேலர் கோலரிட்ஜ் வேருெரு விஷயத்தைப்பற்றிச் சொல்லும் போது பின் வருமாறு எழுதி யிருக்கிருர்: "உண்மையைவிடக் கிறிஸ்தவ மதத்தில் அதிகப் பற்றுதலுடன் ஆரம்பிக்கிறவன், அடுத்தபடியாக, கிறிஸ்தவ மதத்தைவிடத் தனது தேவாலயத் தொகுதியினிடமே அதிகப்பற்றுதல் கொள்ளுவான்; கடைசியாக எல்லாவற்றையும்விட அதிகமாகத் தன்னிடமே பற்றுதல் வைப்பான்." அதாவது சுயநல மயத்தில் முடிவடையும்.

அப்படியாளுல், சமூக ஜனநாயகக் கொள்கை யினருடன் சேர்ந்து, சட்டப் பூர்வமான முறைகளை மட்டுமே நாம் கையாள

வேண்டுமா? ஸ்காண்டினேவியன் நாடுகளைப்போன்ற உண்மையான ஜனநாயக நாட்டில் நாம் இருந்தால், அனேகமாக நான் "ஆமாம்" என்ற பதில்,தந்திருப்பேன். அப்படிச் சொல்லுவதின் மூலம் கார்ல் மார்க்ஸையே நான் பின்பற்றி யிருப்பேன். இங்கிலாந்து, அமெரிக்கா, ஹாலந்து போன்ற ஜனநாயக நாடுகளில் சட்டதிட்ட மாறுதல்களினால் சோஷலிஸ சமுதாயத்தை ஸ்தாபிப்பது சாத்தியம் என்று மார்க்ஸ் கூறி யிருக்கிறார். ஆனால், உலகில் பெரும் பகுதியில் ஜனநாயகமில்லை. இந்நாட்டில் நமக்கு ஜனநாயகத்தின் சாயைகூட இல்லை; தனி நபர் சுதந்தரம் துளியேனும் இல்லை

புதிய ஆயுதங்கள்

எனவே, நம்மைப்போன்ற நிலைமையில் உள்ளவர்களுக்கு இருக்கும் பிரச்னை இதுதான்: விறுவிறுப்பான, ஆனால் அதே சமயத்தில் சர்க்காரை அடிதடியில் கைப்பற்றுவதில் உள்ள பலாத்காரமின்றி--இந்த பலாத்காரத்தால் சர்வாதிகார ஆட்சிதான் ஏற்படும்—சமூகத்தில் மாறுதலைக் கொண்டுவர ஒரு முறையை நாம் வகுக்கவேண்டும். இங்கேதான் அரசியல் சிந்தனை விருத்திக்காக மகாத்மா காந்தியின் சில சாதனைகளைக் காண்கிறோம். தான் விரும்பும் சமூக மாறுதல்களைச் செய்வதற்காக மேலும் திறமையான ஆயுதங்களைச் சேகரிக்கவும், புதிதாகச் செய்யவும் பிரியப்படுகிற ஒவ்வொரு சோஷலிஸ்டும் அந்தச் சாதனைகளை நன்றாக ஆராய வேண்டும்.

காந்திஜியின் உபதேசங்கள் பொருளாதாரச் சிந்தனையின் திட்டமான, நல்ல கட்டுக்கோப்பான முறையாக இல்லை. அவற்றை அப்படியே நாம் ஒப்புக்கொள்ள வேண்டிய அவசியமுமில்லை. ஆனால், காந்திஜி எப்பொழுதும் பொருளாதார சமத்துவத்தின் முக்கியத்துவத்தை வற்புறுத்தி வந்திருப்பதை நாம் கவனிக்க வேண்டும். " இந்த (நிர்மாண)த் திட்டம் பூராவும் பொருளாதார சமத்துவத்தை அஸ்திவாரமாகக் கொண்டிராவிட்டால், வெறும் மண்ணின்மேல் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடமாகவே விளங்கும்" என்று அவர் சொல்லி யிருக்கிறார்.

நமது லட்சியத்தையடைய நாம் உபயோகிக்கவேண்டிய சாதனங்களைப் பொறுத்தவரை, காந்திஜி சில வழிகளைக் காண்பித்திருக்கிறார் என்று நான் நம்புகிறேன். அவர் காண்பித்த வழிகளில் முதன்மையானது, மகாஜன சட்ட மறுப்பு. அந்த மகாஜன நடவடிக்கை, வரையறையுள்ளது. சட்டங்களால் ஏற்பட்ட வரையறை இல்லை அவை; ஆனால், அப்பழுக்கில்லாத அஹிம்ஸா முறைகளைத்தான் கையாளவேண்டுமென்ற கண்டிப்பால் ஏற்பட்டவை. இந்த முறையின் முக்கியமான குணவிசேஷம், கருத்து மாறுபடுகிற எதிரிகளைப் பலாத்காரமாக ஒழிக்கும்

வேலை இல்லாதது என்பதில் இல்லை (இப்பேர்ப்பட்ட ஒழிப்பு இல்லாததும் நன்மைதான்); ஆனால், ஜனநாயகமற்ற சக்திகளுடன் போர்புரிகையில்கூட ஜனநாயகச் சூழ்நிலையை நிலைநாட்டும் தன்மை இந்த முறையில் இருப்பதுதான். ஜனநாயகம் ஆனது ஒரு வழி முறை மாத்திரமல்ல, அது ஒரு பழக்க வழக்கம் என்ற மகத்தான உண்மையையும் அஹிம்ஸா மார்க்கம் நிரூபிக்கிறது. சட்ட மறுப்பு ஒரு குறிப்பிட்ட சமயத்தில் தோல்வியுற்றால் கூட, சொந்த அனுபவத்தின் மூலம் நாம் கண்டுவருவது போல, பலாத்காரப் புரட்சி ஒடுக்கப்பட்டவுடன் ஏற்படுகிற சீர்குலைவைத் தவிர்க்கிறது. பலாத்காரமாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதால், பலாத்காரம் பழக்க வழக்கமாகி விடக்கூடும்; ருஷ்யாவில் நடந்ததைப்போல, எந்த நோக்கத்துடன் புரட்சி செய்யப்படுகிறதோ அந்த நோக்கமே பறந்துவிடும் என்ற வாதத்தை ஒப்புக்கொண்டால், இது விஷயத்தில் காந்திய வழியே இந்தத் தேசத்தின்—வோட்டுப் பெட்டி மூலம் ஆட்சி முறையை மாற்ற முடியாமலும், துப்பாக்கிகளைத் தவிர்க்க வேண்டியும் உள்ள இந்தத் தேசத்தின்—தேவைகளுக்கு ஏற்றதாகும் என்ற முடிவுக்கு வருவதைத் தவிர வேறு வழியில்லை. சோஷலிஸமின்றி உண்மையான ஜனநாயகம் சாத்தியமில்லை என்று சோஷலிஸ்ட் இவ்வளவு காலமாகத் தர்க்கம்செய்து வந்தான். இப்பொழுது காந்திஜி, அஹிம்ஸா சமூகத்தில் இன்றி வேறு எந்தச் சமூகத்திலும் ஜனநாயகமோ அல்லது சோஷலிஸமோ சாத்தியமில்லை என்று சுட்டிக்காட்டுகிறார்.

கிராமாந்திரப் பொருளாதாரம்

மற்ருெரு முக்கிய விஷயத்தை நமது கவனத்திற்குக் காந்திஜி கொண்டுவந்திருக்கிருர். அதாவது, பொருளாதாரம், மத்திய ஸ்தலங்களில் திரட்டப்பட்டு இல்லாமல், அங்கங்கே இருக்கவேண்டும் என்கிருர். அவரது உபதேசத்தின் இந்தப் பகுதி, "கிராமங்களுக்குச் திரும்பிச் செல்க" என்ற தலைப்பில் இருந்து வருகிறது. இதற்குக் கண்டனங்களும் நிறைய வந்திருக்கின்றன.

இந்த விஷயத்தில் காந்திஜியின் மனப்பான்மை பற்றி சோஷலிஸ்டுகள் எந்த மனப்பான்மையை மேற்கொள்ள வேண்டும்? அவர் பழம் பசலி, எல்லா யந்திரங்களையுமே பலமாக எதிர்க்கிறவர், பண்டைய பாழ் நிலைக்கு நம்மைக் கொண்டுபோக முயலுகிருர் என்று கருதுவதா? அப்படியாஞல், முக்கியமான பெரிய கைத்தொழில்களைத் தேசிய மயமாக்க வேண்டும் - அதாவது, சர்க்காரே நடத்தவேண்டும் - என்று அவர் சொல்லுவதற்கு என்ன சமாதானம் சொல்லுவது? "மெஷின்கள் பால் உள்ள மோகத்தையே நான் ஆட்சேபிக்கிறேன்; மெஷின்களை நான் ஆட்சேபிக்கவில்லை" யென்று காந்திஜி சொல்லியிருக்கிருர். "கைராட்டையே நேர்த்தியான ஒரு மெஷின்தானே" என்று கூறியிருக்கிருர். 1935-ம் வருஷம் ஜூன் 22-ந் தேதி "ஹரிஜன்" இதழில் அவர் பின்வருமாறும் எழுதியிருக்கிருர்: "ஒவ்வொரு கிராம வீட்டுக்கும் மின்சார சக்தி கிடைக்குமாஞல் கிராம மக்கள் தங்கள் கருவிகளை மின்சாரத்தால் ஓட்டுவதை நான் ஆட்சேபிக்க மாட்டேன்."

"ஒரு சிலரின் கையில் அதிகாரமும் செல்வமும் திரண்டு வருவதற்காக மெஷின்களை உபயோகிப்பது பாபம், அநீதி என்று நான் கருதுகிறேன். இன்று மெஷின்கள் இந்தவகையில் தான் உபயோகிக்கப் படுகின்றன," என்று மகாத்மாஜி 'நவஜீவனி'ல் 1925-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 20-ந் தேதி எழுதியிருக்கிருர். இதில் ஏதேனும் ஒரு வார்த்தையையாவது ஒப்புக்கொள்ள எந்த சோஷலிஸ்டேனும் மறுக்க முடியுமா? எனவே,

காந்திஜி பெருவாரியான இயந்திர மயத்திலும் கைத்தொழில் மயத்திலும் அனுதாபம் காட்டாதிருப்பதற்கு, இயந்திரத்தை முதலாளிகள் உபயோகப் படுத்துவதை அவர் ஆட்சேபிப்பது ஒரு காரணமாகும். மேலும், சமூக விரோதப் போக்கைத் திருத்தும் எண்ணமும் மகாத்மாவுக்கு இருக்கிறது. முதலாளித்துவத்தின் அவ்விதப் போக்கின் விளைவுகள் சமூக விரோதமாகவும் ஜனநாயக விரோத மாகவும் இருக்கின்றன என்பதை மேல்நாட்டு சோஷலிஸ்ட் நிபுணர்கள்கூட இப்பொழுது உணர ஆரம்பிக்கிறார்கள். லூயி மம்போர்டு எழுதிய **Technics and Civilisation** (தொழில் நுணுக்கமும் நாகரிகமும்), **The Culture of Cities** (நகரப் பண்பாடு) என்ற இரண்டு அருமையான புஸ்தகங்களையும் படிக்கிறவர்கள், பெரிய தொழிற்சாலைகளும் பெரிய நகரங்களும் இக்காலத்திற் கேற்றவையல்ல என்ற முடிவுக்கு அந்த ஆசிரியர் வந்திருப்பதைப் பரிபூரணமாக ஏற்றுக்கொள்வார்கள். இந்தத் தீமைகளை அவர் ராட்சசியம் (**Giantism**) என்று வர்ணிக்கிறார். இது 19-ம் நூற்றாண்டின் தொழில் நுணுக்க அபிவிருத்தித் தரத்தின் ஞாபகச் சின்னமாக அழிந்தும் அழியாமலும் இருந்துவருகிற மிச்சம் மீதி என்று அவர் சொல்லுகிறார். மின்சாரம், ஒரேதர உற்பத்திச் சாத்தியம் ஆகிய இரண்டும் சமீபக்கால விஞ்ஞானத்தின் இரண்டு சாதனைகள்; அவற்றால் தோட்டமும் தோப்புகளும் உள்ள சின்னஞ் சிறு நகரங்கள் கிராமாந்திரங்களில் தோன்றவும், அங்கே சிறிய தொழிற்சாலைகள் திறம்பட வேலைசெய்யவும் முடியும்; இந்தத் தொழிற்சாலைகள், முழுச்சாமான்களையும் உற்பத்திசெய்ய முடியும்; கிராமச் சமூகத்தின் ஆரோக்யமும் குன்றாதிருக்கலாம் என்கிறார் லூயி மம்போர்டு. இந்த முடிவை அமெரிக்கத் தற்காலிகத் தேசியப் பொருளாதாரக் கமிட்டியின் (1941-ம் வருஷ) அறிக்கையும் ஆதரிப்பதாக இருக்கிறது. "பெரிய பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தியாகிறவையே உயர்ந்த ரகமானவை என்பது இன்னும் நிரூபிக்கப்படவில்லை" என்கிறது அந்த அறிக்கை.

ஏற்கெனவே ஜி. டி. எச். கோலின் வாக்கியங்களிலிருந்து மேற்கோள் காண்பிக்கப்பட்டபடி, இப்போதைய மனித அறிவு வளர்ச்சியை முன்னிட்டுக் கூட்டுறவு முறையில்

கிராமாந்திரங்களில் கைத்தொழில்களை நடத்தினால், லெனின் கண்ட கனவுப்படி, "சாதாரண மனுஷ்யனின் எல்லைகளை இன்னும் அவனுக்கு நெருங்கக் கொண்டுவந்தால் சுயேச்சையான, சமத்துவ சமூகம் ஏற்படும்." கைத்தொழில்களை மத்ய ஸ்தலங்களில் திரட்டிவைப்பதால் ஏற்படக்கூடிய அதிகாரவர்க்க அபாயத்தையும், சர்வாதிகார ஆட்சி அபாயத்தையும் தவிர்க்கலாம். 'ஆள்கிறவன்—ஆளப்படுகிறவன் என்பது சோஷலிஸத்தால் எவ்வளவுக் கெவ்வளவு மனிதர்களின் மனதிலிருந்து போக்கப் படுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு சோஷலிஸம் சிறிய பிரதேச நிர்வாகங்களில்—கட்டுதிட்டத்திற்குள் அடக்கிவிடக் குறைவாகச் சந்தர்ப்பமும், சுயேச்சையான ஒத்துழைப்புக்கு அதிகச் சந்தர்ப்பமும் உள்ள இடங்களில்—வெற்றிபெறும். மேலும், இரண்டாவது உலக யுத்தத்தில், முக்கியப் பிரதேசங்களில் அத்யாவசியக் கைத்தொழில் இலக்குகள் மீது பயங்கரமான விமானத்தாக்குதல்கள் நடைபெற்றதால், பெருவாரியான கைத்தொழில்களைப் பாதிக்கும் புதிய தொழில் நுணுக்க, இட முக்யத்துவப் பிரச்னைகள் பல முன்னணிக்கு வந்திருக்கின்றன. வெடிகுண்டு வீச்சுக் காலம், சிறிய கைத்தொழில் ஸ்தலங்களைக் கிராமங்களில் ஏற்படுத்த ஹேதுவான வழியை உண்டாக்குகிறது போலும். காந்திஜி பழம் பசலியல்ல என்பதோடல்லாமல், இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் மேல்நாட்டுச் சிந்தனையாளர்களையும் முந்திக் கொண்டார் என்றே பிற்பாடு போற்றப்படுவார். ஒருவேளை அவர், மானேஜரியல் சமுதாயத்திலிருந்து தப்ப வழி காட்டியவராகவும் விளங்கக்கூடும். இந்த வழிதேடுவதில், மேல்நாட்டுச் சூழ்நிலையை மாத்திரம் உணர்ந்த பர்ன்ஹாம் தோல்வியுற்றிருக்கிறார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இடைக்காலம்

இப்போதைய நிலையிலிருந்து, சோஷலிஸ்ட் சமுதாயத்தை யடையும் வரை இருக்கவேண்டிய இடைக்காலத்திற்கு என்ன ஏற்பாடு செய்வது? சிறுவாரியான உற்பத்தி ஸ்தலங்களை ஏற் படுத்துவதைப் பெரும்பகுதியாகக் கொண்ட பொருளாதார முறையை அமுலுக்குக் கொண்டுவர அஹிம்ஸா நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதால் நிகழும் மாறுதல்களின் தன்மை, வைதீக சோஷலிஸ்ட் தத்துவக்காரர்கள் எதிர்பார்ப்பதைவிட வேறு தினுசாகத்தான் இருக்கும். அந்த வித்தியாசங்களில் ஒன்று, சொத்துடைமையின் பாலுள்ள — மனிதர்கள் — பொருள்கள் உறவின்பால் உள்ள - மனப்பான்மை யாகும். அந்த உறவில் புரட்சியை உண்டாக்க சோஷலிஸம் முயலுகிறது. இன்று முக்கியமானது சொத்துக்கு யார் சொந்தக்காரர் என்பதல்ல. உற்பத்திக் கருவிகள்மீது சர்க்கார் கட்டுப்பாடு எவ்வளவுக்கு இருக்கிறதென்பதே முக்கியம். இதை ஏற்கனவே கண்டிருக்கி றோம். வர்க்கமற்ற சமூகத்தை ஸ்தாபிக்காமலேயே பொருளா தாரம் முழுமையும் ருஷ்யாவில் தேசிய மயமாக்கப் பட்டிருப்பதை யும் அறிவோம். சொந்த உடைமைகளை யெல்லாம் பறிமுதல் செய்வதற்குப் பதிலாகக் காந்திஜி புதியவழி ஒன்று சொல்லுகிறார். அதுவே தர்மகர்த்தா முறை (Trusteeship). சொத்துக்களின் சொந்தக்காரர்கள், சமூகத்தின் நன்மைக்காகச் சொத்துக்களின் தர்மகர்த்தாக்களாக இருக்க வேண்டுமென்கிறார் மகாத்மா. அதைச் சாதிக்கத் தார்மீக நயவார்த்தைகளையும் சர்க்கார் நிர்ப் பந்தத்தையும் உபயோகிக்கலாம். அதைப்போலத் தர்மகர்த்தாக் களுக்கு அனுமதிக்கப்படும் வருமானம், அப்போதுள்ள குறைந்த பட்ச வருமானத்தைக் காட்டிலும் பன்னிரண்டு பங்குக்குமேல் இருக்கலாகாது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

சொத்துக்காரர்களிடையே மனமாற்றம் ஏற்பட முடியும் என்ற நம்பிக்கை பலமாகத் தாக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு நான்கூடத் தாக்கி யிருக்கிறேன். உலக முதலாளித்துவம் செய்

துள்ள குளறுபடிகளைக் காண்கிற யாரும், முதலாளி தர்மகர்த்தா வாக ஆவான் என்ற நினைப்பைக்கண்டு ஆச்சர்யப்படுவார்கள். அங்கு தடையற்ற சுயேச்சையான வர்த்தக முறை உள்ள சமுதா யத்தில் முதலாளி கட்டுப்பாடற்ற ஏஜண்டாகவும் தனது யுக்தானுசாரத்தையும் அதிகாரத்தையும் தன் இஷ்டப்படி உபயோ கிக்கும் நிலையிலும் இருந்தால் விமோசனம் ஏற்படுமென்று நாம் நம்பிக்கை கொள்ளுவதற்கில்லை. ஆனால், அவ்வாறு இஷ்டப்படி நடக்கக் காந்திஜியின் முதலாளித்துவ 'தர்மகர்த்தா'வுக்கு அதிகார மிருக்காது.

'தர்மகர்த்தா' முறையின் அர்த்த புஷ்டிகளை நன்ருகப் பரி சீலனை செய்துபார்த்தால், அந்தக் கோஷம் சுட்டிக் காட்டும் விஷயத்தைக் குறிப்பாக அறிந்து கொள்ளலாம். சட்டப்படி' டிரஸ்டி முறைக்கு வியாக்யானம்: அ என்பவர் சொத்துக்குச் சொந்தக்காரர்; ஆனல் சொத்தை இ என்ற தர்மம் பெறுகிறவ ருடைய நலனுக்காக உபயோகிக்கக் கடமைப்பட்டிருக்கிருர்.

அ என்ற தர்மகர்த்தா சட்டப்படி சொத்துத் தன்னுடைய தாக இருக்கிறதென்று, சுயநலத்திற்காக அதை உபயோகிப்பதின் மூலம் துஷ்பிரயோசனம் செய்தால், அவரிடமிருந்து சொத்தைச் சட்டம் பறித்துவிடும்.

பட்டவர்த்தனமாகச் சொல்லுவதென்ருல், அ வின் சொத்து உரிமைகளெல்லாம் ஏட்டுச் சுரைக்காய்தான். இதைப் பொது வாகச் சொத்துச் சொந்தக்காரர்களுடைய உரிமைகளில் அனுஷ் டானத்திற்குக் கொண்டுவந்தால், இப்போதைய சொத்துச் சொந்தக்காரர்கள் சமூகம் பூராவின் நலனுக்காகவும் லாபத்திற் காகவும் சொத்தை உபயோகிக்கவேண்டும் என்ற நிபந்தனையின் பேரில்தான், சொத்துச் சொந்தக்காரர்களாக நீடித்திருப்பார்கள். பிரதானமாகச் சொந்த லாபத்திற்காகத் தனது சொத்தை உபயோ கிக்கிற சொந்தக்காரர், நம்பிக்கைத் துரோகக் காரணத்திற்காகச் சொத்து உடைமையிலிருந்து நீக்கப்படுவார். சுருங்கச் சொல்லுவ தென்ருல், முதலாளியின் அதிகாரம் ஒடுக்கப்பட்ட முறையே தர்ம கர்த்தா முறை. சொத்துரிமைகளுக்கு முதலாளித்வ வியாக்யா னம் அனைத்தையும் தர்மகர்த்தா முறை நிராகரிக்கிறது. சர்க்கார் சொல்லுகிற பொருளை, சர்க்கார் சொல்லுகிற அளவுக்குத் தனது

தொழிற்சாலையில் சொந்தக்காரர் உற்பத்தி செய்தாகவேண்டும். சர்க்கார் சொல்லுகிற சம்பள விகிதத்தையே அவர் தமது தொழிலாளர்களுக்குத் தரவேண்டும்; சர்க்கார் நிர்ணயிக்கும் விலைகளுக்கே தமது பொருள்களை விற்கவேண்டும். அவருக்குக் கிடைப்பதெல்லாம் ஐந்து அல்லது ஆறு சதவிகித லாபப் பிரிவினை தான். இப்படிச் சொத்துக்குச் சொந்தக்காரராக இருக்கிறவருடைய நிலைமை, சோவியத் ருஷ்யாவில் "தேசிய மயமான" கைத்தொழிலில் கிடைக்கும் லாபத்தில் ஏழு சதவிகித வட்டியைப் பெறுகிற சர்க்கார் பத்திரங்களின் சொந்தக்காரர்களுடைய நிலைமையை விடக் குறிப்பிடத்தக்க அளவுக்கு மாறுபட்டு இருக்கிறதா, என்ன? குறைந்தபட்ச வருமானத்தைவிட 12 பங்கு தர்மகர்த்தாவுக்கு இருக்கவேண்டுமென்று காந்திஜி சொல்லுகிறார். ருஷ்யாவிலோ 80 பங்கு தரப்படுகிறது. எனவே 80-1 ஐக் காட்டிலும், 12-1 மிகவும் சிலாக்கியமல்லவா? பசப்பு வார்த்தைகளைத் தவிர்க்கிற ஒவ்வொருவரும், பிரஸ்தாப விஷயத்தில் ருஷ்ய நிலைமைக்கும், காந்திஜியின் தர்மகர்த்தா முறை நிலைமைக்கும் அதிக வித்யாசமில்லை யென்பதைக் கண்டுகொள்ளலாம். சோஷலிஸ்டின் வெறும் கனவு உலகத்தையடையும் மார்க்கத்திலுள்ள இடைக்காலக் கட்டமாகத் தர்மகர்த்தா வழி இருப்பதாகக் கருதுகிறவர்களுக்கு எனது பதிலைக் கீழ்க்காணும் கேள்வி மூலம் தருகிறேன்: "சோவியத் சர்வாதிகார ஆட்சியும் சோஷலிஸ்ட் சொத்தின் தர்மகர்த்தா தானே என்று சொல்லவில்லையா? சர்வாதிகார ஆட்சியானது தனது வேலை முடிந்த பிறகு தானாக மடிந்துவிடும், ஜனநாயகம் மீண்டும் நிலைநாட்டப்படும் என்று எதிர்பார்ப்பது, நனவாக முடியாத கனவல்லவா?" இரண்டிலும், காந்திஜியின் நம்பிக்கையே தைர்யமிக்கது என்று என் மனதுக்குப் படுகிறது.

மார்க்ஸிஸ்டுகளில் அனேகர் தங்கள் வீண் கனவைக் குறியாகக் கொண்டு டிரஸ்டிமுறை யோசனையை நிராகரிக்கிறார்கள் அந்தக் கனவை லாரட் சரியாகக் கண்டித்திருக்கிறார்:

"முதலாளித்துவ உலகம் ஒரு குறிப்பிட்ட தினத்தின் குறிப்பிட்ட நேரத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்

கிறது; அந்த நேரம் வந்ததும் பாட்டாளி மக்கள் தங்கள் முழுபலத்துடன் வீறுகொண்டு எழுவார்கள்; தங்கள் எதிரிகளுக்குப் பேயறை கொடுத்து அவர்களை அடக்குவார்கள்; சோஷலிஸ்ட் சமுதாயத்தை நிர்ணயிப்பார்கள் என்றெல்லாம் அக்கனவு காண்போர் சொல்லுகிறார்கள்.......முதலாளித்துவக் காலத்திலிருந்து சோஷலிஸக் காலத்தைப் பிளக்கும் சமயம் இருக்கத்தான் செய்யும். ஆனால், அந்தச் சமயம் ஒரு குறிப்பிட்ட தினமாகவோ, நேரமாகவோ இருக்கமுடியாது. அந்தச் சமயம்—இடைக்காலம்—பல தலைமுறைகளுக்கு நீடிக்கலாம். சோஷலிஸத்தை நோக்கி முன்னேறுவதென்றால், படிப்படியாக சோஷலிஸம் அமுலுக்கு வருமென்றாகும் என்பதை நாம் ஒப்புக்கொள்ளுவதென்றால், சோஷலிஸத்தை அமுலுக்குக் கொண்டுவரப் பக்குவமாகாத பிரதேசங்களில் முதலாளித்துவச் சொத்து விட்டுவைக்கப்படும் என்றாகிறது. அந்தப் பிரதேசங்களில் முதலாளித்துவத்தின் ஆயுள் முடிய இன்னும் நிரம்பக் காலமாகும். இப்பேர்ப்பட்ட நிலைமையில் அதை முதலாளித்துவம் என்று பழைய அர்த்தத்திலேயே அழைக்கலாமா என்பதையும், அன்று உள்ள பொருளாதார முறைக்கு 'முதலாளித்துவம்' என்ற பதம் எவ்வளவு தூரம் பொருந்தும் என்பதையும் அறிய வேண்டியிருக்கிறது.''

முதலாளித்துவ முறை இதைப்போலப் படிப்படியாக மாறுமென்பதை யூகித்துத் தமது ''மூலதனம்'' (Capital) என்ற புஸ்தகத்தில் கார்ல் மாக்ஸ் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

''இது முதலாளித்துவ உற்பத்திக்குள்ளேயே முதலாளித்துவ உற்பத்தி விதத்தை ஒழிப்பதாகும். தன்னைத்தானே நிர்மூலமாக்கிக் கொள்ளும் தன்மைவாய்ந்த முரண்பாடு...... இது தனிஉடைமைமீது கட்டுப்பாடு இல்லாத தனி உற்பத்தியாகும்...... இது முதலாளித்துவ உற்பத்தி வித வரையறைக்குள் தனி உடைமையை ஒடுக்குவதாகும். முதலாளித்துவ ஸ்டாக் கம்பெனிகளையும் கூட்டுறவுத் தொழிற்சாலைகளையும், முதலாளித்துவ உற்பத்தி விதத்திலிருந்து கூட்டு

உற்பத்தி விதத்திற்குச் செல்லுமிடையேயுள்ள இடைக்கால ஏற்பாடுகளாகக் கருதலாம். இரண்டுக்கு மிடையே ஒரு வித்யாசமுண்டு. ஒன்றில் எதிர்ப்பானது 'இல்லை' என்பதின் மூலம் சமாளிக்கப்படுகிறது ; மற்றென்றில் ஏற்றுக் கொள்ளப்பட்டுப் பரிகாரம் செய்யப்படுவதின் மூலம் சமாளிக்கப்படுகிறது."

மார்க்ஸ் சொன்னது குறித்து லாரட் பின்வருமாறு அபிப்ராயம் எழுதுகிறார் :

"மார்க்ஸ் கூறும் இடைக்கால முறைகள் அவரது காலத்தில் அற்ப சொற்பமாக இருந்தன. சரியாக உருவாகவில்லை. ஆனால், இன்றையப் பொருளாதாரத்தில் அவை தலைதூக்கி நிற்கின்றன. நாம் புதிய உற்பத்தி முறையை அடையும் மார்க்கத்தில் முழு வேகத்துடன் முன்னேறுகிறோம். இன்று சோஷலிஸம் ஸ்தாபிக்கப்பட்டுவரும் ஒரு தத்துவமாக இருந்து வருகிறது."

ஆனால், இதிலிருந்து தேசிய மயமாக்கும் முறையை (சர்க்காரே நடத்துதல்) புறக்கணிக்கவும், தர்மகர்த்தா முறையைப் பிரமாதமாக ஆதரிக்கவும் காரணமிருக்கிறதென்று நான் சொல்லுவதாக நினைக்கக்கூடாது. சோஷலிஸ்ட் சமுதாயத்தை அடைவதற்காகக் கடக்கவேண்டிய இடைக்காலத்தில், மனிதர்களுக்கும் பொருள்களுக்கும் உள்ள உறவின் பல்வேறு விதங்கள் பொருளாதார வாழ்க்கையின் பல்வேறு பகுதிகளில் அமுலில் இருக்கும். சர்க்கார் உடைமை, முனிசிபல் உடைமை, கைத் தொழில், விவசாய உற்பத்தியாளரின் கூட்டுறவுகள் அல்லது கில்டுகள் அல்லது ஸின்டிகேட்டுகள் முதலியவை அந்தப் பல்வேறு பகுதிகளாகும்.

எவ்வளவுக்கெவ்வளவு கட்டுப்பாடுகளும் நிதானமான ஏற்பாடுகளும் இருக்கின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு நல்லது. அமெரிக்க அரசியலமைப்பை வகுத்தவர்கள், சுதந்தரத்தைப் பாதுகாப்பதற்காக அரசியல் கட்டுப்பாடுகள், நிதானப் போக்கு ஏற்பாடுகள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் காண்பித்த விவேகத்தை நாம் பொருளாதாரத் துறையில் உபயோகித்துக் கொள்ளலாம். தர்மகர்த்தா முறையின் விசேஷம் வேறு வழியின்றி அதுவே இறுதி முறையாக இருப்பதல்ல இல்லை ; இடைக்கால முறையாக

இருக்கக்கூடிய வகையில் வளைந்து கொடுக்கும் தன்மை அதில் இருப்பதிலேயே விசேஷ மிருக்கிறது. அது, கெட்ட காரியம் செய்கிறவனை ஒழிப்பதற்கு முன்னால் அவனுக்குத் தார்மீக வழியைப் போதிக்கிறது; சமூகத்திற்குப் பாதகமாகச் சொத்து உபயோகிக்கப்படுவது தவறு என எடுத்துக்காட்டி, தவற்றைப்போக்க முயலுகிறது. தர்மகர்த்தா முறை வேறு எதையும் செய்யவில்லையென்றாலும்கூட, சமூகமாறுதல்களுக்கு உள்ள எதிர்ப்பையாவது பலவீனப் படுத்துகிறது. லட்சியத்தை நாம் அடையும் மார்க்கத்தில், அது இப்படித்தான் நடக்கும், அது அப்படித்தான் நடக்கும் என்ற பிடிவாத ஊகங்களை அவசியமானபோது கைவிட்டு, புதிய பரீட்சார்த்த வழியைப் பின்பற்றியும் பார்க்கவேண்டும் என்று தர்மகர்த்தா முறை போதிக்கிறது.

அரசியல், பொருளாதாரச் சிந்தனைக்குக் கார்ல் மார்க்ஸின் சாதனைகள் மகத்தானவை. அவரது அறிவு ஊற்றிலிருந்து பல்வேறு சோஷலிஸ்டு கோஷ்டிகள் வயிறாரக் குடித்திருக்கிறார்கள். சரித்திரத்தில் அவரது போதனைகள் சாசுவதமாக இருக்குமென்றே எதிர்பார்க்கலாம். ஆனால், இதை முன்னிட்டு அவருடைய போதனைகளை, மத தீர்க்கதரிசியின் உபதேசத்தைத் சர்ச் (Church) செய்வதுபோல, பிடிவாதக் கோட்பாடுகளாக மேற்கொள்ள வேண்டுமென்ற கட்டாயமில்லை. அவ்வாறு மேற்கொள்ளுவதே, பெரிய மனுஷ்யனின் ஆத்மாவை ஒழித்துக்கட்டச் சரியான வழியாகும். "மார்க்ஸ் சற்றும் எதிர்பாராத அளவுக்குக் கைத்தொழில் முறைகளில் புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டிருக்கிறது." மார்க்ஸின் உபதேசத்தைப் பிடிவாதக் கோட்பாடாக்குவது, புதிய மதத்தை—மக்களின் அபினி என லெனின் வர்ணித்தது போன்ற மதத்தைச்—சிருஷ்டிப்பதாகும். அதைப்போலப் பிடிவாதக் கோட்பாடாக மேற்கொள்ளுவதில் உள்ள அபாயத்தை மார்க்ஸே உணர்ந்திருந்தார் என்பதற்கு அவரே தமது வாழ்நாள் முடிவாகும்போது, "நல்லவேளை நான் மார்க்ஸிஸ்ட் அல்ல. ஆண்டவனுக்கு நன்றி"! என்று சொன்னதிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். இன்று நாம் மார்க்ஸிஸ்டுகளாகவோ அல்லது காந்தியர்களாகவோ இருக்கவேண்டிய அவசியமில்லை; அப்படி இருப்பது விரும்பத் தக்கதுமில்லை. நாம் சோஷலிஸ்டுகளாக

மாத்திரம் இருந்து, "திறமைக்கு ஏற்றவேலை செய்வது; தேவைக்கு ஏற்ற ஊதியம் பெறுவது" என்ற தத்துவத்தை அடிப்படையாகக்கொண்ட சுதந்தர, ஜனநாயக, வர்க்கமற்ற, சர்வதேச சமுதாயத்தை நிலைநாட்டும் நோக்கம் மாத்திரம் கொண்டிருந்தால் போதாதா? அந்த லட்சியத்தை யடைவதற்காக உதவி செய்ய நாம் முயலுகையில், மகாத்மா காந்தியோ அல்லது வேறு எந்தச் சிந்தனையாளரோ செய்யும் உபதேசம் பிரயோசனமாக இருந்தால், அதை நாம் நமது சோஷலிஸ தத்துவத்திலும அதை அடையும் சாதனங்களிலும் சேர்த்துக்கொள்ளுவதின் மூலம் அவரைப் போற்றுவோமாக. மார்க்ஸ் நமக்கு ஒரு நூற்றுண்டுக்கு முன் தந்த யோசனைகள் எவ்வளவுக்கு இன்று பொருத்தமாக இருக்கின்றனவோ அவ்வளவுக்குக் காந்திஜி அல்லது வேறு எந்தச் சிந்தனையாளரின் உபதேசங்களும் இன்று பொருத்தமாக இருந்தால், இவற்றையும் நன்ருக நாம் கிரகித்துக் கொள்ளலாம். கொள்கைகள் எல்லாம் இப்பொழுது "கொண்டிருந்தவை" களாகி விட்டனவென்று கிண்டல்காரர் ஒருவர் சொல்லியிருக்கிருர். சோஷலிஸ்டுகள் அடிக்கடி தங்கள் ஊகங்களை, மீண்டும் மீண்டும் பரிசீலனை செய்து, புதிய, ஸ்திரமான அஸ்திவாரங்களை அடிப்படையாகக் கொண்டு தங்கள் லட்சியத்தையடைய மீண்டும் பிரதிக்ஞை எடுத்துக்கொள்ளாவிட்டால், அந்தக் கிண்டல்கார[ரி]ன் வார்த்தைகள் உண்மையாகிவிடக்கூடும்.

சக்தி வெளியீடுகள்

பிளேட்டோ அரசியல் வெ. சாமிநாத சர்மா 6–0

இதில் அரசியலின் ஒவ்வொரு பிரிவும் வெகுதெளிவாகச் சம்பாஷணை மூலம் விளக்கப்பட்டிருக்கிறது. தேசத்திற்கும் மக்களுக்குமுள்ள தொடர்பு; எந்த மாதிரியான மக்களுக்கு எத்தகைய அரசியல் இருக்கவேண்டும்; நீதி வழங்குதல் என்றால் என்ன? ஆதர்ஸ தேசத்தை எப்படி ஏற்படுத்துவது? என்பன போன்ற விஷயங்கள் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

சோவியத் ருஷ்யா ,, 4–8

உலகத்திலேயே ஒரு புதுமையான புரட்சி மூலம், புதுமையான வாழ்வு நடத்தும் சோவியத் ருஷ்யாவின் புரட்சிச் சரித்திரம், புதுமை வாழ்க்கை, யுத்தத் தலையீடு, யுத்தத்தில் வெற்றி முதலிய சகல விவரங்களையும் விரிவாக - அருமையாக நல்ல ஆராய்ச்சியோடு இந்த இரண்டாம் பதிப்பில் ஆசிரியர் எழுதியிருக்கிறார்.

டால்ஸ்டாய் கதைகள் கு. ப. ரா., ரா. விசுவநாதன் 4–0

டால்ஸ்டாயின் கதைகள் 14 அடங்கி யிருக்கின்றன. இந்தக் கதைகளைப்போல் இதுவரை தோன்றியதுமில்லை, இனித் தோன்றப் போவதுமில்லையென அறிஞர் பலர் கூறுகின்றனர்.

ய்கறித் தோட்டம் மு. அருணாசலம் 5–0

காய்கறித் தோட்டப் பராமரிப்பு சம்பந்தமான நூல். எங்கெங்கு, எந்தெந்தவிதமான கறிகளைப் பயிரிடலாம்; செடி கொடிகளுக்கு நோய் வந்நால் அதைத் தடுப்பது எப்படி? தோட்டத்தை அழகாய் வைத்துக் கொள்ளும் முறை முதலியனவற்றை விவரிக்கிறது.

கொலு மஞ்சேரி எஸ். ஈச்வரன் 3–0

ஒன்பது கதைகள் அடங்கிய ஒரு சிறுகதைத் தொகுதி. ஒவ்வொன்றும் உணர்ச்சிக் குவியலிலே பூத்த மனோ தத்துவ மலர் போன்றது. இனிய குணச் சித்திரங்கள்.

சக்தி காரியாலயம்

சென்னை - மதுரை - கோயமுத்தூர் - திருநெல்வேலி

உயர்தரமான நகைக

மணப் பெண்களுக்கு வேண்டிய அழ
கழகான கண்டசரம், தோடு, மோதிரம்,
காப்பு முதலியன நாங்கள் செய்து
கொடுக்கிறோம்.

பி. ஏ. ராஜு செட்டியார் & பிரதர்
வைரம், தங்க நகை வியாபாரிகள்
கோயமுத்தூர்

நயமான வேலைப்பா

தந்தி
போன்